# பம்பாய்த் தமிழ்ச் சங்கம்




# நாடக விழா மலர் 197



எல்லோரும்
இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன்
பராபரமே!

ஆனந்த விகடன் · 151 மவுண்ட் ரோடு · சென்னை 2

*With Best Compliments*

*from*

**HITEX EMBROIDERY PRIVATE LTD.**

**Manufacturers & Exporters**

**Factory :**
Hitex Industrial Estate,
Swami Vivekanand Road,
Dahisar, Bombay-68.
Factory Telephone : 661802
661384

**Office :**
Silk House, 4th Floor,
630, Girgaum Road,
Bombay-2.
Office Tel. : 290174
C/o. 312405

*With Best Compliments*

*from*

**KASHICHEM LABORATORIES**

**MANUFACTURERS OF QUALITY PHARMACEUTICALS**

**Stockists :**
**MEDICO Distributors,**
Agra Road,
Ghatkopar,

Leading Suppliers to Doctors and Hospitals

# மலரின் இதழ்களிலே


பக்க எண்

படையல் ... ... ... 29

கட்டுரை :

மேற்கரையில் ஒரு பொதியில் ... ... ... 31
நாடகமயில் ... ... ... 41
தமிழ் நாட்டு மேடை ... ... ... 61
இன்றையத் தமிழ் நாடகங்கள் ... ... ... 85
இன்பத்துப்பால் ... ... ... 93
விதியை வெல்ல முடியுமா ? ... ... ... 109
நாடக மனேகரம் ... ... ... 126
மழை தரும் பாடம் ... ... ... 131
எழுபது ஆண்டுகளுக்கு முன் ... ... ... 139
மிலட்டூர் வளர்த்த மென்கலே ... ... ... 143

கவிதை :

காந்தியும் வள்ளுவரும் ... ... ... 37
சங்கம் வாழ்கவே ! ... ... ... 39
மாடத்திலும் கூடத்திலும் ... ... ... 103
தமிழோசை ஓங்குக ... ... ... 141
அவனே "நான்" ... ... ... 145

சிறுகதை :

நியாயம் ... ... ... 51

நாடகம் :

விதிக்கு விதி ... ... ... 71

கதைச் சுருக்கம் :

துரோணர் ... ... ... 115
காடகமுத்தரையன் ... ... ... 117
சாணக்கிய சபதம் ... ... ... 119
ஆட்சி பீடம் ... ... ... 121

**Index to Advertisers** ... ... ... 178



மலர்க் குழு :

'வேணு'

எஸ். வி. ரமணி — என். பார்த்தசாரதி
ஆர். சங்கரன் — சபரி
ஒ. கே. சுப்பராயலு — ஆர். சுப்ரமணியன்
கே. ஸ்ரீநிவாசன் — டி. ஆர். சேதுரத்னம்

அச்சிட்டோர் :
சேவக் அச்சகம், பம்பாய்-19

வெளியீடு :
பம்பாய்த் தமிழ்ச் சங்கம்
பம்பாய்-22

OCI 1396 EVEREST




DEVIDAYAL ROLLING & REFINERIES PVT. LTD.
GUPTA MILLS ESTATE, REAY ROAD, BOMBAY 10.

## THE PODAR MILLS LIMITED, BOMBAY

(Manufacturers of Drills, Sheetings, Longcloth, Poplins, Coatings, Terycot, Shirtings & Suitings)

★

## PODAR SPINNING MILLS, JAIPUR

(Manufacturers of Fine & Superfine Cotton & Terycotton Yarns)

★

## PODAR PROCESSORS, BOMBAY

(Grey Calendering, Bleaching, Dyeing, Printing, Mercerising, Raising & Finishing of all types of Cotton, Synthetic & mixed fabrics)

FIRST CLASS MINDS NEED

A CLASS PAPER

# THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER

COSTS ONLY A LITTLE MORE THAN

SECOND CLASS DAILIES

# படையல்

இது பதினான்காவது நாடக விழா மலர்.

ஏழு நாடகக் குழுக்களைத் தமிழகத்தினின்று வரவழைத்து விழாக்களை நடத்திய சங்கம், எட்டாவதாக நேஷனல் தியேட்டர்ஸ் குழுவினைக் கொண்டு நாடக விழா ஒன்றினைச் சிறப்பாக நடத்துகிறது.

விளம்பரங்களுக்காக விழா மலர்கள் என்றில்லாமல், விஷயச் செறிவுடன் கூடிய வெளியீடுகளாகவே பம்பாய்த் தமிழ்ச் சங்க நாடக விழா மலர்கள் இதுவரை பூத்துள்ளன என்னும் பெருமை எம் அடக்கமான உரிமை.

அம்மரபை இவ்விதழ் காத்து மணக்கிறது. சங்க வெளியீடுகளையெல்லாம் வரவேற்றுப் பாராட்டிய தமிழுலகு இதனையும் பெற்று மகிழும் என்பது நம் நம்பிக்கை.

மலரைப் பொருள் நிறைவு கொள்ளுமாறு, தங்கள் வடித்த சிந்தையை வழங்கிய எழுத்தாளர்கள், விளம்பரங்கள் நல்கி வெளியீடு மலரத் துணை புரிந்த பெரியோர்கள், மெச்சும் வகையில் அச்சிட்டளித்த சேவக் அச்சகத்தார், இன்னும் வகையறிந்து பணி உதவிய, சங்கத்தின்பால் மங்காத ஆர்வம் கொண்ட நண்பர்கள்—நன்றியுடன் நினைக்கத்தக்க இவர்களது உழைப்பு, உதவி இவற்றின் வடிவமே இம் மலர்.

நுண்ணிதான சிறு பழத்தொரு விதை தெள்ளிய ஆலமரமாகப் படர்வதைப் போன்று இச்சங்கத்தை அன்றும், இன்றும், இனியும் கண்ணே போல் காத்து, வளர்த்த, வளர்க்கின்ற, வளர்க்க உள்ள தமிழன்பர்களுக்கு இம்மலரைப் படைத்து நிறைவு காண்கின்றோம்.

# Be smart...pick from

**The New Range of Suitings by Shakti**

**Debonair**
(Gold Bond)

**SENOR**
(Money Back Guarantee)

TERENE Suitings

DEBONAIR and SENOR 'Terene' Suitings by Shakti are pre-tested for Colour-fastness, Shrinkage, Abrasion, Pilling and Crease-resistance. They're wash 'n' wear, too.

Wear Shakti suitings — they're your guarantee for looking really well-dressed.



**Shree Shakti Mills Ltd., Bombay**

Shilpi SM 1/69



"டமில் ஸங்கம்" என்று சொல்லி நோட்டை நீட்டினார், இளைஞர். சிறிதும் தயக்கமின்றி 'சயான் ஆஸ்பத்திரி' நிறுத்தத்திற்கு டிக்கட்டைக் கிழித்து 'பஞ்ச்' செய்து கொடுத்தார், கண்டக்டர்.

பம்பாய்க்குப் புதிதான அந்த இளைஞருக்கோ அல்லது பஸ் கண்டக்டருக்கோ இது சர்வ சாதாரணமாகத்தான் இருக்கும். ஆனால், எனக்கு அப்பொழுது ஏனோ உடல் புல்லரித்தது.

பட்டப் பகல் பஸ் பிரயாணத்தின்பொழுது 'சீட்'டிலே சாய்ந்தவாறு நெட்டை நெடுங் கனவின் இனிமையிலே நான் சொக்கி விட்டேன்.

* * *

சின்னஞ் சிறிய பள்ளியறை. அதில், இருக்கின்ற புத்தகங்கள் நிறைந்து காணும் அளவிற்கு சின்னஞ்சிறிய அலமாரி. சிறார்கள் உட்கார்ந்து கற்கும் 'டெஸ்கு'களில் அமர்ந்து கொண்டு ஞாயிற்றுக்கிழமை மாலைகளில் கேட்கும் பேச்சுக்கள். அதைக் கேட்க வரும்

# மேற்கரையில் ஒரு பொதியில்

சின்னஞ்சிறு கூட்டம். ஆம்! எல்லாமே சிறியவைதாம், அவற்றை இயக்கி நின்ற உள்ளங்களின் பேராற்றலைத் தவிர. ஆலவிதையும் நுண்ணிது தானே!

அன்று முளைக்க முனைந்த அச்சிறு வித்து இன்று கொப்பும் கிளையுமாக வளர்ந்து படர்ந்த வரலாறு, அதனுடைய வளர்ச்சியிலே அக்கறைகொண்ட இதயங்களுக்கு ஓர் இனிய காவியம்.

இந்த வளர்ச்சியிலே கலந்த ஆசைகள், உழைப்பு, சோர்வு, சோர்வை மறந்த ஊக்கம், ஊக்கத்திலெழுந்த உற்சாகம், உற்சாகத்தினால் பெற்ற மன ஊட்டம் எத்தனை யெத்தனை! எதையும் தாங்கும் இதயம் படைத்த—பயனெதிர் நோக்காது பணி செய்த—இம்மூலவர்களைப் பெயரிட்டுச் சுட்டுவதுதான் எப்படி? பெயர்களே ஓர் அடையாளம்தானே. அடையாளத்தின் கருவறையில் உள்ள தணியாத தமிழார்வம் என்ற தத்துவம் அல்லவா அவர்கள். அந்தத் தத்துவம் மன, மெய், மொழிகளால் வணங்குவதற்குரிய ஒன்றல்லவா.

மொழி வளர்ச்சிக்கு ஓர் அமைப்பு என்னும்பொழுது, அதனுடைய நோக்கங்களுக்கும், குறிக்கோள்களுக்கும் நிறைவு காணும் முறையில் சில பல பணித்துறைகள் உண்டு.

குறிப்பாக, தமிழ்மொழி என்ற அள வில் இயல், இசை, நாடகம் என்று மூன்று கவடாக முளைத்தெழுந்த மரபு இயல்பாகவே உள்ளது.



இயல் அதாவது இலக்கியம் அறிவு பற்றியது. இசை வாயும் செவியும் பற்றியது. நாடகம் கண் பற்றியது. எனவே சிறந்ததொரு நூலகமும் சீரிய சொற்பொழிவு களும், செவிநுகர் தீம்பாடலும், கண் கவர் நாடகங்களும் மொழிவழி வளர்ச்சி காண மிக முக்கியத் தேவைகள்.

இத்தேவைகளுக்கு வேண்டிய அளவும் அதற்கு மேலும் ஈடு செய்யும் வகையில் சங்கப் பணிகள் அமைந்து வருகின்றன.



தொல்காப்பியர் முதல் இன்றைய எழுத்தாளர்கள் வரை ஆக்கிய பலவேறு சுவையுள்ள ஆயிரக் கணக்கான புத்தகங்களைக் கொண்ட நூலகம், கிழமைதோறும் ஏன் அவற்றிற் கிடையில் தேவையானபோதும் திறமான புலமையை வெளிப்படுத்தும் இலக்கியத்திற்கும் ஏனைய சிறப்பான பல்வேறு கருத்துக்களுக்கும் அமையும் கூட்டங்கள், தமிழுலகப் பேரறிஞர்கள் கலந்துகொண்டு, தமிழ் இலக்கியப் பரப்பின் வளம் காட்டும் விழாக்கள், ஆதரவுக்குரிய ஞானத்திற்கும் குரலுக்கும் அரங்கு அமைத்துத் தரும் இசை மேடைகள், நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து காட்டிட ஆர்வம் கொண்ட இளம் பூங்கொடிகளின் கால் சலங்கைகள் கொஞ்சி ஒலித்திடும் அணியரங்குகள், நம்மவர் திறனை நனி வளர்த்தும், தமிழகத்துக் கலைஞர்களின் செல்வத்தை நாம் கண்டு களிக்கவும் அமையும் நாடக நிகழ்ச்சிகள்—இவை யாவுமே சங்கம் பயன் காணும் பணிகள்.



ஆனல், இவை யாவும் 'நூலகத்தைத் தவிர' நிகழ்ந்த பின் நெகிழ்ந்து விடுபவை. இந்தக் குறைக்கும் இடமிருக்கக் கூடாது என்ற முறையில், சங்கம் நூல் வெளியீட்டையும் மேற்கொண்டு தமிழுக்கு இன்று தவிர்க்க முடியாத தேவையான இரு துறைகளில் தன்னுடைய பங்கை அளித்துள்ளது.

மேலைநாடுகளில் வேகமாக இன்று வளரும் இரு துறைகள் நாடகமும், விஞ்ஞானமும்.

கூத்துக்கு இலக்கணம் வகுத்தது தமிழ் என்பதும், காளிதாஸன், பாஸன், பவபூதி போன்ற நாடகமேதைகளைக் கொண்டது நம் நாடு என்பதும் ஒருபுறமிருக்க, இன்றைய உலகத்தின் சூழ்நிலையில் வளர்ந்து வரும் மனிதனைத் தத்ரூப யதார்த்தத்துடன் பிரதி



பலிக்கும் மேலைநாட்டு நாடகங்களைப் போல் இல்லையென்ற கேவல் இருந்து தான் வருகிறது. இதனை ஓரளவு தவிர்க்கும் வகையில் எங்குமுள்ள தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து நடத்திய போட்டியில் புலர்ந்தது குமாரி ஆர். சூடாமணியின் 'அருணோதயம்' நாடகம். நனவு நீரோடை (stream of consiousness) என்ற மன அவசத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட இச் சிறந்த நாடகம் சங்க நடிகர்களாலேயே இங்கும், தமிழகத் தலைநகரிலும் பல முறை நடிக்கப்பட்டு, தரமான ரசிகர்களால் பாராட்டப்பட்டதோடு மட்டுமின்றி, சங்க வெளியீடாகப் புத்தகமாகவும் அச்சிடப்பட்டு வந்துள்ளது.

விஞ்ஞானத் துறையில் அணுவின் ஆதிக்கத்தை அறியாதவர்கள் யார்? அணு விஞ்ஞானம் (Nuclear physics) இன்று அண்டத்து அறிவியல் களத்தையே கப்பி நிற்கிறது.



பண்டைய தமிழ் நூல்களிலேயே அணுவைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன என்ற 'மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்த' பெருமை ஒருபுறம் எக்களித்தாலும் இன்று தாய்மொழி மூலம் கல்வி என்ற புதிய உணர்விற்கு ஆக்க முறையில் கால் அமைக்க விஞ்ஞானத்துறையில் முதல் நூல்களோ வழி நூல்களோ கணிசமான அளவிற்கு இல்லையென்ற குறை பேதை உரை என்று சொல்லிவிட முடியாது. இது என்றாவது ஒருநாள் பொய்யுரை ஆக்கப்படவேண்டுமென்ற நன் முயற்சியில் சங்கத்தின் சிற்றணில் மணற்பங்கு தான் 'அணுவைப் பற்றி' என்ற விஞ்ஞான முதனூல். பாபா அணு ஆராய்ச்சிக் கழகத்தின் அறிவாற்றல் மிக்க இளவல்களும், அவர்களை யொத்த வேறு தோழர்களும், ஆண்டு இரண்டு இடைவிடாது அணுஅணுவாக ஆராய்ந்து எழுதிய முயற்சியின் திருவினை இந்நூல். இந்நூலை வெளியிட்டுப் பேசிய தமிழக அமைச்சர், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், தாய்த் தமிழகம் செய்யத் தவறிய ஒரு பெரும்பணியைப் பம்பாய்த் தமிழர்கள் புரிந்து முன் நடை போட்டு விட்டார்கள் என்றார். இது புகழுரை அன்று; உண்மையான பெருமை.



வளரும் பயிருக்கு காலத்தில் வார்த்திடும் நீர் வீண் போவதில்லையென்பது அனுபவ உண்மை. ஐந்திலே வளைத்திடும் ஆதர்சத்தோடு சங்கம் பள்ளிகளில் பயின்றிடும் பிள்ளை முளைகளுக்கு மொழியார்வத்தைப் புகட்ட ஏலும் வகையெலாம் வழிகள் அமைத்துத் தருகின்றது. மகாகவி பாரதியார் நினைவாக பாட்டு, பேச்சுப் போட்டிகளும், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத



ஐயர் நினைவாக கட்டுரைப் போட்டிகளும் பல அகவைப் பிரிவுகளாக மாணவ மணிகளைக் கூட்டி நடத்தி, பிஞ்சு நெஞ்சுகளில் தமிழார்வத்தைச் சேர்க்க முயலுகிறது. இன்னும் பள்ளியாண்டு இறுதிப் படிவத்தில் படிக்கும் பம்பாய்த் தமிழ் மாணவர்களுக்கு அதற்கு ஈற்றயல் ஆண்டுத் தேர்வில் தமிழில் பெற்ற மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்படும் உதவித் தொகை ஊக்கத்தை மேலும் வளர்த்து உதவும் தகையது.

இன்னும், சங்க நிகழ்ச்சிகளும் பிற தோழமை அமைப்புகள் நடத்திய நிகழ்ச்சிகளும், விளக்கப் பெறுவதோடு, சங்க அன்பர்களின் எழுத்தாற்றலையும் தாங்கி வெளிவரும் 'சங்கம்' இதழ் பயனுள்ள பணிகளின் தெளிவான அறிக்கை.

மொழி வளர்ச்சியெல்லாம் சரி, கட்டிடத்தையும் கட்டிவிட்டீர்கள், சமூகத்திற்கு அதன் மூலம் நேரிடையாகக்கிடைக்கும் பயன் என்ன என்பது அழுத்தமான கேள்விதான். ஆமாம்! விலா எலும்பில் படாமல் தூசி தட்டுகிற 'வளர்க தமிழ்', 'வாழ்க தமிழ்' என்ற போலி ஆவேசம் உண்மையான மொழி முன்னேற்றம் ஆக முடியாது. மனிதனுக்காகவே மொழி என்ற அடிப்படையைச் சங்கம் தெளிவாகவே உணர்ந்து கொண்டுள்ளது. தமிழகத்தினின்று கல்விச் சுற்றுலாவின் காரணமாக பம்பாய் வரும் மாணவத் தொகுதியினர்கட்கு சங்கம் தங்குவதற்கு இடமளிக்கிறது. பம்பாய்த் தமிழ்ச் சமூகத்தில் நடைபெறும் திருமணம் மற்றும் எல்லாப் பொது நிகழ்ச்சிகளுக்கும் சங்க மணி மண்டபம் அணி செய்யும் முறையில் இடமளிக்கிறது.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற முரசு புறநானூற்றுப் பழம் பெருமையாய் மட்டும் ஆகிவிடாமல் சங்கக் கட்டிடம் இன, மொழி, சமயக் குறுக்குச் சுவர்களைக் கடந்து எல்லோர்க்கும் பொதியிலாக விளங்குவது மனம் விரிந்த உணர்வு.

* * *

பஸ் கண்டக்டரின் குரலும், மணியொலியும் என்னை நனவுலகிற்கு இறக்கின. கண் விழித்து எதிர் நோக்கினேன். இரு கிளைகளாகப் பிரியும் வீதியின் முனைத் தோட்டத்துப் பகைப்புலத்தில் முளைத்தெழுந்த ஆலமரமாக நெடிதுயர்ந்து நிற்கிறது, பம்பாய்த் தமிழ்ச் சங்கம்.

அது காரையும் செங்கலையும் கொண்டதாக எனக்குப் படவில்லை. உறைந்து ஒளிர்ந்த தமிழார்வத்தின் அடிநாதமாகவே எனக்குத் தோன்றுகிறது. இது கனவன்று; பரிவுகொண்ட இதயத்தின் முழுமையான உணர்வு. —"நான்"





# பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

## நிர்வாகக் குழு—1969

**தலைவர் :**

திரு. கே. கிருஷ்ணஸ்வாமி

**உப தலைவர்கள் :**

திரு. வி. ஆதிலட்சுமணன்
,, கே. வெங்கடாச்சாரி

**செயலாளர்கள் :**

திரு. எஸ். வி. ரமணி
,, என். பார்த்தசாரதி

**பொருளாளர் :**

திரு. எஸ். வி. ராமானுஜம்

**அங்கத்தினர்கள் :**

டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்
திரு. அரு. சொக்கலிங்கம்
,, வே. நாகராஜன்
,, என். கிருஷ்ணன்
திரு. வைத்தியநாதன்
,, எஸ். கே. காந்தன்
,, ஒ. கே. சுப்பராயலு
திருமதி ராஜம் ராமானுஜம்
திருமதி ருக்மிணி ராமசுப்ரமணியம்

**தணிக்கையளர் :**

திரு. ஆர். கிருஷ்ணய்யர்

**கட்டிடக்குழு :**

டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்—**தலைவர்**
திரு. சி. வி. சுப்ரமணியம்
,, எஸ். கந்தஸ்வாமி—**அமைப்பாளர்**



தலைவர்
திரு. கே. கிருஷ்ணஸ்வாமி



கட்டிட நிதிக் குழுத் தலைவர்
டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்



உபதலைவர்
திரு. கே. வெங்கடாச்சாரி



உபதலைவர்
திரு. ஆதிலட்சுமணன்

காவி வேட்டி கட்டவில்லை; சடையை வளர்க்கவில்லை; இம்மாதிரி யான தவ வேடம் எதுவும் இன்றியே உண்மைத் தவசியாக விளங்கினான் காந்தி.

*காவி உடை அணியான் காந்தி, சடை முடியான் ;*
*மேவு தவம் இதுவோ ? மெய்ப்புலவீர் ! — ஓ ! ஓ !!*
*மனத்துக்கண் மாசுஇலன் ஆதல், அனைத்து அறன் ;*
*ஆகுல நீர பிற.*

உண்மைப் புலவரே! காந்தி செங்காவி தோய்த்த ஆடை கட்ட வில்லை ; சடையை நீட்டிச் சுருட்டி வைக்கவில்லை. அவனைப் பெரிய தவசி என்கிறீரே ! இதுதான் தவமோ ?

ஓகோ ! இவ்வளவுதானா உன் சாமர்த்தியம் ? உள்ளத்திலே குற்றமற்று விளங்கல் வேண்டும். அவ்வளவே கடமை. காவியும், சடையும், பிறவும் ஆடம்பரங்கள். அவை வெளி வேடங்கள்.

ஒரு மனிதன் வெளியே தோன்றுவதானால் புகழோடு புறப்பட வேண்டும். புகழ்பட வாழ அறியார், தன்னை எவர்க்கும் காட்டிக்கொள்ளாமலேயே அடங்கிக் கிடந்து மாண்டு ஒழிதலே நலம். தோன்றிப் புகழ் பெற்றோரில் காந்திக்கு இணை யாருமே இலர்.

*காந்தி தனைஒழியக் காசினியில் வேறு எந்த*
*மாந்தர் நிகர் இக்குறட்கு வள்ளுவரே ! — ஆய்ந்திடும்நும்*
*தோன்றில் புகழொடு தோன்றுக ! அஃதிலார்*
*தோன்றலில் தோன்றாமை நன்று.*

'ஐயா ! வள்ளுவரே ! புறப்பட்டால் புகழோடு புறப்படுக ! புகழ் இல்லாதார் வெளியில் வருவதைவிடப் பேசாமல் இருந்துவிடுவதே சிறப்பு' என ஆராய்ந்து நீர் கூறிய இவ் அரிய குறட் பாவுக்கு இப் பேருலகத்தில் காந்தியைத் தவிர வேறு எவரை ஈடு சொல்ல முடியும் ?

WITH THE COMPLIMENTS OF

# THE MOGUL LINE LTD.

BOMBAY

**(A Government of India Undertaking)**

OPERATES

Haj Pilgrim service between Bombay and Jeddah

Regular Cargo-cum-Passenger service between Bombay and Red Sea ports :

AND

Regular Coastal service for transporting of Coal, Salt, Cement Etc.

16, Bank Street,
Fort, Bombay-1.

Telegram : "MOGUL" Bombay

Telephone : 256835 (4 lines)

# நாடக மயில்

நா. வரதராஜுலு நாயுடு

கம்பனுடைய இராமகாதை நாடக அமைப்பு வாய்ந்தது. அதனுள் பல நாடகக் காட்சிகள் பொதிந்துள்ளன. அவற்றுள் ஒன்றில் 'நாடக மயில்' நடம் புரிகிருள். அதைக் காண்போம்.

மந்தரையின் தீய உரையால் கைகேயிக்கு இயற்கையாக உள்ள தூய சிந்தையும் திரிந்தது; மாறுபட்டது. தன் குறிக்கோள் நிறைவேறுவதற்காக அவள் நாடகக் கோலம் பூண்டாள். நாடகத்துக்கு உரிய அரங்கையும், நாடகக் கணிகையின் அகக் கோலம் புறக் கோலங்களையும் அவளே ஏற்படுத்திக் கொண்டாள். நாடக ஆசான் அவளுக்குத் தேவை இலது.

அகக்கோலத்தை 'உரம் கொள் மனம்'— செயலுக்கு ஏற்ப உறுதி கொண்ட மனம் - என்பான் கம்பன்.

புறக்கோலம்: மலர்க் குப்பையாக இருந்த பள்ளியிலிருந்து கீழே இழிந்தாள், இறங்கினுள் கைகேயி; தான் அணிந்திருந்த மாலையைச் சிதைத்தாள்; மேகலை சிந்தினள் - கீழே விழ விட்டனள்; நெற்றித் திலகத்தை அழித்தாள்; பூக்கள் யாவும் உதிர்த்துக் கிடக்கும் கொம்பு போலப் புவியில் புரண்டாள். நவ்வி (மான்) வீழ்ந்தது போலும், நாடக மயில் (ஆடி வரும் மயில்) துயின்றது போலும் கிடந்தாள்.

கிடந்த அவளுடைய 'உரம் கொள் மனத்தை'யும் அம் மன உறுதி நிறைவேறுவதற்கென அவள் ஏற்படுத்திக் கொண்ட அரங்கையும் அரசன் தசரதன் அறியான். அவளை ஏழை, பேதை எனவும் தான் வலிமை மிகுந்த சிங்கம் எனவும் தசரதன் கருதி இருந்தான். 'ஏழை கோயிலை ... மடங்கள் ஆளி அன்ன மன்னன் அடைந்தான்' (ஆளி : ஆள் + இ — ஆள்வான் — சிங்கம்) என மாறுபாட்டு அணியில் கம்பன் அமைப்பான். இவள் 'ஏழை', அவன் 'ஆளி'! எத்தனை நாழிகைக்கு? இவளுடைய அகன்ற கண், மென்மையான தோள் —'தடங்கண், மென்தோள்'. அவளை ஈர்க்க ஈண்டு வருவான் அரசன்; தன் நீண்ட, வலிய கரங்களால் மானை எடுக்கும் ஆனையே போல் அவளைத் தழுவி எடுக்கலுற்ருன்.

வால்மீகி இவ்விடத்தில் வெளிப்படையாகவே கூறுவார். "ஸ காம பல ஸம்யுக்தோ ரத்யார்த்தீ மனுஜாதிப:" (II, 10.17)– அரசன் காமபலம் கூடியவனுக இன்ப வேட்கையோடு நாடினுன், "ஸ வ்ருத்த: தருணீ பார்யாம் ப்ராணேப்யோ அபி கரீயஸீம்" (II. 10.23). முதியோன் இளம் மனைவியைத் தன் உயிரினும் பெரிதாகக் காதலிக்கிருன்; "காமீ மஹாராஜ பரிம்ருஜ்ய ச பாணிப்யாம்" (II. 10. 26–7)—மஹாராஜன் காமத்தோடு இருகைகளாலும் தடவினுன்.

மன்னன் செயலை அவள் எதிர்பார்த்து இருந்தாள். தன்னை எடுத்த கைகளை நீக்கி, மின்னல் துவள்கின்றது போல அவள் மண்ணில் வீழ்ந்தாள். ஒன்றும் பேசவில்லை. நீண்ட மூச்சு விட்டாள்.




Ahura has the right ammunition for your job

pioneer process chemicals manufacturers since 1936

Some of the industries served are: Textiles, Paint. Paper, Pharmaceutical, Printing Ink, Mining, Rubber, Dairy, Food Processing, Leather, Insecticide, Fire-fighting, Electroplating, Engineering, Building & Constructing.

**AHURA CHEMICAL PRODUCTS PRIVATE LTD.**

84, Sion Road, Sion East, Bombay-22, Phone : 471394 & 471911 Grams : AHURACHEM

With the Best Compliments of

**THE INDIAN EXPRESS NEWSPAPERS (BOMBAY) PVT. LIMITED**

Newspaper House, Sasson Dock,
Bombay — 5.

**Publishers of :**

**THE INDIAN EXPRESS (Daily)**
**THE SUNDAY STANDARD (Weekly)**
**LOKASATTA (Marathi Daily)**
**SUNDAY LOKASATTA (Marathi Weekly)**
**SCREEN (Film Weekly)**
**THE FINANCIAL EXPRESS (Financial Daily)**

மன்னன் 'என்ன நிகழ்ந்தது? உன்னை இகழ்ந்தவர் மாள்வர். உனக்கு உற்றது எல்லாம் சொல்லி(வி)டு' என்ருன்.

மங்கை, 'பண்டைய இன்று பரிந்து அளித்தி' - முன்னையதை இன்று பரிவுடன் தா—எனக் கேட்டாள். அப்போது அவள் கண்களில் தோன்றிய நீர் கொங்கையில் கோத்தது: நிலத்தில் விழவில்லை. இதுவும் அவள் நாடகத்திறமை!

அவள் கருத்து உணராத மன்னன் சிரித்தான், 'புன் சிரிப்பு தோன்ற''உத்ஸ்மய' என்பார், வால்மீகி (II. 11.4). 'உன் விருப்பப்படி செய்வேன்; வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை' என்ருன்.

அப்போது அவள் 'மன்ன, நீ அன்று ஈன்ற வரங்கள் இரண்டும் ஈதி' என்ருள். 'ஈவென்' என்ருன் அரசன். உடனே, அவள் 'என்சேய் உலகு ஆள்வது; சீதை கேள்வன் வனம் ஆள்வது' எனப் புகன்று நின்ருள். கிடந்தவள் நின்ருள்.

இனி, இந்நாடகக் காட்சி முடியும் வரை நிற்பாள். இதுவும் அவள் நாடகத் திறமை!

அவள் நின்றதும் தசரதன், வீழ்ந்தான் என்பது அடுத்த பாட்டு.

வால்மீகியில் இப்பகுதியைப் பார்ப்போம்.

தசரதன் கூறுவது :

''கஸ்ய வாபி ப்ரியம் கார்யம்
கேன வா விப்ரியம் க்ருதம்
க : ப்ரியம் லபதாம் அத்ய
கோ வா ஸுமஹத் அப்ரியம்
அவத்யோ வத்யதாம் கோ வா
வத்ய : கோ வா விமுச்யதாம்
தரித்ர : கோ பவேத் ஆட்யோ
த்ரவ்யவான் வாப் அகிஞ்சன :
பலம் ஆத்மனி ஜானந்தீ
ந மாம் சங்கிதும் அர்ஹஸி
கரிஷ்யாமி தவ ப்ரீதிம்
ஸுக்தேன அபி தே சபே'' II. 10. 31-6

''(நான்) யாருக்கு இன்பமான காரியம் செய்யவேண்டும்? யாருக்குத் துன்பம் இழைக்க வேண்டும்? யார் நன்மை பெற வேண்டும்? யார் பெரும் தீங்கு - தண்டனை - பெற வேண்டும்? கொல்லத் தகாத யாரை நான் கொல்ல வேண்டும்? கொல்ல வேண்டிய யாரை நான் விடுவிக்க வேண்டும்? எந்த ஏழையைச் செல்வவான் ஆக்க வேண்டும்? எந்த செல்வவானை ஏதும் அற்றவன் ஆக்க வேண்டும்? என் பலத்தை நீ அறிவாய்; ஆதலின் என் பேச்சை நீ ஐயுறல் தகாது. உனக்கு எச்செயல் மகிழ்ச்சி தருமோ அதை நான் இப்போதே செய்வேன் : உன் மேல் ஆணை."

சர்வ வல்லமை உள்ள அரசன் ஒருவருக்கு இன்பமான காரியம் செய்வதோ, நன்மை உண்டாக்குவதோ, கொலையிற் கொடியாரை விடுதலை செய்வதோ, ஏழையை முன்னேறச் செய்வதோ தவறு ஆகா. ஆனல், அவளுடைய பிரீதிக்காக, குற்றம் அற்றவனைத் தண்டிப்பதும், கொல்லத் தகாதவனைக் கொல்வதும் பெரும் தவறு. இதை எண்ணிப் போலும் கம்பன் நகர மாந்தர் கூற்ருக ''ஆதி அரசன் (கிழட்டு அரசன்) அருங் கேகயன் மகள் மேல் காதல் முதிரக் கருத்து அழிந்தான் ஆம்" என்பர்.

இவ் அரசன் கூற்றுக்குக் கழுவாய் என வால்மீகியே பரதன் வாயால் கூற வைக்கிருர் :

கச்சித் ந ஆட்யோ தரித்ரோ வா
தேன அபாபோ விஹிம்ஸித : II 72.44

'இராமன் என்ன தவறு செய்தான் : செல்வவானை ஏழை ஆக்கினனு? பாவம் (குற்றம்) அற்றவனைத் துன்புறுத்தினனு?' பரதன், 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புக மண்டும் பள்ளம்.' தசரதனே?

பலம் பொருந்திய மன்னன் ஆகம் அடங்கலும் (உடல் முழுவதும்) வெந்து அழிந்து, அராவின் (பாம்பால்) வேகம் அடங்கிய வேழம் என்ன வீழ்ந்தான்.

'நாவில் நஞ்சம் உடைய நங்கை', இது காறும் சுருண்டு புவிமேல் கிடந்தவள்,

With Best Wishes
from

# THE ORIENTAL FIRE & GENERAL INSURANCE COMPANY LIMITED

**(Subsidiary to Life Insurance Corporation of India)**

**Registered Office :**
"Oriental Buildings", Mahatma Gandhi Road,
Fort, Bombay-1.

**Transacting :**
FIRE, MARINE, MOTOR AND ALL OTHER CLASSES OF GENERAL INSURANCE BUSINESS.

***With the Compliments***

***of***

# MAHINDRA AND MAHINDRA LIMITED

BOMBAY CALCUTTA DELHI MADRAS

'நாகம் என்னும் கொடியாள்', பாம்பு படம் எடுத்து நிமிர்ந்து எய்வது போலே, தன் சொல் விடம் எய்து நின்ருள்.

மன்னனுக்கு ஐம்புலன்களும் ஒய்ந்தன. அஃறிணைப் பொருள் ஆனுன். கம்பன் ''இருக்கும், நிற்கும் வீழும், எண்ணும், உட்கும், நாணும், உலாவும், அயர்க்கும்'' என அஃறிணை வினைச் சொற்களையே பெய்துள்ளார். தசரதன் நாணுவது குறள் ஆசிரியர் கூறும் 'கருமத்தால் நாணுதல்'. தன் செயலுக்காக நாணினுன்.

கைகேயியோ 'நாண் இலள்'; வால்மீகியும் இங்கு அவளை 'அபத்ரபா' என்பார்.

இவள் நின்ருள் ; அவன் வீழ்ந்தான்.

இந்நிலை நின்றவள் தன்னை எய்த நோக்கி, மன்னன் 'நீ திகைத்தது (திகைத்தது) உண்டோ? வஞ்சம் உண்டோ? அந்நிலை சொல்' என்ருன்.

அவள் : 'வரங்கள் தரின் கொள்வேன், அன்றேல் மாள்வேன்' என்ருள். அச்சொல் தன் செவியில் புகா முன்னரே, மன்னன் சிந்தை திரிந்து, திகைத்து, அயர்ந்து விழ்ந்தான். தசரதனைக் குறிப்பிடும் கம்பன் 'மன்னன்', 'வாளான்', 'வேலான்', வாய்மை மன்னன்' 'கழல் மன்னர் மேல் மேல் வந்து முந்தி வணங்கி மிடை தாளான்' என ஒவ்வொரு பாட்டிலும் அடைமொழிகள் பொதிந்துள்ளார். தன் காலில் பல மன்னர் வணங்க நெருங்கும் ஒருவன் நின்று கொண்டிருந்த அவள் 'கால் மேல் விழுந்தான்'.

வால்மீகி தசரதன் 'உன் காலில் வீழ்வேன்' என இடையிடையே கூறிப் பல வாதங்களுக்குப் பின் கால் அருகில் வீழ்ந்து விட்டான் என இந்தக் கால் மேல் விழும் காட்சியை நீட்டித்துக்கொண்டு போவார்.

''அபி தே சரணம் மூர்த்நா
ஸ்ப்ருசாமி ஏஷ ப்ரஸீத மே II 12.15

அஞ்ஜலிம் குர்மி கைகேயி
பாதௌ சாபி ஸ்ப்ருசாமி தே
சரணம் பவ ராமஸ்ய
மா அதர்மோ மாம்இஹ ஸ்ப்ருசேத்'' II 12 36

''ஸ பூமிபாலா விலபன் அநாதவத்
ஸ்த்ரியா க்ருஹீதோ ஹ்ருதயே
அதி மாத்ரயா
பபாத தேவ்யா : சரணௌ ப்ரஸாரிதௌ
உபௌ அஸம்ப்ராப்ய யதா
ஆதுரஸ்ததா'' II 12.112

இது வால்மீகியில் ஒரு முக்கியமான கட்டம். 'உன்' பாதங்களை என் தலையால் தொடுவேன். எனக்கு அருள் கைகேயீ, கை கூப்பி உன் பாதங்களையும் கூடத் தொடுவேன். இராமனுக்கு நீ சரணம் அருள், என்னை அதர்மம் தொடச் செயேல். உலகைக் காப்போன், அவ்வரசன், பெண்ணுல் பீடிக்கப் பட்டு அநாதையைப் போலப் புலம்புவான். அவள் எல்லை மீறிய மனத்தினள் : அவள் பாதங்களை நீட்டினுள்; அந்தப் பாதங்களைப் பிடிக்க வீழ்த்தான். அவள் நீட்டிய இரண்டு பாதங்களையும் அவன் அடைந்தானில்லை — தொடவில்லை; ஏன்? அவனுடைய பலவீனத்தால். வால்மீகியில் அவள் கால்மேல் வீழாதது அவள் தடுத்ததால் அன்று : அவள் விரும்பாததால் அன்று; அவன் தன் கால்களை நீட்டியும், அவன் அவற்றை எட்ட உடலில் தெம்பு இன்மையாலே.

வால்மீகத்தில் இப்பகுதி ஸர்க்கத்தின் இறுதிப் பாட்டு; சந்தம் மாறுகிறது.

கம்பனிலும் இங்கு சந்தம் மாறுகிறது. உணர்ச்சி மேலீட்டால் சிறு சொற்களும் ஈரசைச் சீர்களும் பயிலுகின்றன. இறுதியில் நெட்டுயிர்ப்பைக் குறிக்கும் மூவசைச் சீர்.

'கொள்ளான் நின்சேய் அரசு; கொண்டாலும் நள்ளாது இந் நானிலம், நீ புகழ் கொள்ளாய்; வன் பழி கொண்டு என் பயன். பரதன் மேல் என்ன பரிவு தசரதனுக்கு; 'தாய் உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீயவை என்ன' நீப்பான் என்பதை எதிர்பார்த்திருந்தான்.

'வானோர் கொள்ளார்; மண்ணவர் உய்யார்; யாரோடு நீ இவ் அரசு ஆள்வாய்?'

*with the compliments of*

Pfizer

# PFIZER LIMITED

Pharmaceuticals — Animal Health Products — Pharmaceutical Chemicals — Agrochemicals — Nutritional Products

*Bensons-1/PF-11*

சிறிது பசப்பு உரை, 'சிறிது முகஸ்துதி. 'வண்மைக் கேகயன் மானே' அவள் குலத்தின் ஈகைத் தன்மையைக் கூறுவது. 'மண்ணே கொள், மற்றையது ஒன்றும் மற' : பேரம் பேசுவது.

இவை அனைத்தும் வால்மீகத்தில் உள. ஆனால், இந்த சூழ்நிலையில் அன்று: தசரதன் கூறுவதாகவும் அன்று.

சுமந்திரன் கைகேயிக்கு :

**"த்யக்தாயா பாந்தவை: ஸர்வை:**
**ப்ராஹ்மணை: ஸாதுபி: ஸதா**
**கா ப்ரீதி ராஜ்ய லாபேன**
**தவ, தேவி, பவிஷ்யதி**
**தாத்ருசம் த்வம் அமர்யாதம்**
**கர்ம கர்ம கர்தும் சிகீர்ஷஸி"**
II 35:12.3

எல்லா உறவினராலும், அந்தணராலும் பெரியோர்களாலும் எப்போதும் துறக்கப் பட்டு, தேவியே, நீ அரசு எய்தி என்ன இன்பம் பெறப்போகிறாய்? வரம்பு மீறிய இந்தக் காரியம் செய்ய எப்படித் துணிந்தாய் ?

'யாரோடு நீ இவ் அரசு ஆள்வாய் ?'

வனவாசத்தின் முதல் இரவில் இலக்குவனுடன் பேசும்போது இராமன் அதுவரை அடக்கி வைத்திருந்த எண்ணங்கள் வெளிப் படுகின்றன :

**'பரத: கைகேயீ ஸீத:**
**முதிதான் கோஸலான் ஏகோ**
**யோ போக்ஷ்யதி அதிராஜவத்** II 53.11
**'அர்த்த தர்மௌ பரித்யஜ்ய**
**ய: காமம் அனுவர்ததே**
**ஏவம் ஆபத்யதே க்ஷிப்ரம்**
**ராஜா தசரதோ யதா** II 53.13

'பரதன், கைகேயி மகன், இன்பமாக கோசல நாட்டைத் தனியே அனுபவிப்பானு, பேர் அரசனைப்போல, அறத்தையும் பொருளையும் விட்டு காமத்தைக் கடைபிடிப் பவன் தசரத மன்னனைப் போல் விரைவில் வீழ்வான்'. இராமன் தன் தந்தையின் செயலின்மீது தீர்ப்பு அளிக்கிறான்!

இலக்குவன் கூறியதாகச் சுமந்திரன் தசரதனுக்குக் கூறியதும் இதுவே.

**'ஸர்வ லோக விரோதேன**
**கதம் ராஜா பவிஷ்யதி'** II 58:33

'எல்லா மக்களுடைய வெறுப்பு கொண்டு எவ்வாறு அரசனாக முடியும்?'

இவ்வளவுக்கும் கைகேயி உள்ளம் தடு மாறாள். 'முன்னே தந்தாய் இவ்வரம்; நல்காய்; முனிவாயேல், என்னே, மன்னா' யார் உளர் வாய்மைக்கு இனி?' நீ மறுத்தால். சொன்ன சொல்லைக் காக்க இனி யார் இருக்கிறார்கள்? வால்மீகத்திலும் தசரதனுடைய சத்திய விரதத்தை அவள் நினைவுறுத்துவாள்.

தசரதனை 'வாய்மையும்' மரபும் காத்து மன் உயிர் துறந்த வள்ளல்' என வாலி பாராட்டுவான்.

'ஸத்யே தர்ம: ப்ரதிஷ்டித:'
'ஸத்யேன அவாப்யதே பரம்'
ஆஹு: ஸத்யம் ஹி பரம்
தர்மம் தர்மவிதோ ஜனா:
ஸத்யம் ஆச்ரித்ய ச மயா
த்வம் தர்மம் ப்ரதி சோதித: II 14. 3,7

'வாய்மையில் மரபு நிலைக்கிறது. வாய்மையாலே உயர்வு பெறலாம் : வாய்மையே உயர்ந்த அறம் என அறம் அறிந்தவர் கூறுவர். வாய்மையைக் கடைப்பிடிப்பது அறத்தைக் காக்கத் தூண்டும்.'

இகல் வேந்தன் இரந்தான். கைகேயி உள்ளம் தடுமாறாள். தசரதன் இரந்தே மொழிகின்றான. 'ஆட்சி தந்தேன்; என் மகன், என் கண், என் உயிர், எல்லா உயிர் கட்கும் நன்மகன், நாடு இறவாமை நய'. இதற்கு முன் கைகேயியிடம் 'உன் மகன் இராமன் ஆணை' என்ற இராமன் இப்போது 'என் மகன்' : கைகேயி மகன் அன்று.

'அவன் (இராமன்) கழிவானேல் உய் வேன்; உன் அபயம் என் உயிர்' என்றான். தன் உயிருக்காக மன்றாடுகிறான்.

அவளோ ஒரு சொல் : 'தந்த வரத்தைத் தவிர்க என்றல் உரம் தான் அல்லால் நல் அறம் ஆமோ, உரை'

With

Best

Compliments

from

# SIKRI & GROVER

United Bank of India Building
(6th floor)
Sir P. Mehta Road, Bombay-1.

Phone : 256949 Grams : NEROLION

மறுபடியும் ஏழு பாட்டுக்கள் தசரதன் கூறுவன : 'நீங்கும் என் ஆவி' 'கொல்லு தியோ நீ' 'நா அம்பால் என் ஆர் உயிர் உண்டாய்' 'நங்கையர் தம்பால் நணுகாரே ஆண்பாலார்; பெண்பால் ஆரொடு அடைவு?' 'பெண்ணால் வந்தது அந்தரம்'.

என் 'உன்னும்', 'இரங்கும்' 'இன்னல் உழக்கும்', 'மயங்கும்', 'இடையும்'. மன்னன் அஃறிணைப் பொருளே ஆகிவிட்டான். உணர்ச்சி அழிந்த ஆணை பெண்ணை ஜடப் பொருள் என்றே கருதுவார் ஆழ்வாரும். தன் பெண் 'கண்ணநீர் கைகளால் இறைக்கும்; கை கூப்பும்; தளரும்' என்பது திருவாய்மொழி. அவ்வாறே தசரதனும்.

இத்தனைக்கும் கையேயி கூறுவது : 'ஊழின் (முறைப்படி) பெற்றாய் என்று உரை; இன்றேல் உயிர் மாழ்வென், மன்னவ' என்பது.

இறுதியில், மிடல்வேந்தன் "ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம். வசைவெள்ளம் நீந்தாய் நீந்தாய் நின்மகனொடும் நெடிது" என்றான். பழி வெள்ளத்தில் விழுவாய்; நீந்திக் கரை ஏறுவாயா ?

முன்பே ஆட்சியைத் 'தந்தேன்' என்றான். இப்போது, அவல மிகுதியால் மற்ற வரத்தையும் 'ஈந்தேன், ஈந்தேன்' என இரட்டித்துக் கூறி, அதனின்று 'தேறான் (தெளியான்) ஆகிச் செயல் மறந்தான்'.

வால்மீகத்தில் அரசன்,

நஷ்டா ச மமசேதனா
ராமன் த்ரஷ்டும் இச்சாமி II. 14.24

'நான் உணர்வை இழந்தேன். இராமனைக் காண விரும்புகிறேன்' என்பான். விடிந்த பின் இராமனை அழைத்து வர அவனே சுமந்திரனை ஏவுவான்.

கம்பனுடைய கைகேயி, அவன் செயல் மறந்ததும், செயல் முற்றித் துயில்வுற்றாள். அவன் செயல் மறப்பும் அவள் துயில் உறலும் ஒருங்கே நிகழ்ந்தன.

இந்தக் காட்சி முடிகிறது.

இந்தக் காட்சியில் அவள் பேச்சு சிறிது: நடிப்புப் பெரிது. நான்கு சிறு பேச்சுகளிலும் தசரதன் 'மன்னன்' (நிலைத்திருப்பவன்) என்பதை நான்கு முறையும் நினைவுறுத்துகிறாள்.

தசரதன் தன் உயிருக்காக மன்றாடி, வாய்மைக்கும் மரபுக்கும் ஒற்றுமை காணாது செயல் மறக்கிறான்: (*utter frustration*).

கைகேயி தன் செயல் முற்றுப் பெற்றதும் துயில் உற்றதில் வியப்பில்லை. வால்மீகத்தில் இத்துயில் இல்லை. ஆசை நிறைவேறியதும் ஆழ்ந்த தூக்கம் (*Sleep after an orgasm*) இயற்கை.

அடுத்த பாட்டிலேயே நிகழ்ச்சி மாறு பாட்டுடன் மறுபடியும் சந்தமும் வேறுபடுகிறது. கைகேயி துயில்வுற்ற தன் காரணத்தை கம்பன் உவமை வழியே விளக்குகிறான். 'உயிர் ஒன்று போல்வன (கலவி) செய்து பின்' 'மைந்தன்' (இளமை வலிமை உடையவன்) 'இடர் எய்த' (துன்பம்பெற) 'மாதர்' (விருப்பம் தருபவள்) நிலா நகை செயல் கண்டு கங்குல் ஆகிய நங்கை (இரவு எனும் பெண்) மக்கள் முன் நிற்பதற்கு நாணினாள்; நாணி ஏகினாள்.

கைகேயி பால் உணர்ச்சி நிரம்பியவள். அவ் உணர்ச்சி செயலால் முற்றுப் பெற்றதும் 'துயில்வுற்றாள்'.

'நாடக மயில்' ஆடி ஓய்ந்தது.

*With Compliments from*

**ASSOCIATED ADVERTISERS & PRINTERS**

505, TARDEO ARTHUR ROAD,

BOMBAY-34.

PHONE : 379696

**USER AFTER USER SAYS—**

**Doctaire INDUSTRIAL CLIMATE CONTROL SYSTEM PAYS FOR ITSELF!**

The DOCTAIRE equipment cools, humidifies, ventilates, heats, dries. Internationally reputed. Used in textile and other major climate control jobs throughout India.




**Also from C. DOCTOR...**



**Doctaire Pneuma-Col**
vacuum collects lint, fly and broken ends. Keeps textile factories cleaner.



**Doctaire Steam Heaters**
—the *only* copper steam heaters in India. Offer bigger-than-ever heating capacities for every industrial need.

Manufacturers:
**INDUSTRIAL MACHINERY MANUFACTURERS PRIVATE LIMITED** Ahmedabad

Sole Distributors:
**C. DOCTOR & CO. PRIVATE LTD.,** 11 Bruce Street, Bombay 1
Bank of Baroda Building, Gandhi Road, Ahmedabad 1
286 Bipin Behari Ganguly Street, Calcutta 12
7 Cowli Brown Road, Coimbatore 2

Agents for North India:
**ASHA KNITTERS,** Rupa Street, Ludhiana

# நியாயம்

ஆர். சூடாமணி

காமாட்சியால் ஆற்ருமையைத் தாங்க முடியவில்லை. "அது என்ன அப்படி ஒரு அம்மா அதிகாரம்? அவள்தான் சொன்னுன்னு உன் வீட்டுக்காரருக்கு மூளை எங் கேடி போச்சு?" என்று மேன்மேலும் பொழிந்த சொற்களின் சினத்தில் அழுந்திப் போனுள்.

அவள் மகள் சந்திராவின் உதடுகள் சிரித்தன. அதன் பெயர் இகழ்ச்சி. "சில ஆண் பிள்ளைகள் எத்தனை வளர்ந்தாலும் 'சும்மா கோதண்டராம'னுகவேதான் இருந் துடருேம்மா!"

"அப்படின்னு கல்யாணம் பண்ணிக்காம இருந்திருக்கணும். கல்யாணத்தையும் பண் ணிண்டுட்டு அப்புறம் அம்மா பேச்சுக்குப் பயந்துண்டு பெண்டாட்டியை அலட்சியப் படுத்திஞல் என்ன அர்த்தம்? பெண் நன்ரு யிருக்கணும்னுதானே ஒருவன் கையில் பிடிச்சுக் கொடுக்கரேும்? அது தெரிய வேணும் ஒரு மனுஷனுக்கு?"

"சும்மாயிரும்மா. இன்னிக்கு அவர் வரேன்னு சொல்லியிருக்கார். எங்கேயா வது காதில் விழுந்துவைக்கப் போறது."

"விழட்டுமேடி! எனக்கென்ன பயம்? நேரவே சொல்லக்கூட நான் தயார்" என்று கூறினுலும் காமாட்சி உடனே குரலைத் தணித்துக்கொண்டாள்.

சந்திராவுக்கு உள்ளூரிலேயே புக்ககம். மகப்பேறு ஆகி இரண்டு மாதங்கள் கடந் திருந்தன. அவள் கணவன் பாலு வாரத் தில் ஐந்து நாட்களாவது மனைவியையும் குழந்தையையும் பார்க்க வருவான். "சந்திரா இன்னும் இரண்டு மாசம் இருந்துட்டு வரட் டுமே! உடம்பு ரொம்ப பலவீனமாயிருக்கு" என்று அவனுடைய பெற்ருேர்கள் சொன் னதை அவன் ஒப்புக் கொண்டிருந்தான். அவள் விரைவாகத் திரும்பி வந்து தன் வீட் டில் உழைத்து உடல் நைய வேண்டாம் என்ற எண்ணம்தான் அவனுக்கும். "அவர் ரொம்ப நல்லவரம்மா! என் மேல் ஈ மொய்த் தால்கூடப் பொறுக்க மாட்டார்" என்று சந்திராவே எத்தனையோ முறை சொல்லி யில்லையா என்ன? காமாட்சிக்கு அது பெருமைதான். எனினும் பாலு அந்த அன்பையெல்லாம் தன் தாயிடம் உள்ள அச்சத்தினுல் செயலற்றுப் போக விட்டு விடுவதுதான் அவளுக்குப் பிடிக்கவில்லை.

"உனக்குத் தெரியாதம்மா. அவர் அப் படி ஒதுங்கிப் போவதால்தான் அந்த வீட் டில் கொஞ்சமாவது நிம்மதியிருக்கு. வெளிப் படையாய் அவர் எனக்கு ஒரு ரவிக்கைத் துணி வாங்கிக் கொடுத்துட்டால்கூட அதைப்பத்தி அவர் அம்மா எத்தனை நாள் வரை குத்திப் பேசிண்டே இருப்பாள் தெரி யுமா, 'பெண்டாட்டி தாஸன்' அப்படின்னு?"

"இதென்னடி அதிசயம்! பெண்டாட் டிக்குப் புருஷன் வாங்கித் தந்தால் அது ஒரு தப்பா? பெண்டாட்டிக்குத்தானே தரான்? வேறு எவளுக்கோ தந்துடலையே!"

"சம்பாத்தியத்தையெல்லாம் அப்பா, அம்மா, கூடப்பிறந்தவர்கள் இப்படின்னே அவர் செலவழிச்சுட்டால் என் மாமியாருக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கும்."

"அதுதான் பின்னே பிள்ளைக்கு ஏன் கல்யாணம் பண்ணினுள்னு கேக்கறேன். சம்பளமில்லாத வேலைக்காரி வேணுமின்னு? 'என்னம்மா அக்கிரமம் இது' அப்படின்னு

# CONTAINING OURSELVES IS OUR PROBLEM



One small factory was all we had in 1957. Yet today we have four of the most modern container-making factories in this part of the world...and we're still growing. Multi-plant operations and the latest in cans help cut packaging costs, speed up deliveries. Ensure that everyday things—food and pharmaceuticals, paints and dyes, vegetable and mineral oils—reach the consumer with their original quality intact. The demand for dependable Poysha containers is growing. In India and abroad. Our only problem now is containing ourselves.

*POYSHA: INDIA'S FASTEST GROWING CONTAINER MAKERI*

POYSHA

**POYSHA INDUSTRIAL COMPANY LIMITED**

BOMBAY • NEW DELHI • COCHIN Subsidiaries: Kaira Can Co. Ltd., Anand · Colrige Limited, Bombay

CMPI-36-103

WITH BEST COMPLIMENTS

FROM

## THE

## JUPITER GENERAL INSURANCE COMPANY LTD.

**(Established in 1919)**

**Registered Office :**

State Bank Building, Bank Street, Fort, Bombay — 1.

**TRANSACTING ALL KINDS OF GENERAL INSURANCE BUSINESS.**

உன் புருஷன்தான் ஒரு வார்த்தை கேட்கக் கூடாதோ? தலையையா இறக்கிடுவாள்?''

"என் மாமியார் சுபாவத்துக்கு இறக்கினாலும் இறக்கிடுவா! என் மாமனாரையே அந்த அம்மா ஆட்டி வைக்கறதுக்குப் பிள்ளை எந்த மூலை!'' என்று சந்திரா சிரித்தாள்.

"அது என்ன ஆம்புளைடி உன் மாமனார், வாயில்லாப் பூச்சியாய்? போய்ப் புடவை உடுத்திண்டு அடுப்பங்கரையில் உட்கார்ந்து சமைக்கச் சொல்லு.''

"அவரை ஒண்ணும் சொல்லாதேயம்மா! பாவம் என்கிட்ட ரொம்ப பரிவு அவருக்கு.''

''அவர் நல்லவர்தான். இந்த ராட்சஸிக்குத்தான் அது பொறுக்காதுன்னு தோண்றது. எதுக்கும் உன் வீட்டுக்காரர் இன்னும் கொஞ்சம் கண்டிப்பாய் இருக்கணும். தங்கைகளெல்லாம் விதவிதமாய் ஜரிகையில் மின்னறபோது நீ மட்டும் இப்படிக் கசங்கின நூல் புடவையில் காலம் தள்ளறியே! சம்பாதிக்கறதை யெல்லாம் அவளுக்கேதான் தத்தம் பண்ணிடனுமா? அவளவளுக்குப் புருஷன் இல்லை?''

அன்றாடம் இதுபோன்ற விவாதங்கள் தாம்.

பாலு வந்தான். மாப்பிள்ளை உபசாரம் விமரிசையாய் நடந்தது. காமாட்சியும் அவள் மருமகள் ஜயமும்தான் இனிமையான தின் பண்டங்கள் தயாரித்திருந்தனர். ஜயத்தின் கணவன் முகுந்தன் காமாட்சியின் ஒரே மகன்.

தரையில் கிடத்தப்பட்டிருந்த இரண்டு மாத மகவின் பக்கத்தில் ஒரு வெள்ளிக் கிலுகிலுப்பையைப் பார்த்தபோது காமாட்சிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. கைக்குழந்தைக்கு அதைப் பிடித்துக்கொள்ளத் தெரியவில்லை. கிலுகிலுப்பையின் அழகினாலும் ஒலியாலும் கவரப்பட்ட ரவி-முகுந்தனின் குழந்தை- மெள்ள அதன் அருகில் வந்தான். இன்னும் ஒரு வாரத்தில் அவனுக்கு இரண்டு வயது நிறைவதற்கு இருந்தது. அருகில் வந்த அவன் கிலுகிலுப்பையை எடுத்து ஆட்டினான். அதன் அசைவின் மணியோசை அவனுடைய ஈரச் சிற்றிதழ்களினின்று சிரிப்பாக ஒலித்தது.

''பாத்தி, சத்தம்!''

காமாட்சி விரைந்து வந்தாள். "கண்ணு ரவி, சின்னப் பாப்பாவின் சாமானை யெல்லாம் நீ தொடக் கூடாது தெரியுமா? எங்கே, இப்படிக் கொடு."

ரவியின் விரல்கள் இறுகிக் கொண்டன தளிர்ச் சதையைப் பிரித்துக் கிலுகிலுப்பையை மெல்ல விடுவித்த காமாட்சி அதைச் சின்னப் பாப்பாவின் கையில் வைத்துத் தானே பிடித்துக்கொண்டு ஆட்டி ஒலி எழுப்பினாள்.

''பார்த்தியா ரவி? எவ்வளவு அழகாய்ச் சத்தம் வரது பார்த்தியா? நீ அங்கேயே நின்னுண்டு வேடிக்கை பாரு."

''பாத்தி, எங்கிட்ட குடு, எங்கிட்ட..."

எட்ட வந்த இளங்கரத்தை அவள் மெள்ள ஒதுக்கினாள், ''உனக்குத் தெரியாதுடா கண்ணு! பாட்டி ஆட்டிக் காண்பிக்கறேன், நீ கேளு, என்ன? பாப்பா கூட சமத்தா கேக்கறது பாரு? அட, பாப்பா சிரிக்கறதே!"

காமாட்சி பாப்பாவை அள்ளி மடியில் போட்டுக்கொண்டாள். தலை கிடந்த இடது தொடையைத் தாளமாக மெல்ல ஆட்டிக் கொண்டே வலது கையினால் கிலுகிலுப்பையைக் குலுக்கினாள். ஒலிகள் பூச்சரமாய் உதிர்ந்தன. பாப்பாவுக்கு இன்னும் பார்க்கவோ கேட்கவோ கூடச் சரியாய்த் தெரியவில்லை. ரவியின் முகம்தான் கிளர்ச்சி கொண்டு ரோஜாவாகியது.

"பாத்தி, பாத்தி, எங்கிட்ட......" எட்டிப் பிடித்தாயிற்று. சட்டென்று நெகிழ்ந்த விரல்களிடையிருந்து பிஞ்சுக் கை பற்றுவதற்குள்

*With the Compliments of*

S. K. DESAI

**INDIA REINSURANCE CORPORATION LTD.**

Industrial Assce. Building,
Opp. Churchgate Station,
BOMBAY-1.

*With Best Compliments*

*from*

ALLIED (A To Z) AGENCIES

Damodar Valji Building,
Benam Hall Lane,
BOMBAY-4.

**SPECIALISTS IN JEEP SPARE PARTS**

பொருள் கீழே விழுந்துவிட்டது. உதைத்துக்கொண்டிருந்த பச்சை மண்ணின் காலில் அது விழ, சிறிதே ஒரு சுணக்கம் அம்முகத்தில், அழுகைக்குச் சுருதி சேர்த்தாப்போல.

“அட கண்ணு, பட்டுக்கால்மேல் அடி பட்டுடுத்தா? கிலுகிலுப்பையை அடிச்சுடலாமா? பொல்லாத கிலுகிலுப்பை, எங்க பாப்பா மேலேயா விழுந்தே?...அழாதேடா குஞ்சுக்கிளி, பாட்டி ஊதட்டுமா?” மடியில் கிடந்த பாப்பாவின் பாதங்களைக் கிழவி தொட்டு ஊதி முகர்ந்து முத்தமிட்டாள்.

“அந்தண்டை போடா ரவி, வெறும் ரெட்டைவால். அடி ஜயம், வந்து ரவியைத் தூக்கிண்டு போ. சின்னக் குழந்தையின் கால்மேல் கிலுகிலுப்பையைப் போட்டுட்டான் பார். இதுவும் ரெண்டுங்கெட்டான். என்னத்தைக் கண்டது? மாப்பிள்ளை ஏதோ தன் குழந்தைக்குன்னு வாங்கி வந்திருக்கார். அதை இது போய் எடுத்து நாளைக்கு ஒரு பொல்லாப்பு எதுக்குடியம்மா? வந்து எடுத்துண்டு போ ரவியை.”

பாலு போய்விட்டான்.

“என்னடி சந்திரா, புடவையா உனக்கு?”

“ஆமாம்மா, கடையிலே ஒரே மாதிரி புடவை மூணு இருந்துதாம். பண்டிகை நாளெல்லாம் வரதேன்னு அவர் தங்கைகளுக்கும் எனக்கும்னும் வாங்கி வந்தாராம்.”

“அவர்களுக்கு வாங்கினால்தான் உனக்கும் வாங்கலாமாக்கும்! தனியாய்ப் பெண்டாட்டிக்கு மட்டும்னு வாங்கி வந்துட்டால் குடி முழுகிடுமா?”

“சரிதான் விடும்மா. அந்த மட்டும் ஏதோ ஆசையாய் வாங்கி வந்தாரென்று இல்லாம...... ”

“அது சரி. அபூர்வமான காரியம்தான். ஊருக்கும் மழை பெய்யணுமோல்லியோ! புடவையில் ரெண்டே இழைதான் ஜரிகை போட்டிருக்கு. இன்னும் கொஞ்சம் போட்டிருக்கலாம், போகட்டும். வாங்கணும்னு தோணித்தே, அதைச் சொல்லு. உனக்குப் புடவை, குழந்தைக்கு வெள்ளிக் கிலுகிலுப்பை. இப்போதான் நன்னாயிருக்கு. ஒரு மனுஷனுடைய கடமை இல்லையா இது? பெண்ணைக் கொடுக்கிறவா அவள் நாதியில்லாம சாகணும்னு கொடுக்கறா?”

அலுவலகம் சென்றிருந்த முகுந்தன் இரவு ஏழரை மணிக்கு வீடு திரும்பினான். கைகளில் இரண்டு அகலமான அட்டைப் பெட்டிகள்.

“அம்மா, ரொம்ப களைப்பாயிருக்கு, காப்பி கொடு” என்றான் உள்ளே நுழைந்தபோதே. காமாட்சி கொண்டு வந்த பானத்தை ஆவலாய்ப் பருகத் தொடங்கியவன் அடுத்த கணம் முகம் சுளித்துத் தம்ளரைத் தாழ்த்தினான்.

“என்னம்மா காப்பி வெறும் கஷாயமாயிருக்கு?”

“சாயங்காலம் மாப்பிள்ளை வந்திருந்தார்டா, நல்ல காப்பியாய்ப் போட்டுத் தரலேன்னா அப்புறம் மதிப்பாயிருக்குமா? பால் ஆயிடுத்து.”

“எனக்குக் கொஞ்சம் வச்சுட்டுக் கலக்கறது. நான் ஒருத்தன் மாடாய் உழைச்சுட்டு வருவேன்னு தெரியுமில்லையா? வீட்டில் வேறு பாலே கிடையாதா?”

“ஒரு தம்ளர் சந்திராவுக்காக எடுத்து வச்சிருக்கேன். பிள்ளை பெற்ற உடம்பு. அவளுக்கு ஊட்டமாய்த் தரவேணுமா?”

“நான் சம்பாதிச்சாலும் கடைசியில் எனக்குத்தான் கிடையாது போலிருக்கு.”

“ஏண்டா, கூடப் பிறந்தவளுக்குக் கொடுக்கறதுக்கா சலிச்சுக்கறே?”

“நான் சந்திராவுக்கு என்னம்மா குறை வச்சிருக்கேன்? எனக்கு நல்ல காப்பி கலக்கக் கூடாதான்னு கேட்டால் அதுக்கு இப்படியா?”



**they share in our future . . .**

Prudent people, to provide for their children's future, often invest their savings in Tata enterprises. Among the thousands of individual shareholders, many are people of small means who cannot afford to take chances. They rely upon Tata enterprises to safeguard their investment and ensure an adequate return.

Every Tata enterprise is deeply conscious of the obligation which this trust places upon it. Throughout its career, the House of Tata has endeavoured to live up to this trust, and the interests of the smaller investors have always been kept in mind in the determination of its policies.

TATA INDUSTRIES *Private* LIMITED

*With Best Compliments*

*from*

# DEVRAM AKHAI & CO.

MANGALDAS MARKET
3rd LANE
BOMBAY-2.

**C. P. GOODS DEALERS.**

" வேணும்னு ரவிக்காக எடுத்து வச்சிருக்கற பாதிக் கிண்ணம் பாலிலேருந்து கொஞ்சம் எடுத்துண்டு வரட்டுமா ?"

" வேணும் வேணும். குழந்தையுடையதை எடுக்காதே. "

அவன் பானத்தை அருந்தி முடித்துத் தம்ளரைக் கீழே வைத்தவுடன் அது வைக்கப்பட்ட ஒலியேபோல் அவளுடைய கேள்வி புறப்பட்டது.

" அட்டைப் பெட்டிகளில் என்ன ?"

அவன் ஒருகணம் தயங்கிவிட்டுத் திறந்து காட்டினன். ஒன்றில் டெரிகாட் சேலே. மற்றதில் சின்னஞ்சிறு வெல்வெட் ரோம்ப்பர்.

காமாட்சியின் கண்கள் மலர்ந்தன. துள்ளிக்கொண்டு அருகில் வந்தாள். " ரொம்ப அழகாயிருக்கே ! இந்த நிறம் சந்திராவுக்கு ஏர்வையாய் இருக்கும். குழந்தை ட்ரெஸ் தான் கொஞ்சம் பெரிசு. ரெண்டுமாசக் குழந்தைதானே......"

" இல்லே, ரெண்டு வயசுக் குழந்தை."

" ஓ. " காமாட்சியின் குரல் கட்டையாகிவிட்டது. "இப்போ என்ன விசேஷம ?"

" ரெண்டு மாசக் குழந்தைக்கு வாங்கிண்டு வந்தேன்னு முதலில் நினைச்சியே, அது மட்டும் எந்த விசேஷத்துக்குன்னு நினைச்சே ?"

" ஏதோ, ஆசைக்குத்தான்."

" அதே மாதிரி ரவிக்கும் நான் ஆசைக்காக வாங்கி வரலாமில்லையா ?"

" தாராளமாய் வாங்குடாப்பா. உன் பணம், நீ செலவழிக்கறே, யார் கேட்க முடியும் ? புடவை ?"

" ஜயத்துக்கு. "

காமாட்சி உறைந்து போனள். உதடுகள் இறுகிக் கொண்டன.

" ஏன், அப்படியே ஒண்ணு சந்திராவுக்கும் வாங்கக் கூடாதா ?"

"அவளுக்கு விதவிதமாய் எவ்வளவு வாங்கியாச்சு! வளைகாப்பு, சீமந்தம், பிரசவம், தொட்டில் எல்லாத்துக்கும் அப்பாவுக்கு மேல் நான்தானேம்மா பணத்தைப் பணம்னு பார்க்காம செலவழிச்சிருக்கேன்? எவ்வளவு விமரிசையாய் ஒவ்வொண்ணும் செஞ்சேன்! குழந்தைக்கும்தான். எல்லாம் தெரிஞ்சிருந்தும் இப்படி பேசறேயே அம்மா! ஜயத்துக்கு நான் ஒரு துணி வாங்கி எத்தனை காலமாச்சு"!

"சரிடா சரிடா; நிறைய வாங்கிக் கொடேன், யாரு இங்கே வேணுங்கரு? இதில் நானும் என் பெண்ணும்தான் கடைசியில் அன்னியம். நீ ரொம்ப மாறிட்டேடா முகு! கல்யாணத்துக்கு முந்தி நீ இப்படி இல்லவே இல்லே. அம்மான்னு எத்தனை ஆசையாயிருந்தே! எல்லாம் அவள் போட்ட மந்திரம்தான். சாதுமாதிரி இருந்துண்டு..."

"அம்மா, எதுக்கு இப்படியெல்லாம் வாய்க்கு வந்ததைப் பேசறே? ஒரு வார்த்தைக்கு ஒன்பது வார்த்தையா? அடுத்த வாரம் ரவிக்கு ரெண்டாவது ஆண்டு நிறைவு வரதேன்னு குழந்தைக்கு வாங்கினேன். அப்படியே நல்ல நாளில் ஜயமும் புதிசு உடுத்திக்கட்டுமேன்னு..."

"சந்திராவும் குழந்தைக்கு அத்தைதானே? அவளுக்கும் நல்ல நாளுக்காக ஒண்ணு வாங்கித் தந்தா குடியா முழுகிடும்? இப்ப நீ ஒண்ணும் தரணும்னு நான் சொல்லலே. நீ கொடுக்காம என் பெண்ணுக்கு ஏதும் குறைஞ்சு போயிடாது..."

முகுந்தனுக்குக் கோபம் வந்தது. "போதும்மா. நான் கொடுக்காமதான் இது வரை சந்திராவுக்கு எல்லாம் நடந்திருக்கா? சின்ன வயசிலேருந்து நான் இந்தக் குடும்பத்துக்காகச் செருப்பாய் உழைச்சேன். இப்போ சந்திராவை நல்லபடியாய் 'ஸெடில்' பண்ணியாச்சில்லே? இனிமேல் இந்தத்



If you bank well
with the Bank of India,
you can well bank
on the Bank of India.

BANK OF INDIA

RAAS/P/32 B

From

A WELL - WISHER

தேய்ந்த செருப்பை நீ தூக்கி விட்டெறியறதில் ஏதும் ஆச்சரியமில்லே."

முகுந்தன் அட்டைப் பெட்டிகளைத் தரையில் வீசிவிட்டு உள்ளே சென்றான். அந்தப் பொருள்களை எத்தனை ஆசையாக வாங்கி வந்திருந்தான்! முதல் முதலாக ஜயத்திடம் அவற்றைக் காட்டி அவள் முகம் இதழ் விரியும் மலர்ச்சியைத் தனிமையில் கண்டு பூரிக்க எண்ணினானே! அம்மா அவைகளைக் காட்டச் சொன்னபோதே அந்த அந்தரங்கச் சுவையின் நாடி நசுங்கி விட்டது. அதன் பிறகு அவள் வார்த்தைகள்! சே, நன்றியற்றவர்கள்.

காமாட்சி ஒருகணம் அதிர்ச்சியுற்று நின்ற பின் அழத்தொடங்கினாள்.

"என் பிள்ளை...........என் தங்கமான பிள்ளை...........அவனை எப்படி மாத்திட்டா! இவன் இப்படி பெண்டாட்டி தாசனாய் ஆயிடுவான்னு நான் நினைக்கவே இல்லையே...... இப்ப நான் என்ன சொல்லிட்டேன்? கூடப் பிறந்தவள் கிட்ட அன்பாய் இருக்கணும்னேன். அது ஒரு தப்பா? அண்ணன் தங்கைக்குள் ஆகவொட்டாமல் பண்ணிட்டாளே அந்தக்கள்ளி......"

"ஏ காமாட்சி, என்ன அழுகை இது? எதுக்கு இப்படி ஒப்பாரி வைக்கறே?" என்று கடிந்துகொண்டே உள்ளே நுழைந்தார் உலாவச் சென்றிருந்த அவள் கணவர்.

"இன்னும் உயிரோடு இருக்கேனேன்னுதான்..."

"இந்தா காமு, இப்ப நிறுத்தப் போறியா இல்லையா?"

இல்லை என்றுதான் கேவல்கள் கூறின.

"அழறதுதான் அழறே, விஷயத்தைச் சொல்லிட்டாவது அழுது தொலை."

"ஆமாம், இந்த வீட்டில் எல்லாருக்கும் நான்னா இளப்பம் தான்...........அவள்தான் மூலகாரணம்......"

"யாரைச் சொல்றே?"

"எல்லாம் உங்க அழகான நாட்டுப் பெண்ணைத்தான் சொல்றேன்."

"சேசே, அந்தப் பெண்ணைச் சொன்னால் மகா பாவம். நல்ல பெண், ரொம்ப சாது."

"அப்படித்தான் தோணும் உங்களுக்கு. மேலும் கீழும் இரண்டுதரம் நடந்து மாமனார் கிட்ட நல்ல பேர் வாங்கிடறது. அத்தனையும் பசப்பல். உள்விஷயம் ஆம்பிளைகளுக்கு என்ன தெரியும்? வீட்டோடு இருந்து பழகறவள் நான்தானே? அசல் சொரூபம் உங்களுக்கென்ன தெரியும்னேன். நீங்க ஒண்ணும் பரிஞ்சுண்டு வரவேணும்..." காமாட்சி விடாமல் விசித்துக்கொண்டே அத்தனையையும் கோர்வையாகவே பேசினாள்.

"ஆமாம், இதென்ன தரையில் புதுத் துணிகள் இறைஞ்சு கிடக்கு? எடுத்து வைக்கிறது தானே?"

"அவனவன் தன் பெண்டாட்டி பிள்ளைக்கு வாங்கிண்டு வரான். இங்கே யாருக்கு என்ன ஆச்சு?"

நிற்கமுடியாமல் தொய்ந்தவள்போல் அவள் அந்த ஆடைகளின் அருகே உட்கார்ந்துகொண்டாள். துக்க மிகுதியால் கண்களைப் பொத்திக்கொள்ளும் சாக்கில் கணவரின் பார்வையிலிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு, மகன் தன் மனைவிக்காக வாங்கிவந்த உடையின் தரம் எத்தகையது என்று ரகசியமாய் ஆராயலானாள். ✩



VOLTAS

# The Crystal is India's No. 1 air conditioner

**No. 1 in sales · No. 1 in performance · No. 1 in service**

Best built, best serviced, most wanted... *Crystal* Room Air Conditioner by **VOLTAS**

**VOLTAS LIMITED,** Bombay • Calcutta • Madras • New Delhi • Bangalore • Lucknow • Cochin • Ahmedabad • Secunderabad • Kanpur • Jamshedpur

3394 A/2

WITH BEST WISHES

FROM

**RODIO FOUNDATION ENGINEERING LTD.**

**and**

**HAZARAT & CO.**

**CONTRACTORS FOR SPECIAL FOUNDATIONS**

# தமிழ் நாட்டு மேடை

நா. பார்த்தசாரதி

தமிழ் நாட்டுச் சொற்பொழிவு மேடை, நாடக மேடை, இசை மேடை, திரைப்பட மேடை, பத்திரிகை, புத்தகம் ஆகிய இலக்கிய மேடை என்னும் எல்லாவற்றையும் பொறுத்த ஒரு பொதுவான கணிப்பை இந்தக் கட்டுரையில் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவற்றில் நாம் பெருமைப்பட முடியாத சில நிலைகள் இன்னும் உள்ளன.

மேற்கண்ட துறைகளில் செய்யப்படும் எல்லா விமர்சனங்களிலிருந்தும் படைப்பாளிகள் சுலபமாக ஒரு வாதத்தைச் சொல்லித் தப்பிவிடப் பார்க்கிறார்கள். என் ஆத்ம திருப்திக்காகச் செய்கிறேன்; உங்கள் குறைகள் பற்றி எனக்குக் கவலை இல்லை என்று சொல்லி எளிதாகப் பலர் தப்பிவிட முயலுகிறார்கள். இந்த எல்லாத் துறைகளிலும் இவற்றை ஒத்த வேறு பல துறைகளிலும் ஆத்ம திருப்தி என்பது படைப்போன், நுகர்வோன் இருவரையும் பொறுத்த விஷயமே ஒழியத் தனியான ஒருவரை மட்டும் பொறுத்த விஷயமில்லை என்பது மறைக்கப்படுகிறது. நுகர்கிறவனுடைய ஆத்ம திருப்தியும் சேர்த்துத்தான் கணக்கிடப்பட வேண்டும். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் சுவைகளின் இயல்பைப்பற்றிக் கூறும்போது எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரக்கூடிய ஒரு தத்துவத்தை மிக அழகாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்.

''இருவகை நிலத்தின் இயல்வது
சுவையே''

(தொல்...பொருள்...மெய்ப்)

என்கிறார் அவர். இது நாடக நிலைக்கும் மெய்ப்பாட்டுக்கும் மட்டுமே கூறப்பட்டதாயினும் மேலே கூறிய எல்லாவற்றுக்குமே பொருந்தும். எவ்வாறு பொருந்தும் என்பதைத்தான் இனிமேல் பார்க்க வேண்டும். உய்ப்போர், துய்ப்போர் இருசாரார் நிலத்தும் சுவைத்தல் நிகழ வேண்டும் என்பது இந்தச் சூத்திரத்தின் பொருள். கலைக்கு உய்ப்போன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு துய்ப்போ



# shopping with KHATAU voiles

Shopping is so enjoyable when you shop for KHATAU voiles. There's such a fabulous array of colours, prints and styles. Only KHATAU bring you such a heavenly selection at such down-to-earth prices.

"LOOK FOR KHATAU MILLS' SELVEDGE MARKS ON EACH METRE"

**THE KHATAU MAKANJI SPG. & WVG. CO. LTD.**

Head Office:
Laxmi Building,
Ballard Estate, Bombay 1.

Mill: Haines Road,
Byculla, Bombay 27.

Whole Sale Clothshop:
Govind Chowk,
Mulji Jetha Market,
Bombay 2.

Retail Stores:
Hashim Building,
Veer Nariman Road,
Bombay 1.

Ganesh Wadi,
Sheik Memon Street,
Bombay 2.

Mill Premises,
Haines Road, Byculla,
Bombay 27.

*A really striking voile in a glamourous modern print. "Tobacco" shades are top fashion favourites this year and KHATAU have used them to full advantage in this elegant voile.*

any time . . . any place . . . any occasion . . . you look your best in

# Khatau
VOILES

SISTAS KMS 335

னும் முக்கியம். உய்ப்போன் நிலத்தில் விளைவதைத் துய்ப்போன் நிலமே சுவை கண்டு முடிக்க இயலும். உய்ப்போன் சுவை துய்ப்போனிடமே பரிபூரணம் அடைகிறது. ஆனால் இன்று பெரும்பாலான துறைகளில் இந்த இரண்டாவது நிலத்தைப் பற்றிக் கவலைப் படுவதே இல்லை. பொருட்படுத்துவதுமில்லை. உய்ப்போன் தன்னைத் தானே கலையின் அதிகாரியாகப் பாவித்துக் கொள்வதையே எங்கும் காண்கிறோம். இந்த நிலை மாற வேண்டும். மாறியே தீரும்.

**சொற்பொழிவு மேடை :**

துய்ப்பவர்களை எடை போடாமல் சம்பந்தமில்லாமல் பேசப்படும் வழவழவென்ற பேச்சுக்கள் மேடைகளில் அதிகமாக நிகழ்கின்றன. கேட்போர் தொடர முடியாத சொற்பொழிவுகள். எதைக் கேட்க கூட்டப்பட்ட கூட்டமோ அதைக் கேட்கவே முடியாமல், கிடைத்ததை அல்லது தோன்றியதைப் பேசும் மொழித்திறமை மட்டுமே உள்ள பேச்சாளர்கள். தமிழ் மேடைச் சொற்பொழிவில் அடுக்கு மொழி, மோனை, சவடால் போன்ற புற அம்சங்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம் கருத்துக்குத் தரப்படுவதுல்லை. மேடை என்ற உய்ப்போர் நிலத்துப் பேச்சு அவை என்னும் துய்ப்போர் நிலத்து இரசிகத் தன்மையோடு கலப்பதே இல்லை. இடம், பொருள், இருப்போர் நிலைமை தெரியாத பேச்சுக்களும் அதிகம். மொழிப் பிழையின்றிப் பேச வேண்டும் என்று முயலும் போதே அப்படி முயலுபவர்களாலேயே செய்யப்படும் மொழிப் பிழைகள் உச்சரிப்புப் பிழைகள் ஏராளமாயிருக்கின்றன. சொற்பொழிவை விட நீளமான தலைமையுரை, தொடக்கவுரையை விட நாலு மடங்கு பெரிய முடிவுரை, கடைசி சிட்டி பஸ் நேரம் முடியும் போது ஆரம்பிக்கும் முதற் பேச்சாளரின் ஆரம்பம், எல்லாவற்றையும் பார்க்கும்போது பெரும்பாலான கூட்டங்கள் கேட்போரை இன்னொரு நிலமாகக் கருதாமலேயே செயல் படுகின்றன. முழுமையாகத் தமிழ் அறிந்தவர்கள் மட்டுமே உள்ள கூட்டத்தில் தமிழில் பேசாமல் ஆங்கிலத்திலோ இந்தியிலோ பேசுவதும், முழுவதும் ஆங்கிலமே அறிந்தவர்கள் கூட்டத்தில் தமிழில் பேசுவதும் போன்ற நிகழ்ச்சிகளும் இங்கு அதிகம். பேசுபவர் சிலர், கேட்பவர் பலர். மேடை சிறிது, அவை பெரிது என்ற உணர்வே பலருக்கு இருப்பதில்லை. இரங்கற் கூட்டத்தில் நகைச்சுவை, நகைச்சுவையில் ரசக் குறைவு, பெண்கள் நிறைந்த கூட்டத்தில் அவர்கள் கூசித் தலை குனியும் விரசம், இலக்கிய மேடையில் அரசியல், அரசியல் மேடையில் வேதாந்தம், எல்லா நிலக் குழப்பமும், இங்கு உள்ளன. பதினைந்து நிமிஷப் பேச்சுக்குப் பன்னிரண்டு நிமிஷ விளிப்புரை கூட உண்டு.

**பதச் சேர்க்கை :**

"தரணியிலே பரணி பாடும் தமிழ்க் குலத்தீர் ! சிங்கக் குருளைகாள் ! சீறியெழும் மறத் தமிழர் திலகங்காள் ! ஆராஅமுதனையீர் ! அருமைத் தமிழ்ச் செல்வங்களே ! வாராது வந்த மாமணி போல் ஓராயிரம் சூளுரைகள் உரைத் தெழுந்த காளைகளே" —என்ற அர்த்தத்துடனே, அர்த்தமின்றியோ வார்த்தைகளைக் குப்பையாய்க் கொட்டிக் குவித்து கீரையையும் ரோமத்தையும் கலந்து கடைந்தது போல் கவிதை நடையில் சாதாரண அர்த்தமும் கூடத் தர முடியாத பதச் சேர்க்கைகளை அள்ளித் தெளித்து விளிப்புரையே விரிந்து...பேசப்படுபொருள் சென்று தேய்ந்திறும் "சொற்பெருக்கு"க்களே இன்று சண்டமாருதங்களாகப் பேர் பெறுகின்றன. பக்குவமடைந்த மொழியில் இவை சிறுபிள்ளைத்தனமான காரியங்களாகவே கருதப்படும். பல்லாயிரம் வெறும் வார்த்தைகளைத் தெரிந்து கொள்ள ஒரு சொற்பொழிவு தேவையில்லை, நல்ல அகராதி ஒன்றே போதும்.

**மூவகை நயங்கள் :**

சொற்கள் பேசும்போதோ, எழுதும் போதோ மூன்று விதங்களால் பொருள் நயம் தருகின்றன. அவற்றுக்கு அவாய் நிலை, அண்மை நிலை, தகுதி நிலை என்று பெயர்.

# N. JAMNADAS & CO.

**Recognised Travel Agents & Freight Brokers**

16, Bank Street, Fort, Bombay-1 (BR)

Phone : 253871 (8 lines)
Telex : 2549 NJTOURS BY

**Members : TAAI — ASTA — UFTAA — PATA.**

**RECOGNISED BY THE GOVERNMENT OF INDIA, LEADING AIRLINES & SHIPPING COMPANIES.**

**BRANCHES :**

**Calcutta :**
6, Lyons Range
Phone : 223264
Telex :
589 NJTOURS CA

**New Delhi :**
Hotel Metro, Janpath
Phone : 44255 & 44511
Telex :
526 NJTOURS ND

CABLES : "ENJAYTOURS".



**WITH BEST COMPLIMENTS**

**FROM**

# A WELL-WISHER

இந்த மூன்றையுமே இன்று பேசும் பேச்சு வாக்கியங்களிலும், எழுத்து வாக்கியங்களிலும் காண முடிவதில்லை.

சில இடங்களில் ''சாப்பிட்டான் ''என்று மட்டும் எழுதினுலே "எதைச் சாப்பிட்டான்" என்பதை அவாவி உணர முடியும். அதற்குத்தான் "அவாய் நிலை" என்று பெயர். இன்னும் சில இடங்களில் "எதைச் சாப்பிட்டான்" என்பதையும் சேர்த்தே வெளிப்படையாகச் சொல்ல வேண்டியிருக்கும். ஆனுல் இன்று அவாய் நிலையாகவே விட்டுவிட வேண்டிய இடங்களில் சொற்களை இட்டு நிரப்பியும் சொற்களை இட்டு நிரப்பாவிட்டால் பொருள் குழம்பக்கூடிய இடங்களில் "அவாய் நிலையாக" விட முயன்றும் தடுமாறுகிற பேச்சுக்களும், எழுத்துக்களும் நிறைய வருகின்றன. மது, பால், காபி, டீ எல்லாம் விற்கிற ஒரு ஹோட்டலில் ஒருவன் பால் பருகியதைக் குறிக்கவிரும்பினுல் "பருகினுன்" என்று மட்டுமே அவாய் நிலையில் குறிக்க முடியாது. எதைப் பருகினுன் என்றும் சொல்லியாக வேண்டும். '' சைவாள்'' சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டான்" என்பதைக் குறிக்க விரும்பினுல் "சாப்பிட்டான்" என்று குறித்தாலே போதும். "குளிர்ந்த தண்ணீரைப் பருகினுன்" என்பது போலவும், "உணவு விடுதியில் உணவு உண்டான்'' என்பது போலவும் ஒன்ருே ஒன்றிறந்தனவோ ஆகிய வெற்றுச் சொற்கள் இன்றைய எழுத்திலும் பேச்சிலும் நிறைய உண்டு. அவை வெற்றுச் சொல்லாக நினைக்கப் படுவதுமில்லை.

அடுத்தது தகுந்த அண்மைச் சொல் இணையும் சிறப்பு மிக மிக முக்கியமானது. இதனை வடமொழியார் 'சொற்களின் சந்நிதி' என்பர். "அண்மை நிலைத்தன்மை'' சரியாகச் சுருதி சேராவிட்டால் பொருள் தடுமாறும். உதாரணத்திற்கு ஒருசமீபத்துப்பத்திரிகைத் தலையங்க வாக்கியம் தருகிறேன் :

"பொதுத்தேர்தலுக்கு முன் காங்கிரஸ் எதிர்ப்பில் கண்ணிழந்த கூட்டணியினர் இப்படி எல்லாம் வரும் என அறியாததுபாவமே'' என்றெழுத விரும்பிய தலையங்க எழுத்தாளர் ஒருவர்,

"பொதுத் தேர்தலுக்கு முன் கண்ணிழந்த காங்கிரஸ் எதிர்ப்பில் கூட்டணியினர் இப்படி எல்லாம் வரும் என அறியாதது பாவமே" எனஎழுதிவிட்டார். பத்திரிகையோ நூறு சத விகிதக் காங்கிரஸ் ஆதரவுக் கொள்கையுள்ள பத்திரிகை. சொற்கள் சரியான முன்னன்மை, பின்னன்மை பெற அமையாததால் ''கண்ணிழந்த காங்கிரஸ்'' என்ற இணைப்பில் காங்கிரசையே திட்டுவது போன்ற பொருள் குழப்பம் ஏற்பட்டு வாக்கியத்தின் நினைத்த பொருள் போய்விடுகிறது. நினைப்பின் தீர்மானம் பதங்களில் அப்படியே இறங்கி நிற்க உதவுவது அண்மை நிலைத் தன்மைதான். இதையும் இன்றையப் பேச்சிலும் எழுத்திலும் காண முடிவதில்லை.

இனிமேல் சொற்களின் தகுதி நிலை பற்றிக் காணலாம்.

''அவன் துன்பப்படவில்லை'' என்ருே, ''அவன் துன்பத்தைத் தவிர்க்க எண்ணினுன்" என்ருே எழுத வேண்டிய அல்லது பேசவேண்டிய வாக்கியத்தை, ''அவன் துன்பப்பட விழையவில்லை" என்று சிலர் இப்போது எழுதி வருகிருர்கள். ''விழைதல்" என்ருல் ''முனைந்து விரும்புதல்" என்று பொருள். அந்தப் பதம் இங்கே தகுதியாக நிற்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். வசனம் எழுதுவதோ, பேசுவதோ, கவிதை எழுதுவதைவிடச் சிரமமானது.

இங்கோ வாக்கியம் எழுதத் தெரியாதவர்கள் உரை நடையும், உரை நடையே எழுதத் தெரியாதவர்கள் கவிதையும், கவிதை என்னவென்றே தெரியாதவர்கள் மகாகாவியமும் எழுத முயலுவதைக் காண்கிருேம்.

''I don't want to take risk'' என்பதை நினைத்துத் தமிழில் ''நான் துன்பப்பட விழையவில்லை'' என்றெழுதுவோரும் உண்டு.

With Best Compliments
from

NEW INDIA SANITATION CO.

CENTRAL BANK BUILDING,
BRUCE STREET,
FORT,
BOMBAY.

With Best Compliments

from

H. GURU INSTRUMENTS
(PVT.) LTD.

2-A, SHAKESPEARE SARANI,

CALCUTTA-16.

முழுக்க முழுக்கத் தமிழையே படித்துக் கெட்ட சிலரும், முழுக்க முழுக்க ஆங்கிலமே படித்துக் கெட்ட சிலரும், தமிழும் ஆங்கில மும் அரைகுறையாகப் படித்துக் கெட்ட சில ரும், என்று வகை வகையாகக் கெட்டவர்கள் இங்கே நிறைய இருக்கிருர்கள். எழுத் துக்கோ, பேச்சுக்கோ பிறக்கும் நிலம், சென்று விளையும் நிலம் என இரண்டு நிலம் இருப்பதையே அவர்கள் அறிவதில்லை.

நாடகம்—திரைப்படம் :

சொற்பொழிவு மேடையை விட இரு வகை நிலத்தைப் பற்றிக் கவலைப்படாத ரஸக் குறைவுகள் நாடக மேடையிலும், திரைப்பட மேடையிலும் இங்கு மிக அதிகமாகவே உள் ளன. தோற்றம், நடிப்பு, பேச்சு, பாட்டு, ஆகிய எல்லா வகையிலும் இருவகை நிலம் புறக்கணிக்கப்படும் இடங்கள் இவை. இயல் தமிழ் பேச்சிலோ, எழுத்திலோ பொருள் உணர்ச்சி ஒன்ருல் மட்டும்தான் உய்ப்போன் நிலத்தைத் துய்ப்போன் நிலம் பிறழ உணர முடியும். ஆனல் கலைத்துறையில் நாடகமும், திரைப்படமும் பேச்சு, பாட்டு, தோற்றம், மெய்ப்பாடு ஆகிய நான்கு வகையிலும் உய்ப் போன் நிலத்திலிருந்து துய்ப்போன் நிலத் துக் குழப்பமும், பிறழ்ச்சியும் உண்டாகும் காரியங்களைச் செய்வதற்கு இடமும் நிலை களும் உள்ளன என்பதை அறிய முடிகிறது. நாடகக் கதை, உரையாடல், நடிப்பு, காட்சி கள், பாட்டு எல்லாம் உய்ப்போன் வசதிக்கும் சக்திக்கும் ஏற்பப் படைத்துக் கொள்ளப்படு வதுபோல் துய்ப்போன் சுவையை நினைத்தும் அமைக்கப்படுவதில்லை.

உய்ப்போன் நிலத்தில் சோகமாக நினைத்து நடிக்கப்பெறும் ஒரு நடிப்பு துய்ப் போன் நிலத்து நகைச்சுவையாகக் கொண்டு சிரிக்கப்படுவதும், துய்ப்போன் சிரிக்க வேண்டுமென்று உய்ப்போன் நிலத்து உண் டாக்கப்படும் ஒரு நகைச்சுவை துய்ப்போன் நிலத்துச் சிரிப்பை மூட்டத் தவறிவிடுவதும் ரஸ பேதங்கள். திரைப்பட மேடையிலும் இதே ரஸ பேதங்கள் உண்டு.

திரையில் காரணமின்றிக் கதைத் தலைவ னும் அவன் காதலியும் ஒரு பெரிய பாடலைப் பாடி முடிகிற வரை ஒரு நீண்ட பூங்காவின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி ஓடியாடித் ''தொளி கலக்குவதும்'' உண்டு. துய்ப்போன் நிலத்துக் களைப்பை உண்டாக்கும் காரியம் இது. துய்ப்போனை மடையனுக்கும் காரியமு மாகும். துய்ப்போன் எங்கே இரஸனையில் தளர்ச்சி அடையுமாறு உய்ப்போன் சோரவிடு கிருனே அங்கே மேடை தோற்கிறது. அவை மேடையை வெல்கிறது. மேடை தோற்க அவை வெல்லும் நிலைமை அதாவது கலையை வென்று விழுங்கும் நிலைமை கலைக்கே அபாயமானது. துய்ப்போன் நிலத்துப் பொருத்தமான சுவையை விளைவிக்க முடி யாத பேச்சு, தோற்றம், மெய்ப்பாடு, பாட்டு யாவுமே கலையின் ஏலாமைகளாகக் கருதப் படும். இருவகை நிலமும் விளையாத சுவை இன்பம் பயவாது. உணர்வோன் உணர்த் தப்படுவோன் என்ற இரண்டு எல்லைகளில் உணர்த்தப்படுவோன் சுவை காணுதவரை இருவகை நிலமும் நிறைவதில்லை.

இசை மேடை

நமது இசை மேடையில் தமிழ்ப் பாடல் கள் மிகக் குறைவாகவே பாடப்படுகின்றன. தெலுங்குப் பாடல்களும், இந்துஸ்தானிப் பாடல்களும் அதிகமாகப் பாடப்படுவதையும் காண்கிருேம். உய்ப்போன் நிலத்து இசை, துய்ப்போன் நிலத்து உணரப்படாமையும், புரிந்துகொள்ளப்படாமையும் உண்டு. அர்த் தமே புரியாத பாடல்களைக் கேட்டுக்கொண்டு மணிக்கணக்காக அமர்ந்திருப்பது விந்தை யாகவும், விநோதமாகவும் தோன்றுகிறது. தெலுங்குப் பாடல்களையும், இந்துஸ்தானிப் பாடல்களையும் அறவே ஒழிக்க வேண்டு மென்று கூறவில்லை. கலைக்குக் கடுமையான மொழி வரம்பு கூடாதுதான். ஆனல் அதே நேரத்தில் மேடையில் பாடும் பாட்டு அவை யால் உணரப்படாது போலியாகக் கண்மூடி ஓசையின்பத்தை மட்டும் இரசிப்பது பாட லுக்குத் தோல்வி. புரிய வைப்பதில் மேடை யும் தோற்று, புரிந்துகொள்வதில் அவையும்

Telegrams : "CHENTEX" Phone : 32 & 38

# CHENNIMALAI WEAVERS CO-OPERATIVE SOCIETY LIMITED

CHENNIMALAI, TAMIL NADU.

**Chentex**
HANDLOOM FABRICS

BEDSPREADS * TABLE CLOTHS * FURNISHING FABRICS * PILLOW COVERS

Available in an array of colours guaranteed for fastness
Recipients of First Prizes from Madras Government and
Gold Medals from Various Exhibitions

**SOLD AT ALL THE SELLING UNITS OF**

**THE TAMIL NADU (MADRAS STATE) HANDLOOM WEAVERS CO-OPERATIVE SOCIETY LTD.**
**AND**
**HANDLOOM HOUSES IN INDIA AND ABROAD**

**M. P. NACHIMUTHU, B.A., B.L.**
*President.*

*With Best Compliments from*

**THE GAEKWAR MILLS LTD.**
**BILLIMORA**

**THE NAVSARI COTTON & SILK MILLS LTD.**
**NAVSARI**

**Manufacturers of Fine & Superfine Fabrics**
**'KINGSWAY' NACOSI**

Cotton, 'Terene' and Blended Suitings, Shirtings, Printed Dress materials and Bush Shirt materials.
All Cotton Sanforized Superfine & Fine Poplins, Suitings, Dress materials, Lenos, Dhoties Etc.
Wash & Wear Drip Dry **'MINIKRIS'** Fabrics in suitings and Poplins.

**Head Office :**
Mehta House, 79-91, Apollo Street, Fort, Bombay-1.
Available at Mills Retail Shops in the Premises of :

**Messrs. HORMUSJI & SONS**
Arvind House, Opp. Harkisondas Hospital,
Charni Road, Bombay-4.

**C/o. WEEKAY SONS**
409, Sheikh Memon Street, Bombay-2.

*AND AT ALL LEADING STORES*

தோற்று ஏனோதானோவென்று நிகழும் ஒரு கலையினால் என்னதான் பயன் விளைய முடியும்? பொருளும் உணர்ந்து, இசையினிமையையும் அநுபவிப்பதுதான் உயர்ந்த இரசனை. மனிதர்களாக இருந்து இசையை இரசிப்பதிலுள்ள ஒரே பெருமை பொருளுணர்ந்து இரசிப்பதுதான். பொருளுணர்ச்சி இல்லை எனில் இசையை மனிதன் இரசிப்பதற்கும், மிருகங்கள் இசையை இரசிப்பதற்கும் வித்தியாசமே இருக்காது. மனிதன் மனிதனைப்போல் இசையை இரசிக்க வேண்டும். மிருகத்தைப்போல் இசையை இரசிக்கக் கூடாது. மனிதனின் வசதிகளை வைத்துக் கொண்டு மிருகங்களின் அசௌகரியங்களோடு இசையை இரசித்து அல்லல் படுவது எதற்காக? ஆகவே நமது இசை மேடைகளில் இரு நிலத்து உடன்பாடும் உள்ள இரசனை வேண்டும். ஏனெனில் சுவை இருவகை நிலத்தும் பிறப்பது.

முடிவாக நமது சொற்பொழிவு மேடை, நமது இலக்கிய மேடை, நமது நாடக மேடை, திரைப்பட மேடை ஆகிய அனைத்து மேடைகளிலும் ஒருவழிப் போக்கு வரவான கைக்கிளைச் சுவை நிகழாமல் இருவகை நிலத்தும் இயைந்த இரசிகத் தன்மை வர வேண்டும். அப்படி ஒரு பக்குவமான இரசிகத் தன்மை ஏற்படாதவரை நமது கலைகள் வெற்றியடைவதில் பின்தங்கி நிற்கவே நேரிடும் என்பதை வருத்தத்தோடுதான் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ★





PNB/CBI

Cultivate the Savings habit in your children, by giving them Central's Savings Book-Bank as a gift.

CENTRAL BANK OF INDIA

V C. PATEL
CUSTODIAN

With the Best Compliments of

# LAXMI STARCH FACTORY LIMITED

**Manufacturers of :**

HIGH GRADE STARCHES AND SPECIALISED DERIVATIVES
FOR TEXTILES, PAPER AND OTHER INDUSTRIES

**Head Office & Regd. Office :**

KUNDARA (KERALA STATE)

**Offices at :**

Bombay — Ahmedabad — Calcutta — Coimbatore — Madras — Hyderabad.

**Plants at :**

KUNDARA (Kerala State) and HYDERABAD (Andhra Pradesh)

**Selling Agents :**

**DAS & COMPANY.**

Bombay — Calcutta — Ahmedamad — Madras — Coimbatore

# விதிக்கு விதி

எழிலுரை மன்னன்
**புலவர் கீரன்**

[பாரதம், சுவைமிக்கதொரு காப்பியம். வடிவளவில் நாடக அமைப்பில் அமையா விட்டாலும், பயிலும் போதே நாடக உணர்வை நல்குவது. இது வில்லிப்புத்தூராரின் புலமை வெற்றியே. பாரதத்தில் வரும் துரியோதனன் மண்ணாசை கொண்டவன். அந்த ஆசை அவன் படை வலிமையையே அழித்துவிட்டது. வில்லியார், துரியோதனனைப் பேராசை கொண்டவனாகக் காட்டினாலும் இறுதியில் அவன் வீழ்ச்சியில் ஒரு அவலச்சுவையை ஏற்றி, நம் அனுதாபத்தைத் துரியோதனன் பெறுமாறு செய்துள்ளார். ஆம்; தீயவனாகவே திகழும் துரியோதனன் உயிரை விடும் இறுதித் தருவாயில் தூயவனாக மாறுகிறான். வில்லியாரின் இக்காவியக் கற்பனை இங்கே நாடகமாகியுள்ளது.]

## காட்சி — 1

பாத்திரங்கள்: கண்ணன், பாண்டவர் ஐவர், நீருள் மூழ்கியிருக்கும் துரியோதனன்.

இடம்: துவைபாயன மடு.

[பாரதப் போரின் பதினெட்டாம் நாளாகிய இறுதி நாள் போரில் சகுனி உட்பட அனைவரையும் இழந்துவிட்ட துரியோதனன், செய்வதறியாது திகைக்கிறான். கிருபனும், அசுவத்தாமாவும் மட்டுமே எஞ்சியுள்ளனர். இனி தனித்து ஒன்றும்செய்ய இயலாதெனத் தெளிந்து, இறந்தவர்களை எல்லாம் எழுப்பக் கூடியதாகத் தான் கற்று வைத்துள்ள மந்திரத்தை உச்சரித்துத் தவம் செய்ய யாரும் அறியாது துவைபாயன மடுவுக்குள் சென்று நீரிடை மூழ்கினான். துரியோதனனைக் காணாது, கண்ணனும் பாண்டவர்களும் தேடி வர, பரதவன் ஒருவன், துவைபாயன மடுவில் நீர்க்குமிழி புறத்தே வருவது கண்டு 'துரியோதனன் அங்கொளித்திருக்கலாம்' எனப் பாண்டவர்களுக்குக் கூற, கண்ணனுடன் அவர்கள் மடுக்கரைக்கு வருகின்றனர்.]

தருமர்: (கண்ணனை நோக்கி......) கண்ணா! நாம் இதுவரை பல்வேறு இடங்களில் தேடியும் துரியனைக் காண இயலவில்லை. இந்த மடுவிலும் அவன் இருப்பதாக நான் நம்பவில்லை. ஏனெனில், நீரிலிருந்து கரையேறிச் சென்ற கால் சுவடுகள் இதோ இக்கரை மணலில் தெரிகின்றனவே தவிர, நீரில் இறங்கிய கால் தடங்கள் காண முடியவில்லை...... அவன் நீரில் ஒளிந்திருந்தாலும் கூட அஞ்சியொளிந்தவனைக் கொல்வது அறமாகாது அல்லவா?......

கண்ணன்: (சிரித்தபடி) தருமரே! உமது பிறப்போடு கலந்துவிட்ட பொது அறம், இப்போது போர் அறத்தைக் கூட மறக்கச் செய்கிறது. துரியோதனனைக் கொல்வதாகச் சபதம் செய்து, பதினேழு நாட்கள் போர் செய்ததும் நீங்கள்தான். இப்போது அவனைக் கொல்வது அறமல்ல என்று தோன்றுகிறது......ம்.... அது மட்டுமல்ல; தருமரே! அறத்திலே தோய்ந்த உம் உள்ளம் துரியோதனனின் ராஜதந்திரத்தையும் கூட உணர முடியாமல் செய்துவிட்டதே!......

தருமர்: மாதவா! தாங்கள் கூறுவது விளங்கவில்லை!

கண்ணன்: தருமரே! துரியோதனன் நீரினின்றும் ஏறிச்சென்ற கால் சுவடுகள் தெரிகின்றன. இறங்கிய சுவடு தெரியவில்லை என்றீர்கள் அல்லவா? உம்மை இப்படி மயங்கச் செய்யவேண்டும் என்பதற்காகவே துரியோதனன் நீரில்

KEEP YOUR MIND AT EASE

BY KEEPING YOUR VALUABLES

IN A STATE BANK OF HYDERABAD

SAFE DEPOSIT LOCKER

No one can get at your valuables when they are in a State Bank of Hyderabad Safe Deposit Locker, because you keep the **only** key to it.

Most branches of the State Bank of Hyderabad have this facility

# STATE BANK OF HYDERABAD

இறங்கும் போது பின் பக்கமாக அடி மாறி நடந்து சென்றுள்ளான். இப்போது அவன் நீருக்குள் மூழ்கி இருக்கிறன் என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா என்ன?

வீமன் : (கண்ணன் கூறியதை அறிந்து, துரியன் மேல் கோபத்துடன்) ஆ!அப்படியா! நம்மை ஏமாற்றும் நோக்கத்துடன் அடிமாறி நடந்துள்ளான். இப்போதே நானும் நீருக்குள் புகுந்து போர் புரிகிறேன்.

கண்ணன் : (பீமனைத் தடுத்து) பீமா ! இரு! இரு...! நீ, நீருக்குள் புகுந்து போர் புரிய வேண்டாம்... உனக்குத்தான் துரியன் பண்பனைத்தும் நன்கு தெரியுமே! துரியன் எதை விட்டாலும் வீரத்தை விடமாட்டான். ''வீரனாக இருந்தால் வெளியே வா! போரிடலாம்'' என்று அழை! அவன் தானே வந்து விடுவான்.

(பீமன் உடனே நீரின் ஓரமாக நின்று கம்பீரத்துடன் துரியனைப் போருக்கழைக்கிறன்.)

வீமன் : (ஏளனச் சிரிப்புடன்) நீருக்குள் ஒளிந்த நிருபனே! வேந்தர் வேந்தே! குருகுலத்தை ஆள நினைத்து, வெறுங் குளத்தில் வீழ்ந்துவிட்ட வேந்தனே ! வெளியே வா! கங்கை மகன் வீடுமன் முதலாகக் காந்தாரச் சகுனி வரை பதினோராயிரம் அக்குரோணிப் பேரை வெங்களத்தில் வீழ்த்திவிட்டு வெட்கமின்றி வெறுங்குளத்தில் நுழைந்தாயா? வேந்தர் வேந்தே! துங்கமணி முடிவேந்தர் சுற்றிவர, துரகமும் யானையும் தொடர்ந்துவர, செங்கனக மணித் திண்மதர் ஊர்ந்து வர, வெற்றிக் கொடி பிடித்து வேழத்தில் வரவேண்டிய வேந்தர் பிரான் வெறுங்குளத்தில் அரசியல் நடத்தலாமா? வெளியே வா! விதிக்கு விதியாவேன் என்று வீரம் பேசியவனே! உருவத்தை நீ மறைத்துக் கொண்டாலும் உன்னை விடேன்! நெஞ்சறிய நீ எமக்குச் செய்த வஞ்சனையை, பொய்மொழியை, மனுநீதி தவறியதை உன் உடலைக் கிழித்து, அந்தத் தோலில் உன் உதிரத்தால் நான் எழுத வேண்டும்; வெளியே வா! அடிமாறி நீரிடைப் புகுந்து அரிய மந்திரம் நீ புகன்றாலும், அரவக் கொடியோனே! உன் கொடி மாறி, குலவும் மாலை முடிமாறி, குடிமாறிப் போமளவும் விடமாட்டேன்; வா, வெளியே! தரணி ஆள நினைத்தான் துரியன், தண்ணீரில் செத்தான் என்று புலவர்கள் சோகப் பரணி உனக்கு இசைக்காதபடி மண்ணுசை கொண்ட துரியனை வீமன் விண்ணுசை பெற வைத்தான் என்று வெற்றிப்பண் இசைக்கச் செய்வேன். வீரத்தின் சாயல் இருந்தால், வேந்தர் வேந்தா! வெளியே வா! வீரமிருந்தால் வெளியே வா!

(அடுத்த கணம் தண்ணீரினின்றும் பேரலை மேலெழும்பத் துரியோதனன் வெளிப்பட்டான். தலைமுதல் ஒழுகும் நீரோடு தள்ளாடித் தள்ளாடிக் கரை சேர்ந்தான். அயர்வு உடம்பில் தெரிந்தாலும், அமைதி முகத்தில் குடிகொண்டிருந்தது... கரையேறி வந்த துரியோதனனைக் கண்ணன் புன்முறுவலுடன் நோக்க, கண்ணனை ஏசுகிறன் துரியோதனன்.)

துரியோதனன் : (கோபத்துடன்) சிரிக்கிறாயா கண்ணனே! நன்றாகச் சிரி...! வஞ்சனையால் பாண்டவர்கட்கு வெற்றி தேடியவன் என்று வரலாறு உன்னைக் கண்டு பின்னல் சிரிக்கும். இப்போது நீ சிரித்துவிடு !...... ஆனால் உன் சிரிப்பை வெற்றிச் சிரிப்பு என்று மட்டும் கருதி விடாதே; அது வீரத்துக்கே இழுக்கு... மலைத்தபோர் ஒவ்வொன்றிலும் பாண்டவர்க்கு மறைமுகமாக உன் வஞ்சனையைப் பயன்படுத்திய பாவி!......... உன்னைச் சொல்லிக் குற்றமில்லை...... குலத்திலே நீ இழிந்த குலம்... அதனல் அந்தக் குணம்...... போ...போ... நிலத்தை வாங்கி நீ நினைத்தவர்க்கு கொடு...போ...!

கண்ணன் : (புன்முறுவலுடன்) எப்படிப் போவது துரியனே ! இன்னும் நீ உயிரோடு இருக்கிறாயே...! பாண்டவர்கள் சபதம் முடியவில்லை...... நீ மகா வீரன்......

CC.G.4.69

# It's NEW




## Caltex Custom Five Star the best motor oil your money can buy

**THIS NEW MOTOR OIL EATS UP THE DIRT THAT WEARS OUT YOUR ENGINE**

**★ It gets dirty—so your engine won't**
As it flows around your engine, new Custom motor oil scrubs off varnish and sludge and abrasive particles. It cleans up the bearing surfaces. Unclogs the oil passages. Washes away, and keeps away, the harmful deposits that can make your engine old before its time.

**★ Oilier at all engine temperatures**
Even when your engine is cold in the early morning, and an ordinary motor oil would be thick and sluggish, new Custom flows easily over the bearing surfaces. Makes starting easier, cruising smoother—protects your engine, not just against changes in climate, but fully over all its operating temperatures.

**★ Armour-plates the inside of your engine**
New Custom motor oil has special zinc-phosphorous additives that bond the oil to the metal itself. They make sure that no bearing is ever without a film of oil, no internal metal surface is ever without protection from acid, rust and corrosion.

**★ Worth its weight in performance**
Your car will run better and easier with new Custom motor oil. This can give you better acceleration, more miles per litre. Your car will also last longer, with less wear and less trouble. And this can save you a great deal of money.

**★ It's the world's most advanced motor oil**
Developed by Caltex research, tested in all kinds of engines and climates by Caltex's world-wide operations, new Custom Five Star motor oil meets the lubrication requirements of all cars, exceeds all previous standards, is the most efficient and comprehensive lubricating oil that modern technology can devise.

*Spend a little—to save a lot. Change to the best motor oil your money can buy.*




**NOW...AT ALL CALTEX STATIONS**

CALTEX (INDIA) LIMITED

உண்மையிலேயே உன்னை அப்படித்தான் மதிக்கிறேன்... வா..., பாண்டவர்களோடு போர் செய்......

துரியோதனன் : (கோபத்துடன்) செய் கிறேன். இவரில் என்னோடு போருக்கு வருபவர் யார் ?

கண்ணன் : சந்தேகமென்ன துரியனே! வீமன் தான். அவன்தான் உன்னைக் கொல்வதாகச் சபதம் செய்துள்ளான்.

துரியோதனன் : (கோபத்துடன் உறுமியபடி...) ம்... போர் எங்கு நடக்க வேண்டும்

கண்ணன் : பக்கத்திலே உள்ள சமந்த பஞ்சகத்தில்...

துரியோதனன் : (ஏளனத்துடன்) ஏன், உன் வஞ்சகச் செயலை நடத்த அங்கேதேனும் திட்டமிட்டுள்ளாயா?

கண்ணன் : (புன்முறுவலுடன்) துரியனே! ஏமாற்றத்தின் எல்லையில் மனிதன் வெறியனாகிறான். அந்த வெறியோடு நிறைவேறாத ஆசையின் நினைவும் சேர்ந்து விட்டால் அவனுக்கு நியாயம் அநியாயமாகவும், நன்மை தீமையாகவும் தான் தெரியும். வஞ்சனை எது, நீதி எது என்பதை முடிவு செய்ய வேண்டியவர்கள் நாமல்ல......... பிற்கால மக்கள். அதனால் என்மீது சீற்றங் கொள்ளாதே... பலரறியப் போர் செய்ய வேண்டாமா? அதனால் தான் சமந்த பஞ்சகம் ஏற்றது என்றேன்... போகலாமா, துரியோதனா?

துரியோதனன் : (கோபத்துடன்)...ம்... போரில் பயன்படுத்த வேண்டிய கருவி என்ன? ஏனெனில் தனி இருவருக்கு நடக்கும் போர் இது.

கண்ணன் : உண்மை! எந்தக் கருவி வேண்டுமானாலும் நீயே தேர்ந்தெடுக்கலாம். பீமனும் அதையே ஏற்பான்... சொல் எந்தக் கருவி.

துரியோதனன் : (சிறிது சிந்தித்து...) கதா யுத்தம்...

வீமன் : (எக்களிப்புடன்) ஆ!... வா!... இன்றுதான் என் கையில் உள்ள சத்துரு காதினி என்ற கதை, முடிக்கப் போகிறது உன் கதை !

[கண்ணனுடன் பாண்டவர் ஐவரும் முன் செல்ல...பின்னால் தளர்ந்து தள்ளாடி வருகிறான் துரியன்... சிறிது தூரம் வந்தவுடன் துரியோதனன் கண்களில் கண்ணீர் படலமிடுகிறது. முன்னால் செல்லும் பாண்டவர்கள் ஐவரையும் நோக்கி...துரியோதனன் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான்.]

துரியோதனன் : (பெருமூச்சு விட்டு... வெறுப்புடன்)...ஹூம்... அதோ செல்லும் தருமன் நால்வருடன் பிறந்தான். அந்த நால்வரும் உயிருடன் இருக்கின்றனர். அவன் தம்பியர்கள் புடைசூழப் பம்பியெழ நடக்கின்றான்...நான் நூற்றுவரோடு பிறந்தேன்.....இன்று என்னுடன் யாருமில்லை... தனியனாய்... தன்னந்தனியனாய்...... ஒரே மனிதனாய்...ஒற்றை மனிதனாய் உலவுகின்றேன். (கண்ணீர் வர...) அதோ, அதோ செல்லும் தருமன் நடையிலே ஒரு கம்பீரம்... அவன் முதுகிலே... ஆம், தம்பியுடையான் படைக்கஞ்சான் என்ற மொழியின் பொருள் தெரிகிறது. அது மட்டுமல்ல...அவன் முதுகில்...என் தோல்வி... என் பேராசையின் விளைவும் எழுதப்பட்டிருக்கிறது...அவன் முதுகும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது...... எ...ன்...னை...ப்...பா...ர்... (துரியோதனன் தள்ளாடி கீழே சாய்ந்து விடுகிறான். ஒரே கணம். அடுத்த கணம்...அவன் வீரம் அவனை எழுப்பி விடுகிறது. துரியோதனன் மனச் சோர்வு கொண்டுள்ளதை உணர்ந்திருந்த தருமன் உள்ளத்திலும் ஒரு போராட்டம். கண்ணனுடன் செல்லும் தருமன் திடீரென நிற்கிறார். கண்ணன் ஆச்சரியப் பட்டு...)

கண்ணன் : என்ன! தருமனே! ஏன் நின்று விட்டாய் !...

தருமன் : ஒன்றுமில்லை... கண்ணா ! துரியோதனன் வரட்டும்.

WITH BEST COMPLIMENTS FROM

# Parikh & Co.

105, APOLLO STREET

FORT

BOMBAY-1.

*With Best Compliments*
*from*

# T. ALIMAHOMED & CO.

**DEALERS IN AERATED WATERS, BAKERY, CONFECTIONARY, ICE-CREAM, AND CANDY REQUISITES**

144, SARANG STREET,
BOMBAY-3 (BR).

Phone : 32 71 31

Grams :AERATORS

கண்ணன் : (பலமாகச் சிரித்து ...) ஓஹோ! தருமனே! எங்கே துரியோதனன் போருக்கு வராமல் ஓடிவிடுவானோ என்று எண்ணமா?...கவலைப் படவேண்டாம். துரியோதனன் வீரன்...அப்படியெல்லாம் ஓடி விடமாட்டான்... அதோ வருகிறானே, வரட்டும்.

தருமன் : (சிறிது கோபத்துடன்...) கண்ணா! எப்போதும் உனக்கு விளையாட்டுத் தானா? துரியோதனன் ஓடிவிடுவான் என்று நான் நினைக்கவில்லை...இப்போது என் மன நிலைக்கு அவன் ஓடிவிட்டாலும் நல்ல தென்றே நினைக்கிறேன். கண்ணா! (தயக்கத்துடன்)...கண்ணா! துரியோதனனுடன் பீமன் போர் செய்வதை நான் விரும்பவில்லை.

கண்ணன் : (ஆச்சரியத்துடன்) ஏன், பீமன் தோற்றுவிடுவான் என்றா...?

தருமன் : (கோபமுடன்...) இல்லை, கண்ணா! நாடு முழுவதையும் துரியோதனனுக்கே கொடுத்துப் போரின்றி வாழவே என் உள்ளம் விரும்புகிறது.

கண்ணன் : (சிரித்தபடி...) தருமனே! நீர் நாடு கொடுக்கலாம். அவன் வாங்கிக் கொள்ள வேண்டாமா ?...

தருமன் : (வியப்புடன்) என்ன கண்ணா! அப்படிச் சொல்கிறாய் ?...

கண்ணன் : ஆம்! துரியோதனன் வீரத்தால் அமைந்த அரசை ஆளும் வேந்தனே தவிர, கொடையால் கிடைத்ததை கொள்ளும் குருகுலத்தவன் அல்ல... நீர் வேண்டுமானால் உம் சமாதான உள்ளத்தைக் காட்டி நாடு கொடுத்துப்பாரும்... இதோ, துரியோதனனே வந்துவிட்டான்...

[ சோர்வும் வெறியும் கலந்த கண்களுடன் நோக்கும் துரியோதனனைக் கனிவு மிகுந்த கண்களுடன் பார்த்தார் தருமர்... தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தார்.]

தருமர் : (தயக்கமுடன்...) துரியா! சகோதரனே! வீரக்களத்தில் விளையாடி வெற்றிகளை மலைபோல் குவித்து, அந்த வெற்றியின் வெறியில், ஆற்றல் குறைந்து விட்ட மாற்றானிடம் ஆணவத்துடன் பேசும் தருமனாக என்னை நினைக்காதே! போரின் முடி வழிந்து, அறத்தின் நிலையறிந்து, அன்பின் திறமுணர்ந்து நட்புக்கு ஏங்கும் தருமன் பேசுகிறேன். எப்படியோ! இதுவரை நிகழக் கூடாதன நிகழ்ந்து இருதரப்பிலுமாகப் பதினெட்டாயிரம் அக்குரோணிச் சேனைகள் பாழ்பட்டு விட்டன. சகோதர தருமத்தின் அடிப்படையை அறிந்து கொள்ள மட்டுமே, இந்த அகிலம் இவ்வளவு அக்குரோணிச் சேனைகளை இழந்திருக்கிறது. இனியாவது துரியா? நான் சொல்வதைக் கேள்! நீ காட்டக் கூடிய ஒரு தலையசைப்பால், நான் போரற்ற ஒரு சமுதாயத்தையே அமைக்க நினைக்கிறேன். இப்போது நிகழவிருக்கிற கதாயுத்தமும் வேண்டாம்... துரியோதனா! முடிக்குல மன்னர்கள் தலை பட்டுச் சிவந்த உன் அடிக்கமலம் இப்போது கல் கிழித்த குருதியால் சிவப்பதைக் காண முடியாமல் பேசுகிறேன். துரியோதனா! எங்களுக்கு நாடு வேண்டாம்... (துரியன் தோள்களைப் பற்றி...) நாட்டில் உரிமையும் வேண்டாம்... சொல்வதைக் கேள் !... நல்துணைவா? என் தம்பியரும் நானும் நீ ஏவும் தொழில் புரிந்து உனக்கு வன்துணைவராக வாழுகிறோம்; நீ ஆட்சி ஏறி அமர்ந்து எங்களை ஆண்டுவா! ''குருகுலத்தார் இன்துணைவர்'' என்ற பெயர் வரலாற்றிலும் பொறிக்கப்படும். துரியோதனா! போர் ஆசை நீங்கி இப்போதே சமாதானம் செய்து கொள்வோம்! தயவு செய்து மறுக்காதே !...

துரியோதனன் : (தருமர் கைகளை மெதுவாக நகர்த்தி...வீரத்துடன்) தருமரே! உம் கொடையுள்ளத்திற்கு நன்றி!...ஆனால் மாற்றார் அருள் பெற்று அரசனாய் வீற்றிருப்பதை என் வீர உள்ளம் என்றும் விரும்பாது! உங்கள் அருள் பெற்று வாழும் உயிர் வாழ்க்கையைவிட, அங்கங்கள் வேறுபட ஆறாக ஓடும் குருதியில் கழுகும் காகமும் கொத்தத் துரியோதனன் களத்தில் இறந்

With the Best Compliments

of

# W. H. Brady & Company Limited

BRADY HOUSE

12/14 VEER NARIMAN ROAD

BOMBAY-1.

தான் என்ற புகழையே நான் விரும்பு கிறேன்.

தருமர் : (உள்ளஞ் சோர்ந்து...) துரியனே! விதியின் வலிமையை உன் வார்த்தைகள் மெய்ப்பிக்கின்றன... நான் வேறு என்ன சொல்லமுடியும். (கண்ணனைத் தருமர் பார்க்க...)

கண்ணன் : (புன்முறுவலுடன்...) என்ன தருமரே! இப்போதாவது நான் சொன்னதை உணருகிறீரா!... வாருங்கள் போகலாம்.

## காட்சி 2

பாத்திரங்கள் : கதாயுத்தத்தில் பீமனால் தாக்கப்பட்டுச் சாய்ந்து கிடக்கும் துரியோதனன்...அசுவத்தாமா.

காலம் : மாலை.

(சமந்த பஞ்சகத்தில் கதா யுத்தம் நடைபெற்றது. பீமனால் துரியோதனன் தாக்கப்பெற்று, குற்றுயிராய்ச் சாய்ந்து கிடக்கிறான். பாண்டவர்களை அழைத்துக் கொண்டு பாசறைக்குப் பக்கத்தில் உள்ள காட்டுக்குச் சென்றுவிட்டார் கண்ணன். துரியோதனன் குற்றுயிராய்க் கிடக்கும் செய்தியறிந்து அசுவத்தாமன் ஓடோடிச் செல்கிறான். தன்னையும் தந்தை துரோணரையும் ஆதரித்த துரியோதனன்பால் மிகுந்த அன்பு கொண்ட அசுவத்தாமா துரியோதனனைக் கண்டு வருந்துகிறான்...)

அசுவத்தாமா : (துரியோதனன் உடலருகில் அமர்ந்து அவனைப் புரட்டத் துரியோதனன் சிறிது கண் விழித்து நோக்குகிறான்) துரியனே !... எங்கள் தலைவனே!... (விம்முகிறான்) எந்தக் காட்சியைக் கண்டுவிடக் கூடாது என்று தினமும் என் கண்கள் அஞ்சினவோ, அந்தக் காட்சியைக் காணும் நிலை இன்று வந்துவிட்டது... அய்யோ!...... ஐந்து மூன்று அடுக்கிய அரண்மனை அமளியில், அன்னத்தின் தூவி அடங்கிய பஞ்சணையில் படுத்துக் கிடக்க வேண்டிய பார்த்திபன் உடல், பருக்கைக் கற்கள் பரவிய வெறு நிலத்தில் வீழ்ந்து கிடப்பதைக் காணவா நான் கண் படைத்தேன். உபநிஷத முனிவன் மகனாகிய எனக்குச் ''சாவு என்பது தவிர்க்க முடியாதது. அது உனக்கும் உண்டு" என்றெல்லாம் உணர முடிகிறது...... என் தலைவனே...! சாவிலேதான் உன் சரித்திர நடவடிக்கை அமைய வேண்டுமா? குருநில மன்னர் ஒரு கோடிப் பேர் கூடியழ, கோல மகளிர் பல நூற்றுவர் 'கூ,கா'எனக் கூடிவிழ குருகுலத் தலைவன் வீரநாடு புகுந்தான் என்று காண வேண்டிய கண்கள், யாருமில்லாத அனாதையாய், சமந்த பஞ்சகத்தின் நீர்க்கரையில் துரியோதனன் கிடக்கும் காட்சியைக் காண்கின்றன. நரைத்தலை கொண்ட என் தந்தையும், நல்விதுரனும், நதிமகன் பீஷ்மனும், நானும் அறவுரை கூறியபோது காரியம், அல்லது வீரியம் என்று பேசினாய்! இன்று யாரும் அற்ற அனாதையாய் சாவோடு போராடிக் கொண்டிருக்கிறாய்... ஐயோ!...... (சிறிது தயங்கிய அசுவத்தாமா ஆவேசத்துடன் பேசுகிறான்...) சரி! துரியனே!... எங்களைக் குறைவின்றி ஆதரித்த கொற்றவனே! உன் முடிவு நீயாகத் தேடிக்கொண்டது! ஆனால், எங்களுக்கு நீ செய்திருக்கும் சிறப்புக்கு நான் இறுதிவரை உனக்குச் செய் நன்றிக் கடன் காட்ட வேண்டும்... கவலைப் படாதே காவலா! எந்தக் காரியம் நடைபெற வேண்டும் என்பதற்காக நீ எண்ணற்ற படைகளைத் தொலைத்தாயோ அதை இன்றிரவுக்குள் முடித்துக் காட்டுகிறேன். மூச்சு உன் உடலிலிருந்து முடிவுறுவதற்கு முன்பாக, இன்றைய இரவு விடிவதற்கு முன்பாக அந்தக் காரியத்தைச் செய்கிறேன்... கவலைப்படாதே! எந்தப் பாண்டவர்களின் தலைகள் அறுந்து தரையில் வீழவேண்டும் என்று விரும்பினாயோ அந்தப் பாண்டவர்கள் ஐவரின் தலைகளையும் இப்போதே சென்று இன்று இரவு விடிவதற்குள் அறுத்துக் கொண்டு வருகிறேன். குற்றுயிராய்க் கிடக்கும் கொற்றவா! நிச்சயமாக உன் உயிர் உடம்பிலிருந்து பிரிவதற்குள் அப்பாண்டவர் ஐவரின் தலைகளையும் உன் கண்கள் காணும்;

*With*

*Best*

*Compliments*

*from*

**SHANTILAL CHATRABHUJ & CO.**

Hill Road, Bandra,

Bombay.

**Distributors :**

**CADBURY FRY INDIA (PRIVATE) LTD.**

**KISSAN PRODUCTS LIMITED**

**TATA OIL MILLS & TATA CHEMICALS**

களிக்கும்; உன் உயிர் அமைதி பெறும்...... (வெறியுடன்...) போகிறேன்... பாண்டவர்கள் தலைகளைப் பூவைப் போல் கிள்ளி வரப் போகிறேன்... பாசறைக்குள் புகுந்து பாண்டவர் தலைகளைப் பறித்து வரப் போகிறேன்... இக்காரியத்தைச் செய்யாவிட்டால் நான் பூசுரன் மகன் அசுவத்தாமா அல்ல... இதோ போகிறேன்... இப்போதே போகிறேன்...... (வெறியுடன் கையில் கத்தி எடுத்துக்கொண்டு ஓடுகிறான் அசுவத்தாமா... அவன் செல்வதை மெதுவாக் கண்களை விரித்துப் பார்க்கிறான் துரியோதனன்.... சிறிது ஒளி கண்களில் தெரிகிறது.

## காட்சி 3

நேரம்: (விடிவதற்குச் சற்றுமுன்) இருள் கப்பிய பின்னிரா.

பாத்திரங்கள்: துரியோதனன்
அசுவத்தாமா.

[பாண்டவர்கள் தலைகளை அறுத்துக் கொண்டு வருவேன் என்று சென்ற அசுவத்தாமா அங்ஙனமே ஐந்து தலைகளை அறுத்து அவற்றின் சிகைகளை ஒன்றாக முடிந்து இடது கையில் பற்றியபடி வெறியுடன் ஓடி வருகிறான். உயிர் நீங்கும் நிலையில் கிடக்கும் துரியோதனனைப் புரட்டி எழுப்பிப் பாண்டவர்கள் தலைகளைப் பார்க்கச் சொல்கிறான்.]

அசுவத்தாமா: (வெறியுடன்.........) துரியா!... என் அரசே!...... வெற்றி...... வெற்றி... இதோ பார்... துரியா... இதோ நன்றாகப் பார்... பாண்டவர்களின் தலைகளை நன்றாகப் பார்... பாராண்ட பாண்டவர்களின் தலைகளைப் பார்... கண்களை விழித்துப் பார். களிக்கட்டும் உன் கண்கள்... மகிழட்டும் உன் மனம். அதைக்கண்டு நிறையட்டும் என் நெஞ்சு! இதோ பார்... பாண்டவர்களின் தலைகள்... பாசறையில் புகுந்து இரவோடிரவாக என்னால் பறிக்கப்பட்ட பாண்டுவின் தலைப் பூக்கள்... நன்கு பார்... ம்... சீக்கிரம் பார்... (துரியோதனனை வலது கையால் மெதுவாகத் தூக்கித் தன் தொடையில் சார்த்தி அவன் கண்களுக்கு இடது கையை உயர்த்திப் பிடித்து ஐந்து தலைகளையும் அசுவத்தாமா காட்டுகிறான். மிக மெதுவாகக் கண்களைத் திறந்து வெறித்த படி துரியோதனன் பார்க்கிறான். சிறிது சிறிதாக அவன் கண்களில் நீர் பெருகி, அதிகமாகிறது. மெதுவாக அசுவத்தாமா பக்கம் திரும்பி மிகுந்த கடுமையான குரலில் கத்துகிறான். பேச முடியாமல் பேசுகிறான்...)

துரியோதனன்: (கடுமையான குரலில்) ...அசுவத்தாமா!...... அசுவத்தாமா......... ஐயய்யோ! என்ன காரியம் செய்தாய்? அந்தணர் மகனே! ஆத்திரத்தில் அறிவு இயங்காது என்பதை... அறிவுறுத்திவிட்டாயே... அசுவத்தாமா! ஐயோ! அசுவத்தாமா!...

அசுவத்தாமன்: ஏன் துரியா? ஏன்? கவலைப்படுவதுபோல் பேசுகிறாய்... பகைவர்களின் தலைகளைக் கண்டு பரவசப்பட வேண்டும் என்றல்லவா பயங்கரத் தடைகளைக் கடந்து பாண்டவர்கள் தலைகளைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏன் அழுகிறாய்?...துரியா! ஏன் அழுகிறாய்?

துரியோதனன்: அஸ்வத்தாமா... அய்யோ!...பாண்டவர்கள் தலைகளைப் பார்க்கத்தான் இன்னும் என் உள்ளம் துடிக்கிறது. ஐயோ அசுவத்தாமா! பாண்டவர்களின் தலைகளா இவை? நன்றாகப் பார்...அசுவத்தாமா! நன்றாகப் பார்! ஆத்திரத்தில் அறிவிழந்து பாண்டவர்களின் பிள்ளைகளின் தலைகளை அல்லவா கொண்டு வந்திருக்கிறாய்...! அய்யோ! இருட்டிலே செய்த காரியம் அசுவத்தாமா! வெளியிலும் நம் நெஞ்சத்திலும் நிறைந்திருக்கும் இருட்டிலே என்ன காரியம் செய்துவிட்டாய்...! கொஞ்சித் தவழும் கொழுந்தைக் கிள்ளி விட்டாயே அசுவத்தாமா!...(அசுவத்தாமா தலைகளை நன்றாகப் பார்த்து...அய்யோ ...என்று தூக்கி எறிகிறான்... துரியோதனன் அசுவத்தாமனைப் பக்கத்தில் இழுத்துத் தயங்கித் தயங்கிப் பேசுகிறான்....)

துரியோதனன்: அசுவத்தாமா!... நான் நினைப்பதை...எல்லாம் இப்போது சொல்ல முடியவில்லை...என் உயிர் சில கணத்

*With the Compliments*

*of*

**AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED**

BHANDUP

BOMBAY-78.



# STATE BANK OF INDORE

**(Subsidiary of the State Bank of India)**

Incorporated in India under
Special Statute
The Liability of the Members is limited

**Head Office :**
Bombay-Agra Road,
INDORE.

* Branches at Bombay and all important commercial centres in Madhya Pradesh.
* Attractive rates of interest on Deposits.
* Agency arrangement with over 2500 offices of the State Bank of India and its subsidiaries.
* Foreign Exchange Business transacted.
* Liberal terms for advances to Agriculturists Co-operative Institutions, Small Scale Industries and Retail Traders.

**OFFERS COMPLETE BANKING SERVICE**

தில் போய்விடும். ஓர் உண்மையை மட்டும் உன்னிடம் சொல்லவேண்டும்.........அசுவத்தாமா! ஆற்றல் இருக்கிறது என்பதால்ஆணவம் கொண்டவர்கள் எந்த நிலையை அடைவார்களோ...அந்த நிலையைத்தான் நான் இன்று அடைந்திருக்கிறேன் அசுவத்தாமா! என் கொடியில் உள்ள பாம்பின் குணம் இளவயதிலிருந்தே என்னிடமும் குடிகொண்டுவிட்டது.........பால் வார்த்தால், பாம்பு நஞ்சைத் தருவது போல பாண்டவர்கள் அன்பு காட்ட நான் பகை... காட்டினேன். நேராகச் சொல்லாமல் பாம்பு நெளிந்தே செல்வதைப்போல...... நானும் நேர்மையை விட்டு நெறிமாறியே சென்றேன். இரட்டை நாக்கை உடைமையாகப் பாம்பு பெற்றதைப்போல... நானும் பாண்டவர்களிடம் இரட்டை நாக்குடனேயே பேசினேன். இன்று பாம்புக் கொடியும்—அதைக் கொண்ட பார்த்திபனுகிய என் உடலும் வீழ்ந்து விட்டன— அசுவத்தாமா!— (அழுகிருன்.—) ஒரு உண்மையைச் சொல்கிறேன்— கேள்.... பாண்டவர்களோடு பகைத்து... போரிட்டு, அந்தப் போர் வெறியில் என் பிள்ளைகளையே போர்க்களத்தில் பலியிட்டேன். கங்கை மகன் முதலாகக் காந்தாரச் சகுனிவரை எல்லோரையும் இழந்தேன்... இவர்களையெல்லாம் இழந்தாலும் என் உள்ளத்தில் ஒரு நிறைவு தங்கியிருந்தது, அசுவத்தாமா!... இரு குலமும் போரிலே அழிந்தாலும்... அசுவத்தாமா! குருகுலத்தின் பரம்பரையை வளர்க்க உபபாண்டவர்கள் இருக்கிருர்கள் என்ற நிறைவு இருந்தது... அசுவத்தாமா! அசுவத்தாமா! இன்று நீ அந்தக் கொழுந்துகளையும் கொன்றுவிட்டாய்...ஐயோ! இதை என்னுல் பொறுக்க முடியாது... (சிறிது சிறிதாகத் துரியோதனன் தலை சாய... அசுவத்தாமாவை இன்னும் பக்கத்தில் இழுத்து) ஒன்று சொல்கிறேன்... அசுவத்தாமா! நன்ருகக் கேள்... சீக்கிரம் கேள்... எனக்காக ஒருதவி செய்... நானும் என் தம்பியரும் இறந்து விட்டோம் என்பதால் பாண்டவர்களைப் பகைவர்களாகக் கருதாமல்... தம்பி மக்களைத் தன் மக்களாகவே கருதி அன்பு காட்டி வாழ வேண்டும் என்று... நான் சாகும்போது வேண்டிக் கொண்டதாகக் கண்ணற்ற என் தந்தை திருதராஷ்டிரனிடம் சொல்; தவருது சொல்; ...எங்கே? சொல்வதாக சத்தியம் செய்... அப்போதுதான் நான் நிம்மதியாகச் சாவேன்... சத்தியம்... செய்... (மெதுவாகத் துரியன் வலது கையை உயர்த்த, அமைதியாக அசுவத்தாமா கையடித்துச் ''சத்தியமாகச் சொல்கிறேன்'' என்கிருன்). போ... உடனே போ... (துரியோதனன் தலை சாய்கிறது...) ★



*With Best Compliments*

*from*

**MODERN ADVERTISING BUREAU**

114-C, Patanwala Colony,

Opp. Jai Hind Cinema,

BOMBAY-12.

**HOARDING AND OUTDOOR PUBLICITY**

# இன்றையத் தமிழ் நாடகங்கள்

கலைஞன், தன் படைப்பாற்றலின் மூலம் வெளிக்கொணரும் சக்தியே, அதன் விளைவே கலையாகும். அவன் அதில் தன்னைத் தேடிக் கொள்கிறான். சமுதாயம், தன்னை, தன்னுடைய கலைஞர்களில் இனம் காட்டுகிறது. தன்னுடைய வளர்ச்சியைப் பண்பாட்டுத்துறை என்னும் எல்லைக் கோட்டில் தொட்டுக் காட்டுகிறது.

சமுதாயத்தின் பாதிப்பற்ற கலைஞனும், சமுதாயத்தைப் பாதிக்காத கலையும் நிழல்கள். அவை பிரமையே. உண்மை அல்லாதவை. போலிகள்.

நிழல்களின் எழிலுருவம், போலிகளின் எக்காளம், பிரமை தரும் மன நிறைவு இவைகளே யதார்த்தங்களாகும்போது, அதாவது அத்தகு ஒரு விளைவைப் பலவீனப்பட்டுப்போன ஒரு சமுதாயத்தில் அவைகள் உண்டாக்கும்போது, அச் சமூகம் தன்னையே இழந்துவிடுகிறது. மெல்ல, மெல்ல, ஆனால் சர்வ நிச்சயமாகத் தனக்குத் தானே முடிவை ஏற்படுத்திக்கொள்கிறது. தன் ஆத்மாவைத் தேடி அலையும் நிலைக்கு ஆளாகிறது.

இது நம் அறிவின் பின்னோக்குக் கூறும் உண்மை. வரலாறு என்னும் சென்ற காலம் காட்டும் நிதர்சனம்.

நாடகம் ஒரு கலை.

ஒரு சமுதாயக் கலை.

தன்னிலே நிறைவு பெற்றதாய், தானே பாதிக்கப்பட்டதாய், தானும் பாதிக்கும் தன்மை உடையதாய் ஆன ஒரு நிலைபெற்ற கலை.

அதன் வளர்ச்சி, பின்னோக்கையும், வரப்போகும் முன்னோக்கையும், நிகழ்கின்ற தன்னோக்கையும் ஒன்றிணைத்துக் காட்டுவது. அதன் தேய்வு சமுதாயத்தின் தெளிவற்ற ஒரு நிலையைக் காட்டும் அறிகுறி.

தமிழ் நாடகம் இன்றைய நிலையில் எங்கே போகிறது?

வழி தெரிய வேண்டும். வழி தெரிய, போகும் இடம் தெரிய வேண்டும். போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போக ஒரு காரணம் இருக்க வேண்டும். உடன் ஒரு காரியமும் இருக்க வேண்டும். அதுதான் பயணம்.

எதிலும் சாராத ஒரு நிலை. குறிக்கோள் இல்லாத பயணம். வீண் செலவு. சக்தி விரயம்.

அயர்ச்சி மனப்பான்மையின் எதிரொலியா? இல்லை நடக்கும் தவறான பாதையைப்பற்றி, அதன் முடிவு எங்கே இட்டுச் செல்லும் என்ற உண்மையைச் சொல்ல முடியாத ஊமை நிலையா? வாயின் மௌனமா? மனத்தின் ஊமைத்தனமா? இல்லை, அறிவின் ஸ்தம்பித்த நிலையின் காரணமா?

★ எம். கே. மணி சாஸ்திரி

★

WE'RE IN BOMBAY
FOR OVER TWO DECADES NOW

Whatever be your banking problem, we have the answer for it.

Please step into our Branch at

125, Mahatma Gandhi Road,
Fort, Bombay-1.

Opp. Bombay University.

**STATE BANK OF TRAVANCORE**

**(Subsidiary of the State Bank of India)**

**Head Office :** TRIVANDRUM

Branches throughout Kerala and at important centres in Tamil Nadu.

WITH BEST COMPLIMENTS

FROM

**SHREE NURSINGSHAY MUDUNGOPAL ELECTRIC CO. PVT. LTD.**

45-47, LOHAR CHAWL,

BOMBAY-2

கேள்விக்குப் பதில் கேள்வி கேட்டால் யார் விடை சொல்வது?

விடையில் ஆரம்பித்தால் கேள்வியில் முடிகிறது, விடையும் வினவும் சங்கிலியின் இணைப்புக்களோ? பதிலிலிருந்தே ஆ ர ம் பித்துப் பார்ப்போம். இன்றைய தமிழ் நாட கங்களின் நிலை...என்னவென்றால்

சபாக்கள் எத்தனை உண்டோ அத் தனையிலும் மேடை யேறும் தகுதி பெற வேண்டும். நாடகத்தின் தகுதி கதையின் கருப்பொருளிலும், வசன நடையின் வலுவி லும், காட்சியின் அமைப்பிலும், கலைஞர்களின் நடிப்பிலும் நிர்ணயிக்கப்பட்டு, ச மு தா ய பாதிப்பை எத்தகு நிலையில் அதனால் தொட முடியும் என்ற பெரும் வட்டத்தினுள் அமைய வேண்டியதில்லை. இன்றையப் போக்கில் நீர்க்குமிழியின் வீக்கம் பெற்ற புகழ் சேர்ந்த பின்னணி போதும். இங்கே கலை, அது கலை என்ற ஒரு அம்சத்திற்காக, வரவேற்கப்பட வில்லை. இ ங் கே அதனை வெளிப்படுத்த முனையும் நபருக்குள்ள தனிப்பட்ட புகழும், சமுதாயச் செல்வாக்கும்(!) உ று து ணை புரிகின்றன.

"த ன் தகுதிக்கேற்ற அரசாங்கத்தை ஒரு சமுதாயம் பெறும்" என்ற ஓர் அரசியல் அறிஞனின் சித்தாந்தம் இன்று நம் நாடக வளர்ச்சிக்குப் பொருந்தக் கூடுமோ? நான், தமிழ் நாட்டின் இன்றைய நாடக ரஸிகர் களின் இரஸனை மட்டத்தை அளவிட்டுக் கூற, எந்தவிதக் கருவியும் வைத்திருக்க வில்லை. ஆனால் ஆண்டு தோறும் மேடை யேறும் பல நாடகங்களைப் பார்க்கும் பேராசை யின் விளைவில் ஏற்பட்ட அவஸ்தைக்குள் ளானதை நினைத்துப் பார்த்து என்னையே நான் ஓர் இரஸிகன் என்ற முறையில் தேடிப் பார்க்க, என்னை நிதானித்துக் கொள்ள முயற்சி செய்கிறேன்.

என்னை நான் தேடுகிறேன்.

எனக்கு நானே கிடைக்கவில்லை.

எனக்கு ஒரே மயக்கம். கவர்ச்சி மயக் கம். கவர்ச்சியின் மயக்கத்தில் கலை என்னைப் பாதிக்கும் வலிமையை இழந்து நிற்கிறது.

நான் அன்றாடப் பிரச்னைகளுக்கு உட் பட்ட ஒரு சாதாரணக் குடிமகன். வருவாய்க் கும், செலவிற்கும் ஈடுகட்டக் கற்பனையில் இலட்சம் பெறும் தனவான். என் கற்பனை யில் நான் வாங்கும் காணி நிலத்தில் வீடு கட்டும் சிற்பி. தோட்டம் அ மை க் கு ம் இயற்கை இரஸிகன். காரில் சவாரி செய்யும் கனவான். என் ஆசைக் கனவுகள் அனந் தம். நான் அவைகளில் திளைப்பதில்தான் என்னை மறக்கிறேன். என்னை எத்தகைய துன்பமும் தீண்டாது. தீண்ட நான் விட மாட்டேன். என்னை இந்நாட்டு மன்னரில் ஒருவனாகச் செய்துவிட்ட, எ ன் தகுதிக் கேற்ப நான் பெற்று வாழும் ச மு தா ய அமைப்பு, என்னை என் இனிய கனவில் திளைக்கச் செய்யும். நான் தமிழ் பேசும் இந் தியன் என்றாலும் என் வளர்ச்சி இ ன் று நாடு முழுமையும் இதே நிலையில் வியாபித்து நிற்பது. நான் கனவுலகக் கவிஞன்.

என் கலைகளும் கனவுகளே!

எனக்கு வாழ்க்கை எப்படி அமைந்து விட்டது? மந்த கதியில் செல்லும் மாட்டு வண்டி வாழ்க்கை. நிலவின் மண் மிதிக்கும் இந்நாளில் என் வாழ்க்கை வேகம் து ரி த கதியில் செல்லவே நான் விழைகிறேன்.

மாமல்லபுரத்துச் சிற்பங்களைச் செய்த வன் பிறந்த மண்ணில் பிறந்தவன் நான் தஞ்சையின் உயர் கோபுரம் செய்தவன் என் இனத்தோன். தமிழின் த னி நிலையை, இனிமையை, வலிமையை, எளிமையை, எடுத்தியம்பிய எத்தனையோ கவிவாணரின் வமிசத்தில் வந்தவன் நான்.

எனக்குப் பாரம்பர்யம் உண்டு.

எனக்குப் பழம் பெருமை உண்டு.

ஆனால் இ ன் று நான் வேண்டுவது வேகம்.

WITH BEST COMPLIMENTS

FROM

# H. VISWANATH & CO.

**Office :**
Electrical Engineers & Contractors,
4/200. 'Sameer',
Sion (East),
Bombay-22.

**Stores :**
No. 30, Veena Vihar,
17-A, Flank Road,
King's Circle,
Bombay-22.

*With Best Compliments*

*from*

# HALDYN GLASS WORKS PRIVATE LTD.

'TAPOVAN', Dixit Road,
Vile Parle East,
Bombay-57.

ஜெட் வேகம். இன்னும் அதற்கும் மேலே! ஸாடிலைட் வேகம்! வேகம்!! வேகம்!!!

நான் புறத்தில் வேண்டுவது வேகம்!

என அகம் வளரவில்லை! நான் வளர்த்துக் கொள்ளவில்லை!

எனக்குப் பொழுது கழிய வேண்டும். என் சிந்தனையை, எண்ணவோட்டத்தைத் தாக்காதப் போக்குகள் வேண்டும். யாரை யாவது, எதையாவது, ஏன் என்னையே நான் பரிகசித்துக்கொண்டால்கூடப் பரவாயில்லை. அப்பரிகசிப்பில் நாசூக்கான ஒரு தன்மை வேண்டியதில்லை. நாசூக்காக, இலைமறை காய்மறையாகச் சொன்னால் அதற்குத் தரம் வந்துவிடும். எனக்குத் தரத்தைப் பற்றிய தெளிவு பிறந்துவிட்டால் என் கவர்ச்சி மயக்கம் என்னாவது?

நான் நாடகத்தை இரஸிப்பதும், சென்று பார்ப்பதும் எப்படித் தெரியுமா? என் மனதைச் செலுத்தக்கூடிய, கப்பலைச் செலுத்தும் மீகாமன் போன்று, பத்திரிகைகளும், விமர்சனங்களும்தான் வழிகாட்டி. என்னை நானே விமர்சனம் செய்துகொள்வதில் தவறென்ன? என் பலவீனத்தைப் புரிந்துகொண்ட (வியாபார) கலைஞர்கள் விரிக்கும் கடையில் நான் சரக்குக் கொள் முதல் செய்கிறேன். அவர்களுக்குத் தெரியும் ''என் சமுதாயப் பிரச்னைகளை, வாழ்க்கையின் கணிப்புகளை,'' என்னிடமே சொல்லக் கூடாது என்பது. நான் வாழும் சமகால சமுதாயத்தைப்பற்றி நான் ஒருவன் மட்டுமே அக்கரைப்பட்டு விட்டால் அது உருப்பட்டு விடுமா? இல்லை நான் ஒருவன் மட்டுமே அக்கரைக் காட்டாமல் போனால் அழிந்து போய்விடுமா? எனவே நான் என்னைத் தொல்லைப் படுத்திக் கொள்ளவில்லை.

தமிழ் மண்ணின் வாடை வீச வேண்டும் என்பது என் தனியொரு கொள்கை. என் பிடிவாதக் கொள்கை என்றே சொல்வேன். எனக்கு இந்த வாதம் பிடித்திருப்பது இங்குள்ள நாட்டு வைத்தியர்களுக்குத் தெரியும். வேறெந்த மண்ணில் முளைத்த மூலிகையாயிருந்தால் என்ன? அவை என் வாதம் போக்க, தமிழ்ப் பெயரில் என்னிடம் விற்கப் படுகின்றன. நான் நோயாளி! எந்த நாட்டுச் சரக்கு என்பதில் எனக்கு அக்கரை கிடையாது. தேடிப் பார்த்தால் இதை விட உசத்தியான மூலிகை இந்தத் தமிழ் மண்ணிலேயே கிடைக்குமே என்ற சுய உணர்வு எனக்கு இப்போதைக்குக் கிடையாது. நான் விழுங்க எனக்கு மருந்து தேவை.

இந்தப் போலி நாட்டு வைத்தியர்கள், நட்சத்திர வைத்தியராகிறார்கள். மேனியில் செழிப்பு. ஜேபியில் கொழிப்பு. நான் பெருமைப்படுகிறேன். அவர்களை உயர்த்தியவன் நான். அவர்கள் மேலிருந்து என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். நட்சத்திர நகை. மின்மினி ஒளி!

என்னைப்பற்றிச் சொல்லச் சொல்ல நீங்கள் ஏன் முதலில் சிரித்து, பின் அதை இள நகையாக்கி, அந்நகை மறைந்து உங்கள் கண்களின் விளிம்பில் திரையிட்டு நிற்கும்... ஏன்?

நானும் நீங்களும் ஒரே இனத்தவர் என்பதாலா? நீங்கள் ஆயிரம் மைல்களுக்கப் பால் இருக்கிறீர்கள். என் தேக்கம், என் குட்டை மர வளர்ச்சி*, (தன்னைத் தானே ஏய்த்துக்கொள்ளும் ஓர் உளவியல் குறைபாடு) உங்களை உறுத்துகிறது. நமக்கு இயக்கம் வேண்டும் என்கிறீர்கள். நமது நாடக மேடை மஹாராஷ்டிரத்தைப் போன்று, வங்கத்தைப் போன்று, கேரளத்தைப் போன்று, குஜராத்தைப் போன்று நெடிதோங்கி வளர வேண்டும். நாடகம் கலையாக, சமுதாயக் கலையாக, இலக்கியமாக வளர்ந்து வாழ வேண்டுமென்கிறீர்களா? தமிழின் உதிரத்தில் உதித்ததாகச் சொல்லப்படும் கன்னடம், மேடைக் கலையில், கண்டோர் வியக்க முன்

*குறிப்பு :– பான்ஸாய் மரம். இம்மரத்திற்கு நெடிது வளரும் மரத்திற்குள்ள எல்லா பௌதிகப் பண்புகளும் உண்டு. ஆனால் இது வளருவதில்லை.

With Best Compliments from

# "HEXAMAR HOUSE"

**Offering to you a wide and choice range of**

**Household Insecticides :**

| | | |
|---|---|---|
| 1) BUGMAR | : | That kills Bed Bugs instantly. |
| 2) ROACHMAR | : | That spells death to Cockroaches. |
| 3) DI-FLY | : | That destroys Flies by bucketful. |
| 4) ZINC PHOSPHIDE | : | A sure killer of Rats. |
| 5) HEXACHLOR | : | For general disinfestation of Vermin. |

**HEXAMAR**

Routine use of these well known Household products will ensure you comfort and general well being in the Home.

**Available in Handy Packs :—**

**BHARAT PULVERISING MILLS PRIVATE LIMITED**

"HEXAMAR HOUSE"

# RAVINDRA K. RESHAMWALA

**SHIPBROKERS CHARTERING AGENTS**

**DRY CARGO CHARTERING**

**TANKER CHARTERING**

**AFFREIGHTMENT CONTRACTS**

**WORLDWIDE CONTACTS**

**Head Office :**

Jiji House, Raveline Street,
BOMBAY-1. BR.
Cable : RIVERDALE
TLX : 2272/2641 AB RIVDALE
Telephone : 266550/260416

**Branch Office :**

C-30, Defence Colony,
NEW DELHI-3.
Cable : RIVERCHART
TLX : 273/7409
Telephone : 625266

னேற, நாம் மட்டும் காதற் கதைகளை, கன வுக் கதைகளை, சிதைந்த மனத்தைச் சிந்திக்க வைக்காத சிண்ட்ரெல்லா கதைகளை மேடை யேற்றுகிறேமே என்று !

எஸ்கேபிஸம் ! (Escapism)‡

எவனே மனேதத்துவம் படித்தவனும். அன்று என்னிடம் உளறிவிட்டுப் போனன் !

நான் கேட்கிறேன், எது எஸ்கேபிஸம்?

கலைஞர்களை வாழ்விக்கும் நாடு கலாசா ரம் மிக்க நாடு என்பது உண்மையானல், நான் ஒரு கலாசாரப் பிரதிநிதி என்பதில் ஐயமில்லை.

இன்று எனக்கு வாழ்வின் முன்னேடி நடிகன்.

என் தலைவன் அவனே. என் இலக்கிய நாயகன், இன்பக் கற்பனையின் இலட்சிய நண்பன், என் சமுதாய, அறிவியல், பொரு ளாதாரத் துறையின் ஆதர்ஸ புருஷன். அவனிடம் கவர்ச்சி இருக்கிறது. நான் அழகை, கவர்ச்சியை உபாசிப்பவன். எனக்கு, என் மனத்துக்கு, என் சிந்தனைக்கு இவையனைத்துக்கும், வாழ்க்கை என்னும் சூருவளிக் கடலில் வழி நடத்துவதாகக் கேளிக்கைக் காட்டும் அவனே உண்மை யானவன்.

உண்மையாகவே என் நாடக மேடை வளர ஓயாது பாடுபடும் உத்தமக் கலைஞன் எங்கோ இருக்கிருன ? இருக்கட்டுமே ! என் இரஸனையை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லும் இன்றைய நாடகப் பிரமுகர்களிடம் அவனுடைய இதிகாஸக் கரடித்தனத்தைக் காட்டட்டுமே!

ஏன் நீங்கள் இதற்குப் போய் கண்ணின் இமையோரத்தில்......

எனக்காக வருந்துகிறீர்களா ?

மன்னித்துவிடுங்கள்! என்னை மாற்றிக் கொள்ள வழி சொல்லுங்கள் !

---

‡ குறிப்பு: தன்னைத்தானே ஏய்த்துக் கொள்ளும் ஓர் உளவியல் குறைபாடு.


**With Best Compliments**

**from**

# ASWIN ELECTRICALS

Krishna Bhavan,
57, Lohar Chawl,
BOMBAY-2 (BR).

Office : 314808
Resi. : 319942

**With the Compliments from**

the makers of

# LIFEBUOY SOAP

**With the Best Compliments**
**from**

# S. C. BROTHERS

## MECHANICAL & STRUCTURAL ENGINEERS

**City Depot :**
189/93, Upper Duncan Road,
BOMBAY (BC)

Telephone : 376442
Grams : 'Ironmaster'

**Office/Works**
Western Express Highway,
Post Bag No. 7535,
Goregaon (East),
Bombay-62 (NB)
Telephone : 691796/97

# இன்பத்துப்பால்

## களவும் கற்பும்

உலகப் பெரும் புலவராகிய வள்ளுவப் பெருந்தகை நமக்கு வழங்கியுள்ள அருநிதியமாகிய திருக்குறள், பண்டைத் தமிழரின் பண்பாட்டை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர் நடத்திய வளமான வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகும். அறத்தின் அருமை பெருமையினையும், பொருளின் புகழினையும், இன்பத்தின் எல்லையினையும், எந் நாட்டவர்க்கும் எடுத்துக் காட்டுகின்ற ஈடும் இணையும் இல்லாப் பொதுமறையாகும்.

திருக்குறளிலே காணப்படும் இன்பத்துப்பால், அதாவது காமத்துப்பால், பண்டைக் காலத்தில் பைந்தமிழ் மக்கள் நடத்திய காதல் வாழ்வை, அவர்தம் ஐந்திணை வாழ்வை, அன்புடைக் காமத்தைக் காட்டும் அரிய பகுதி ஆகும். காதலின் கனிவினையும், ஒண்மையினையும், திண்மையினையும், அத்துடன் அதன் மென்மையினையும் உலகிற்கு உள்ளவாறு உணர்த்துகின்ற ஓர் ஒப்பற்ற இன்பப் பெட்டகமாக அது இலங்குகின்றது! காதல் வாழ்வின் இரு கூறுகள் களவும் கற்பும் ஆகும். பொய்யில் புலவர் களவை எழுபது குறள்களிலும், கற்பை நூற்றெண்பது குறள்களிலுமாக விளக்கி உள்ளார்.

## களவொழுக்கம்

ஒப்புயர்வற்ற சிறப்பினையுடைய தலைவனும் தலைவியும் ஊழ்வினையின் காரணமாகத் தாங்களாகவே எதிர்ப்பட்டு, ஒருவரை ஒருவர் விரும்பி, கொடுப்பாரும் அடுப்பாருமின்றி உழுவலன்போடிணைந்து, ஈருடலும் ஒருயிருமாக ஒன்றி பிறர் அறியா வண்ணம் ஒழுகும் ஒழுக்கமே களவொழுக்கம் ஆகும். அதாவது நிறைந்த அன்பினர் இருவர், பெற்றோரும் பிறரும் அறியா வண்ணம் கரந்து நின்று காதல் ஒழுக்கத்தைப் புரிதல் களவாகும். கருத்தொருமித்த அவர்கள் இருவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு, புனலொடு புனல் கலந்ததைப் போன்று உயிரோடு உயிர் கலந்து உண்மை அன்போடு இனிது உறைவர்.

உண்மை அன்பு அவ்விருவரது உள்ளும் புறமும் உயிர் தழைத்து நிற்கச் செய்யும். உணர்ச்சி ஒத்த காதலர் உண்மை இன்பத்தைப் பெரிதும் உவந்து கொள்வர். கூடலின்பத்தை இனிதாகும்படிக் கனிவிக்கும் ஆற்றலுடைய ஊடுதலும், அவ்வூடலை நீள விடாது செவ்வி அறிந்து கூடினால் பேரின்பம் உண்டு என்பதை உணர்தலும், அங்ஙனம் அறிந்தவாறு ஆர்வமுடன் கூடுதலும் அவர்கள் அடைகின்ற பயன்களாகும். இவ்வாறு உள்ளன்பு ஒத்து உவந்து விளங்கும் காதலர் இருவரது உயர்வினை நாயனார்,

"ஊட லுணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்"

என்று பாராட்டிப் பாடியுள்ளார்.

உயிரொன்றி நிற்கின்ற உண்மைக் காதலர்களது உறவு நிலையினை, தலைவன் வாயிலாக, "உடம்போடு உயிருக்கு இயைந்துள்ள நட்பு எத்தகையதோ அத்தகையது இம் மடந்தையோடு நான் கொண்டுள்ள நட்பு" என்று கூறுமுகத்தான்,

"உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு"

என்று வள்ளுவர் உணர்த்தி இருப்பது அதனைப் படிக்கின்ற அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொள்வதாகும்.

தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல், நாணுத் துறவுரைத்தல், அலரறிவுறுத்தல், என்னும் ஏழு அதி

நூலகக் கலாநிதி
அ. திருமலை முத்துசுவாமி

*With Compliments from*

# PAPER ART PRODUCTS

## Modern Packagers & Art Printers

TOKERSI JIVRAJ WADI
OFF KING EDWARD ROAD
SEWRI, BOMBAY-15.

PHONE : 445877, 445107

Grams : "PHARMPRINT",
Bombay, Sewri.

**A GOOD PERFORMANCE!**

*You can judge from the applause!*

**That's what you get with**

**®Hostalen**

**High Density Polyethylene**



**PIL** POLYOLEFINS INDUSTRIES LIMITED
Neville House, Currimbhoy Road,
Ballard Estate, Bombay 1.

® Registered Trade Mark of
Farbwerke Hoechst AG., West Germany.
Licensee in India:
Polyolefins Industries Limited.

GO MODERN WITH **Hostalen** THE QUALITY PLASTIC

PIL. 89 A

காரங்களும் களவொழுக்கத்தின் சிறப்புக்களை எல்லாம் எடுத்தோதுகின்றன. தனியிடத்தே பேரழகுடைய தலைவி ஆரணங்கினைப் போன்று, அழகு மயிலைப்போன்று நிற்றலைக் கண்ட தலைவன் அவளது அழகினை வியந்து நோக்கியதோடு அவளை அடைய வேண்டும் என்ற நினைப்பினால் வருந்தி நிற்றல், பின்னர் தலைவியின் குறிப்பறிந்து தலைவன் உவந்து நிற்றல், அடுத்து தலைவன் தலைவியைக் கூடி மகிழ்தல், பின்னர் அவன் அவளைப் புகழந்து பாராட்டல், அத்துடன் அவன் காதற் சிறப்புரைத்தல், இருவரும் நாணத்தினை இழந்து நிற்றல், அலர்பரவிய காரணத்தால் இருவரும் கடிமணம் புரிதல் ஆகியவற்றை அவை முறையே எடுத்துக் கூறுகின்றன.

## பேரின்பம்

மறுமை இன்பங்களில் உயர்ந்தது வீட்டின்பம். அவ்வாறே இம்மை இன்பங்களில் தலையாயது காம இன்பம். சிற்றின்பமாகக் கருதப்படும் அது உண்மைக் காதலர்களுக்குப் பேரின்பமே ஆகும். பொதுவாக நமது ஐம்பொறிகளும் ஐம்புலன்களின் வாயிலாகத் தமக்கு வேண்டிய பொருட்களை நுகருங்கால் ஏற்படுகின்ற சுவை உணர்வே இன்பமாகும். இவ்வின்பத்தை, நாவிற்கினிய பண்டங்களைச் சாப்பிடுவதாலும், உண்மையான காதல் ஒழுக்கத்தை மேற் கொள்வதாலும் நாம் பெற முடியும். முன்னது புற இன்பம் என்றும், பின்னது அக இன்பம் என்றும் கூறப்படுகின்றது. இவ்வக இன்பத்தைத் தலைவன் ஐம்புலன்களாலும் தலைவியிடத்தே நுகர இயலும். தலைவியின் அழகினைக் கண்ணால் கண்டும், அவளது இனிய மொழிகளைக் காதால் கேட்டும், அவளது மெய்யினைத் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புல இன்பங்களும் தலைவியிடத்தே பொருந்தி உள்ளன என்பதைத் திருவள்ளுவர்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள''

என்று சுவைபடக் கூறியுள்ளார்.

## அம்பலும் அலரும்

அகவொழுக்கத்தின் ஆணிவேராக விளங்குவது அன்பாகும். எனவே அகவொழுக்கம் அன்பொழுக்கம் என்றும் கூறப்படும். இவ்வன்பொழுக்கம் களவு நிலையில் இருக்குங்கால் நனி சிறக்க வேண்டுமெனின், அலர் தோன்ற வேண்டும். இது கருதியே, ஒல்காப் புகழ்த் தொல்காப்பியனார், "அலரிற் றோன்றும் காமத்திற் சிறப்பே" என்று கூறிப் போந்தார். அலர் என்பது காதலர் இருவரது களவொழுக்கத்தினைப் பலர் அறிந்து கூறும் பழமொழியாகும். மறைவாக இருந்த காதலர் தம் ஒழுக்கம் அயலவர் அறிய அலராக மாறினால் தான் இருவரும் பெற்றோர், உற்றார், ஊரார் அறிய மணம் செய்து கொள்ள இயலும். முதலில் ஒரு சிலரே அவ்விருவரது ஒழுக்கத்தின் கண் ஐயுறுவர். அது அம்பல் எனப்படும். அம்பலும் அலரும் களவினை வெளிப்படுத்துவனவாகும். தலைவியைக் காண அவளிடத்திற்கு இரவில் அடிக்கடி தலைவன் வந்த காரணத்தினாலும், தலைவியில்லாது தனித்து வாழ முடியாது என்ற எண்ணத்தின் காரணமாகத் தலைவன் கலங்கித் தவித்த காரணத்தினாலும், அம்பலும் அலரும் அவனாலேயே ஏற்படும். அலர் மிக வேகமாகப் பரவுதலை அறிந்த தோழி அதனைத் தலைவனிடம் எடுத்துக்கூறி, அவனைத் தலைவியை மணந்துகொள்ளும்படிக் கூறுவாள். இது தலைவனுக்குப் பெருமகிழ்ச்சியினையே தரும். அம்பல் அலராகி இறுதியில் கௌவையாக மாறும். கௌவை என்பது ஊரிலுள்ளார் அனைவரும் அறியப் புறந்தூற்றலாகும். அது ஒரு பக்கத்தே துன்பத்தை விளைவித்தாலும், மற்றொரு பக்கத்தே காதலைக் கனியச் செய்து, கடிமணத்திற்கு வழி வகுக்கும்.

தலைவியின் அன்னைக்கும் இச் செய்தி எப்படியோ எட்ட, அவளும் அது பற்றி ஒரு சில கூறுவாள். ஆனால் தலைவியோ சிறிதும் அஞ்சாது, தலைவன் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக, கலங்கித் தவியாது, தனது காமநோய்

*With the Best Compliments*

*of*

**PARADISE CHEMICALS**

9-11 GARIBDAS STREET

VADGADI

BOMBAY-3.

**SERVICE BUILT OUR BUSINESS**

**BARDAI PRIVATE LIMITED**

**PLANT & MACHINERY HIRE SPECIALIST**

ZAKERIA BUNDER ROAD

SEWRI, BOMBAY-15.

Phone : 442611 (5 Lines)

Crane Depot : 324963, 326835

என்னும் பயிர் நன்கு வளருவதற்குத் துணை செய்யும் எருவாக அலரினையும், நீராக அன்னையின் சொல்லையும் அவள் கருதுவாள். இதனை,

"ஊரவர் கௌவை யெருவாக அன்னை [சொல்
நீராக நீளுமிந் நோய்"

என்று குறள் கூறுகின்றது. அம்பல், அலர், கௌவை இவற்றின் காரணமாக, பொதுவாக தலைவன் தலைவியரது திருமணம் இனிது நடைபெறும்.

## கற்பொழுக்கம்

தலைவன் தலைவியொடு ஊரறிய, உலகறிய இல்லத்தில் இல்லற வாழ்வை மேற்கொண்டு நல்லறங்களை எல்லாம் செய்தல் கற்பு நெறியாகும். அதாவது காதலர் இருவரும் பிறரறியக் கணவன் மனைவியாக விளங்குவது கற்பெனப்படும். பெண்ணைப் பெற்றோர் கொடுப்ப, தலைவன் அவளைத் தன் மனைவியாகக் கொள்வது கற்பாகும். களவின் வழி வந்த கற்பு நிலையை, பிரிவாற்றுமை, படர்மெலிந்திரங்கல், கண்விதுப்பழிதல், பசப்புறுபருவரல், தனிப்படர்மிகுதி, நினைந்தவர் புலம்பல், கனவு நிலையுரைத்தல், பொழுது கண்டிரங்கல், உறுப்பு நலனழிதல், நெஞ்சொடு கிளத்தல், நிறையழிதல், அவர் வயின் விதும்பல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சி விதும்பல், நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை ஆகிய பதினெட்டு அதிகாரங்களின் வாயிலாக நாம் நன்கு அறிய முடிகின்றது.

களவொழுக்கத்தில் தலைவன் மறைவாக வருவான்; தலைவியைக் கண்டு கூடி இன்புறுவான்; பிரிந்து செல்வான். ஒரு காரியத்தை எத்தனை நாளைக்குத்தான் மறைக்க முடியும்? அதிலும் காதலர்கள் எத்தனை நாளைக்குத்தான் பெற்றோரும் மற்றோரும் அறியாவண்ணம் சந்தித்துக் காதலை வளர்ப்பது? எப்படியாவது ஒரு நாள் களவு வெளிப்படத்தானே செய்யும்? அதிலும் காதல் பற்றிய செய்தி காட்டுத் தீயெனப் பரவத்தானே செய்யும். எனவே காதலர்கள் களவொழுக்கத்தினை நெடுநாள் மேற்கொண்டிருக்க முடியாது. அது சீக்கிரம் பிறருக்குத் தெரிந்து விடும்; சில நாட்களுக்குள்ளே களவு வெளிப்பட்டு விடும். காதலர்களைப் பெற்றோரும் மற்றோரும் தெற்றெனத் தெரிந்துகொள்வர். எனவேதான் திருவள்ளுவர் தமது நூலில் மிகச் சிறிய அளவில் களவிற்கு இடந் தந்துள்ளார். ஆனால் கற்பு நெறியோ நாடறிய அவ்விருவரும் கணவன் மனைவியாக வாழ்வது; பெற்றோரும் மற்றோரும் அறிய இல்லறமென்னும் நல்லறத்தை நடத்துவது; வெளிப்படையாகத் தலைவன் தலைவியாக விளங்குவது; பல ஆண்டுகள் உலகிலே வாழ்வாங்கு நடத்துவது. எனவேதான் திருவள்ளுவர் மிகப் பெரிய அளவில்—களவை விட இரு மடங்கு அளவில்—நூற்றெண்பது குறள்களில் கற்பை விளக்கிக் கூறியுள்ளார். சிலகாலம் காதலர்களாக மறைவாகச் சந்தித்துக் களவு வாழ்வை நடத்திப் பிறகு பல ஆண்டுகளாகக் கணவன் மனைவியாகக் கற்பு வாழ்வு நடத்துவதே உண்மையான உலக வாழ்க்கை என்பது வள்ளுவர்தம் உள்ளக்கிடக்கையாகும்.

இல்வாழ்க்கை சிறக்க வேண்டுமெனின் தலைவியானவள், கற்பு, காதல், நல்லொழுக்கம், பொறை, நிறை, விருந்துபுறந்தருதல், சுற்றம் ஓம்பல், முதலிய நற்பண்புகளை உடையவளாக விளங்க வேண்டும். அவ்வாறு அவள் விளங்கின், இல்லறம் இனிய நல்லறமாகும். வீட்டில் அமைதி தவழும்; இன்பம் பொங்கும். கணவனும் மனைவியும் எல்லாச் செல்வங்களையும், சிறப்புக்களையும் பெற்று இவற்றிற்கெல்லாம் மேலாக மன நிறைவினை அடைந்து மாட்சியுடன் வாழ்வார்கள்.

## பிரிவுத் துன்பம்

திருமணத்திற்குப் பின்னர், தலைவன், பரத்தமை காரணமாகவோ அன்றிப் பொருளின் காரணமாகவோ, ஒரு சில வேளைகளில் அரசியற் பணியின் காரணமாகவோ தலைவியைப் பிரிய நேரிடலாம். அதுகால் தலைமகள்,

***With Best Compliments***

***from***

# KARWAR ENGINEERING WORKS

**MECHANICAL ENGINEERS & CONTRACTORS,**
**METAL SHEET FABRICATORS.**

231, Belasis Road,
Opp. Raj Oil Mills,
Bombay-8.



*With Best Compliments*

*from*

# THE BOMBAY OIL INDUSTRIES PVT. LTD.

**Manufacturers of :**

SAFFOLA COCOVITE

and

Parachute Brand

FILTERED & REFINED COOKING OILS & EVEREST BRAND

STEARIC ACID

தலைமகன் பிரிவை ஆற்ருது, ஆருத் துயறில் ஆழ்ந்திருப்பாள். கணவன் பிரிவால் கடுந் துயர் அடைந்த காரிகை, நீரில்லாக் குவளை போன்றும், உயிரில்லா உடம்பைப் போன்றும், கொழுகொம்பிலாக் கொடி போன்றும் வாடி வதங்கி, அருவி விழியும், மெலிவும், பசலை படர்ந்த மார்பும், அழியும் மனமும் கொண்டு விளங்குவாள். அவ்வாறே தலைவனும் பிரிவின் காரணமாக வருந்துவான். பிரிவாற்ருமை இருவருக்கும் பொதுவானதாகும்.

இருவரும் தனித்து இருக்குங்கால் துயர் மிகும். அதுகால் ஒருவரை ஒருவர் நினைந்து புலம்புதல் இயற்கையாகும். பிரிவுத் துன்பத்தால் பெரிது அலைக்கழிக்கப்பட்ட தலைவிக்குத் தும்மல் எழுவது போல் தோன்றியது. அதுகால் ''என் காதலர் எனை நின்னைக்கத் தொடங்கி விட்டார்போல் தெரிகிறது'' என்று தலைவி எண்ணி இன்பம் அடைய இருந்த பொழுது, எழுவது போல் தோன்றிய தும்மல் எழாது ஒழிந்து விடுகின்றது. இதனுல் தலைவி தன்னை நினைக்கத் தொடங்கிய தலைவன் அதன் பின்னர் நினையாமல் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கவலுகின்ருள். இதனைத் தோழியிடம் உரைக்கவும் செய்கின்ருள். வள்ளுவப் பெருந்தகை, இந் நிகழ்ச்சியை

''நினைப்பவர் போன்று நினையார் [கொல்தும்மல்
நினைப்பது போன்று கெடும்''

என்று கூறியுள்ளார். நெடுந் தொலைவில் உள்ள உறவினர்கள் ஒருவருக்கொருவர் நினைக்குங்கால் அந் நினைக்கப்பட்டவருக்குத் தும்மல் எழும் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

### ஊடலும் கூடலும்

பிரிந்த தலைவன் திரும்பி வருங்கால், தலைவி ஊடி நிற்பாள். ஊடுதல் அதாவது சிறு பிணக்கு காமத்திற்கு இன்பமாகும்; அதற்கு இன்பம் பருவமறிந்து இருவரும் கூடி மகிழ்தலாகும். பழத்திற்கு இனிமை போல், பாலிற்குக் கற்கண்டு போல், ஊடல் காதல் வாழ்வில் சுவை பயக்கும். ஆனுல் ஊடல் அளவோடு இருக்க வேண்டும். அது உப்புப் போன்று அளவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பேரின்பம் விளையும். ஒருணவில் உப்புக் கூடினுல் என்னுகும்? உப்பு மிகுந்தால் அப்பண்டம் பாழ்தான். அவ்வாறே உப்பில்லாப் பண்டமும் பாழ் தான். அது குப்பைக்குத்தான் செல்லும். அது கருதியே ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்ற பழமொழி எழுந்தது போலும். சுருங்கக் கூறின் ஊடல் இல்லாக் காமம் சுவை பயக்காது. எனவே சிறு பிணக்கு அவசியம் தலைவன் தலைவியரிடையே இருக்க வேண்டும். ஆனுல் அது அளவு கடந்து போகாத நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவது இருவர்தம் தலையாய கடமையாகும். இவ்வுண்மையினை,

''உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ருல் நீள விடல்''

என்று குறள் உணர்த்துகின்றது.

### காமத்துப்பாலின் சிறப்பு

இன்பத்துப் பாலில் காணும் குறட் பாக்களையெல்லாம் தொகுத்து உரைநடையாக எழுதினுலே போதும்! ஒரு நல்ல காதல் இலக்கியத்தை, சிறப்பாக நாடக இலக்கியத்தை நாம் பெற முடியும் என்பது நாம் அறிந்த உண்மையாகும். இலக்கியச் சுவையொழுகும் இன்பத்துப்பால் ஆண் பெண் அனைவரும் கற்றுத் தேற வேண்டிய பெற்றியதாகும். இல்லறத்தில் உள்ளவரும், இல்லறம் நடத்தப் புகுவோரும் அவசியம் படிக்க வேண்டிய அற்புதப் பகுதியாகும். பண்டைத் தமிழ் மக்கள் கடைப்பிடித்த காதல் நெறியினை அனைவரும் தெரிந்து கொள்வதற்குத் துணை செய்யும் ஒரு சிறந்த வாழ்க்கை நூல் வள்ளுவர்தம் இன்பத்துப் பால். கள்ளமற்ற வெள்ளை உள்ளமும், தூய காதலின் மீது விருப்பமும், தமிழின் மீது ஆர்வமும் கொண்டிருக்கின்ற எவரும் இன்பத்துப்பாலில் காணும் கருத்துக்களை எளிதிற் புரிந்து கொள்ளலாம். அவற்றைச் சுவைத்துப் பேரின்பம் பெறலாம். காதல்

*With Best Compliments*

*from*

**INDUSTRIAL ESTERS & CHEMICALS**

11, BANK OF BARODA BUILDING,

PALTON ROAD,

BOMBAY-1.

ANCHOR
MARINE PLYWOOD
THE
INEVITABLE
CHOICE
FOR
BOATS, SHIPS, PONTOONS.

**THE INDIAN PLYWOOD MFG. CO. LTD.**

9, Wallace Street, Fort,

Bombay-1.

வாழ்க்கையைப் பற்றிய சிறந்ததொரு விமரிசனம்தான் வள்ளுவரது இன்பத்துப்பால். காமத்துப் பாலிலுள்ள ஒவ்வொரு பாடலையும் தெய்வப் புலவர் நன்கு உணர்ந்தே பாடியுள்ளார். எனவே இன்பத்துப்பால் உணர்ச்சியின் உறைவிடமாக உயர்ந்து விளங்குகின்றது. வள்ளுவர் ஆண் பெண் ஆகிய இரு பாலாரது, சிறப்பாக மங்கை நல்லாரது உள்ள இயல்பை உள்ளவாறு, உணர்ச்சி பொங்கச் சித்தரித்துள்ளமை அவரின் உளநூல் அறிவை உலகிற்குத் தெற்றெனக் காட்டுகின்றது. அதனை நாம் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் வியப்பே மேலிடுகின்றது. அத்துடன் குறைவில்லா இன்பமும் பெருமிதமும் நமக்கு ஏற்படுகின்றன. வள்ளுவர் தம் காமத்துப் பாலிற்கு விளக்க நூலொன்று சிறந்த முறையில் ஆங்கிலத்தில் எழுதப்படுமானல் இத்துறையைப் பற்றி இவரைப் போன்று இத்தகைய நூலைச் செய்தவரை யாண்டும் காண்டல் அரிது என்று உலகம் உணர்ந்து போற்றும்.



---

With
the compliments of

VGW

*Makers of the best in glass containers*
**VAZIR GLASS WORKS LTD.**
J. B. Nagar, Andheri-Kurla Road, Bombay 59 AS.
Tel: 573335

With the Best Compliments

of

**RUPAWALLAS**

**&**

**ANDHERI METAL REFINERY & FOUNDRY**

CHANDI KARKANA, WEST MORGA,

ANDHERI (EAST), BOMBAY-69.

GET TOGETHER OVER

**KISSAN**

**SQUASH**

IT IS SO REFRESHING, DELICIOUS & VITAMIN RICH

TASTE THE SEAL FRUIT IN

**KISSAN**

**SQUASH**

# மாடத்திலும் கூடத்திலும்

கூடத்தில் நின்றி ருந்தான்
கோவலன் ! நிமிர்ந்து யர்ந்த
மாடத்தில் நின்றி ருந்தாள்
மாதவி ! குன்றின் தென்றல்
ஆடிற்றும் ! அவள்பட் டாடை
அசைந்ததாம் ! அவிழ வில்லை.
பாடிற்றும் வீணை வண்டு !
பாடினுள் மையல் கொண்டு.

விண்கொண்ட சுடரோன் தூங்க,
வெண்ணிலா விழிக்க, விண்மீன்
எண்கொண்ட குளிர்ந்த வெள்ளி
இரவிலே, இடையி லாதாள்
கண்கள்போய் அவனைத் தீண்ட,
காதல்நோய் கொண்டோள் வேண்ட,
எண்ணங்கள் ஏணி யாக
இருவரும் ஒருவ ரானுர் !

தோணிக்கோர் துடுப்பைப் போன்ருேன்
தொகைமலர் மாதை நோக்கி,
"ஆணுக்குப் பெண்ணே போர்வை ;
அணங்குக்கும் ஆணே போர்வை ;
மாணிக்க மணியே ! மாடே !
மலர்ந்தபூக் காடே !" என்ருன்.
நாணிக்கண் புதைத்த நங்கை
"நானென் மாடா?" என்ருள்.

"சுரதா"

*With*

*Best*

*Compliments*

*from*

# National Steel & General Mills

PATEL MARG,

GHAZIABAD.

**SUPPLIERS OF FORGINGS OF ALL TYPES.**

“ மாடென்று சொன்னேன், மின்னும்
மங்கைநீ பொங்கி விட்டாய் !

மாடென்னும் தமிழ்ச்சொல் லுக்கு
மற்றுமோர் பொருளு முண்டு.

மாடென்ருல் செல்வம், கண்ணே !
வருந்தாதே” என்ருன். பார்வைப்

பாடத்தின் தலைவி நெஞ்சம்
பாரியின் சுனையா யிற்று !

‘‘நிறைந்தநாள் நிலவே ! கேளாய்,
நின் அங்கம் கட்டித் தங்கம் ;

குறுந்தொகைப் பற்கள் முத்தின்
குடும்பமே ! நெருங்கி நீண்டு

நிறந்தரும் நினது கூந்தல்
நெடுந்தொகைச் செல்வ மன்ரு ?

சிறந்தசெம் பொன்னே ! மின்னே !
செந்தமிழ்ப் பண்ணே !’’ என்ருன்.

‘‘மா’’வென்ருன். மையல் தையல்
‘‘மாவென்ருல் பெருமை’’ என்ருள்.

‘‘மா’’வென்ருன். செங்கை மங்கை
‘‘மாவென்ருல் கருமை’’ என்ருள்.

‘‘மா’’வென்ருன். ‘‘குதிரை, வண்டு,
மாமரம்’’ என்ருள், ‘‘நீ, தே

மா வென்ருன். ‘‘நான்மான்’’ என்ருள்.
‘‘மானுக்கேன் ஆடை?’’ என்ருள்.

WITH

BEST

COMPLIMENTS

FROM

**SAVILES**
**PRIVATE LIMITED**

147, MAULANA AZAD ROAD,

BOMBAY-8.

Phone : 376377

BOMBAY : CALCUTTA

DELHI : MADRAS

BANGALORE

*With*

*Compliments*

*from*

**C. J. SHAH & CO.**

29, MANGALDAS ROAD,

BOMBAY-2.

Telephone : 312845

Telegram : DRUGSALES

DEALERS IN DRUGS

AND

PHARMACEUTICAL

CHEMICALS

"அடிப்படை மானங் காக்க
உடுத்துகின் றேமே யன்றி,

உடையொடு பெண்ணே ஆணே
உலகினில் பிறப்ப தில்லை!

இடையிலேற் பட்ட தே இவ்
வழக்கமென் றெடுத்துக் காட்ட,

இடைதனில் ஆடை கட்டிக்
கொண்டுளேன்" என்றாள் கோதை.

மாடத்தை விட்டு, மையல்
வீரனும் வீணை மாதும்

கூடத்தை அடைந்தார். ஆங்கே
குலவினார் நிலவில்! "எங்கோ

ஓடிப்போய் விட்ட தேஎன்
ஒளிஇதழ் வண்ணம்!" என்றாள்.

"தேடிப்பார் விழியில்" என்றான்.
சிவந்தவள் சிரிக்க லானாள்.

"ஆராத இயற்கை என்னும்
அவாநமக் கில்லை என்றால்,

வேரோடும் காத லேது?
வினாவிடை விளக்க மேது?

தேரோடும் பூம்பு காரின்
செல்வமே! தேனே! மானே!

நீரோடும் பொன்னி யாறே!
நீஇன்றேல் எனக்கே தின்பம்?"

"பலர்புகழ் மதியே! நின்னைப்
பார்க்கநிம் மதியே! நெய்தல்

நிலம்வளர் கடலே! மின்னும்
நின்விழி கடலே! முன்னோர்

வலஞ்சுழித் தெழுதி வைத்த
வளர்தமிழ் எழுத்தே!" என்றான்.

சிலந்திநூல் இடையாள் கன்னம்
சிவந்தது நாணத் தாலே!

SAGAR Ships between 1400 and 3800 D. W. Tonnes at your disposal for quick movement of your cargoes on West Coast and the adjacent trade of India.

**THE MERCHANT STEAM NAVIGATION CO. PVT. LTD.**

**and**

**THE AFRICANA COMPANY PRIVATE LTD.**

289/93, Narsi Natha Street,
Masjid Bridge, Bombay-9.

Tele : 323825/26 Gram : 'CMFLAG' Telex : 2335

# விதியை வெல்ல முடியுமா?

விதியை எவராலும் வெல்ல முடியாது என்பது ஒரு கட்சி.

மனிதன் மனம் வைத்தால், விதியையும் வென்றுவிட முடியும் என்பது இன்னொரு கட்சி.

இந்த இரண்டு கட்சிகளில் எது சரியானது என்பதை, நாம் சற்று சிந்தித்துப் பார்ப்பது பயனுடையதாய் இருக்கும்.

முதலாவது, விதியை நாம் எதற்காக வெல்ல வேண்டும்?

வாழ்வில் நமக்கு நேர்கிற இன்பங்கள், துன்பங்கள் ஆகிய இரண்டுமே, விதியின் விளைவுகள் தாம் என்று கூறப்படுகிறது.

விதியின் பயனாக, வாழ்க்கையில் நமக்கு இன்பங்களே வந்துகொண்டிருக்குமானால், அந்த விதியை மாற்றுவதற்கு நாம் ஒரு நாளும் விரும்பமாட்டோம்.

துன்பங்கள் நம்மை வந்து சூழ்ந்து கொள்ளும்போதுதான், அவற்றிற்கு மூல காரணமாய்க் கருதப்படுகிற விதியை வெல்வதற்கு நாம் ஆசைப்படுகிறோம். விதியை வெல்வது எப்படி என்னும் சிந்தனையில் ஈடுபடுகிறோம்.

ஆனால் அதற்கு முன்னதாக, விதி என்றால் என்ன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

விதை என்பது காரணம். மரம் என்பது காரியம்.

முருங்கை விதையை மண்ணில் புதைத்து தண்ணீர் ஊற்றினால், முருங்கை மரம்தான் முளைக்கும். புங்கமரம் முளைக்காது.

விதைக்கு ஏற்ற மரம் முளைப்பது இயற்கை. அந்த இயற்கைக்குத்தான் விதி என்று பெயர்.

நாம் நல்ல செயல்களைச் செய்தால், வாழ்க்கையில் நமக்கு நன்மைகள் ஏற்படுவது இயற்கை. தீய செயல்களைச் செய்தால், தீமைகள் ஏற்படுவது இயற்கை. இந்த இயற்கைக்குத்தான் விதி என்று பெயர்.

நமது நற்செயல்களும் தீச்செயல்களும் காரணங்கள். அவற்றால் விளையும் நன்மைகளும் தீமைகளும் காரியங்கள். காரணகாரியங்களுக்கு இடையே உள்ள பிரிக்க முடியாத தொடர்புக்குத்தான் விதி என்று பெயர்.

கீரை விதையை விதைத்தால், ஒரு சில நாட்களுக்கு உள்ளேயே நாம் கீரை பரித்துச் சாப்பிட்டுவிடலாம். ஆனால் நெல்லை விதைத்தால், அது அறுவடையாகி வீட்டுக்கு வரப் பல மாதங்கள் பிடிக்கும்.

அதே போல, நாம் செய்கின்ற நற்செயல்களிலும் தீச் செயல்களிலும், உடனடியாகப் பலன் கொடுப்பவைகளும் உண்டு; மிக நீண்ட காலம் சென்று பலன் கொடுப்பவைகளும் உண்டு.

உடனடியாகப் பலன் கிடைக்கும்போது, "நாம் செய்த இன்ன செயலுக்காகத்தான் இன்ன பலன் கிடைத்திருக்கிறது" என்பது நமக்கு விளங்கிவிடும். மிக நீண்ட காலத்துக்கு அப்பால் பலன் கிடைக்கும்போது, "நாம் செய்த இன்ன செயலுக்காகத்தான் இன்ன பலன் கிடைத்திருக்கிறது" என்பது நமக்கு விளங்கமாட்டாது.

அப்படி விளங்காத பலன்களைத் தாம் நாம் அதிருஷ்டம் அல்லது துரதிருஷ்டம் என்ற பெயரால் குறிப்பிடுகிறோம்.

கலைச்செல்வி
இராம. மணிமேகலை

**With**

**Best Compliments**

**from**

# BOMBAY ANDHRA TRANSPORT CO.

1/3, BHANDARI STREET,

BOMBAY-3.

**Transport throughout**

**MAHARASHTRA & ANDHRA**

நாம் எப்போதோ செய்த ஒரு தவருன செயலின் விளைவு, இப்போது துரதிருஷ்ட வடிவத்தில் வந்து நம்மைப் பீடிக்கிறது. அந்த துரதிருஷ்டத்திலிருந்து நாம் எப்படித் தப்புவது?

சில நோய்கள் வருவதற்கு முன்ஞல், அந்த நோய்களுக்கான சில அறிகுறிகள் நம்மிடத்தில் தென்படத் தொடங்கும்; அம்மை நோய்க்கு முன்ஞல், கடுமையான காய்ச்சல் ஏற்படுகிற மாதிரி !

அதேபோல, துரதிருஷ்டம் வருவதற்கு முன்ஞல், அதற்கான சில அறிகுறிகள் நம்மிடத்தில் தென்படத் தொடங்கும்.

விதி நம்மைப் பிடித்து ஆட்டிவைக்கிறது என்கிறேம். அது நம்மை எப்படிப் பிடிக்கிறது?

அது நம் உயிரைப் பிடிப்பதில்லை. உடலையும் பிடிப்பதில்லை. விதி நம்முடைய உள்ளத்தைத் தான் பிடிக்கிறது. நம்மைப் பிடித்து ஆட்டி வைப்பதற்கான ஒரு கைப்பிடியாக, அது' நம்முடைய மனத்தைத்தான் பயன்படுத்திக் கொள்கிறது.

அந்த விதி நமக்கு அதிருஷ்டத்தைத் தரக்கூடியதாய் இருந்தால், நம்முடைய புத்தியை அது நல்ல வழியில் திருப்பிவிடுகிறது; நம் உள்ளத்தை அது நல்ல வழியில் திருப்பிவிடுகிறது. நம் உள்ளத்தில் அது நல்ல எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது.

விதி நமக்குத் துரதிருஷ்டத்தைத் தரக்கூடியதாய் இருந்தால், நம்முடைய புத்தியை அது தீய வழிகளில் திருப்பிவிடுகிறது. நம் உள்ளத்தில் அது தீய எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது.

எனவே, நம் மனமானது தவருன பாதைகளில் செல்லுமாஞல், கெட்ட எண்ணங்கள் நமக்கு ஏற்படுமாஞல், நமக்கு துரதிருஷ்டம் வரப்போகிறது என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தெரிந்துகொண்டு நம் மனம் போன போக்குப்படியே நாமும் போய்க்கொண்டு இராமல், அந்த மனத்தை நல்ல வழிகளில் திருப்ப வேண்டும். உள்ளத்தில் கெட்ட எண்ணங்களுக்கு இடங்கொடாமல், நல்ல எண்ணங்களையே எண்ண வேண்டும். அப்படி எண்ணிஞல், நமக்கு வரப்போகும் துரதிருஷ்டத்திற்கு நாம் ஆளாகி விடாமல் தப்பித்துக்கொள்ளலாம்.

ஆஞல், நம்முடைய மனம் தவருன பாதையில் செல்கிறது என்பதை நன்கு அறிந்தும், அதைச் சரியான பாதையில் திருப்பிக்கொள்ள முடியாதவர்கள் தாம், மக்களில் பெரும்பாலோராய் இருக்கிருர்கள். அவர்களால் விதியை ஒரு நாளும் வெல்ல முடியாது.

மனம் தவருன பாதையில் செல்லத் தொடங்கியவுடனே, அதை விழிப்போடிருந்து திருத்திக்கொள்பவர்கள், விதியைக் கட்டாயம் வென்றுவிடுவார்கள்.

விதியை வெல்வதற்கு இதைக் காட்டிலும் எளிதான வழி இன்னென்று இல்லை. *



**With Best Compliments**
**from**

# P. RAMALINGAM

26, BHANDARKAR ROAD,

BOMBAY-19.

**With Best Compliments**
**from**

# SURENDRA SUNDERLAL & CO.

1st Floor, Govind Chowk,

M. J. Market,

BOMBAY-2.

# பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

பம்பாய்-22.

## நாடக விழா–1970

### நேஷனல் தியேட்டர்ஸ் – சென்னை

அளிக்கும்

1–1–70 வியாழன் : துரோணர்

2–1–70 வெள்ளி : காடகமுத்தரையன்

3–1–70 சனி : சாணக்கிய சபதம்

4–1–70 ஞாயிறு : ஆட்சி பீடம்

இடம்: ஷண்முகானந்தா கலை அரங்கு.

"BUT MEN MUST KNOW,

THAT IN THIS THEATRE OF MAN'S LIFE,

IT IS RESERVED ONLY FOR GODS

AND ANGELS TO BE LOOKERS ON"

— FRANCIS BACON —

ADVANCEMENT OF LEARNING

From :- TATA CHEMICALS

## கதைச் சுருக்கம்

# துரோணர்

மதுரை திருமாறன்

வெற்றியின் இமய உச்சி — புகழ் மிக்க பெருவாழ்வு — தருமத்தின் சிறப்பு — இப் பண்புகளுக்கெல்லாம் உருவம் அமைத்துக் காட்டுவது துரோணரின் வரலாறு.

மருமகனாகிய பார்த்தனைப் பயன்படுத்தி அவனது புகழையும், அதே நேரத்தில் பண்பையும் மறந்து நின்ற அவனது மாமனாகிய துருபதனுக்கு நட்பின் அறத்தை உயர்த்தியும், உணர்த்தியும் காட்டினார்.

வெல்லப்பட்ட துருபதன் வேள்வி ஒன்றினை வேதியராகிய யஜர் மூலம் நடத்தி வேள்வித் தீயில் துரோணரைக் கொல்ல திரிஷ்டத்துய்மன் என்ற மகனையும், விசயனை வெல்ல திரௌபதி என்ற மகளையும் பெறுகிறான். தன்னுடைய அழிவுக்காகவே பிறந்து வளர்கின்ற திருஷ்டத்துய்மனை மாணவனாக ஏற்று, அவனுக்கு விற்பயிற்சி அளிக்கிறார் துரோணர். இடையில், கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் பகை மூண்டு இறுதியில் குருக்ஷேத்திர செறுக்களத்தில் போர்த் தீயாகப் பற்றிப் பரவுகிறது. வசையில்லாத இசை பெற்றவன், குற்றமற்ற வெற்றி பூண்ட வீரன், மரம் தவிர்ந்த அறத்தின் ஆணி— தூயவராகிய துரோணர், முறை மறந்த கௌரவர்களின் பக்கம் நிற்பதா ? இது தருமமா ?

இந்த மருமத்திற்கு விளக்கம் மேடையின் திரை பிரிந்ததும் தெரியும்.



## SHIAVAX C. CAMBATA & CO. PRIVATE LTD.

42, M. Karve Road, Bombay-20 (BR).

**STEVEDORES**

**CUSTOM HOUSE AGENTS**

**SHIP CHANDLERS**

**BONDED WAREHOUSES**

**COLD STORAGES**

Cable : CAMBATA

Phone : 292169




# காடக முத்தரையன்

மதுரை திருமாறன்

## கதைச் சுருக்கம்

பல்லவப் பரம்பரையின் வரலாற்று அடித்தளத்தின் மீது எழுப்பப்பட்ட கற்பனை மாளிகையே காடக முத்தரையன். கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பல்லவத்தின் மணிமகுடம் தரிப்பது யாரென்பது குழப்பமான பிரச்னையாகி விட்டது. அந்நேரத்தில் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனை அரியணை ஏற்ற உறுதுணையாக நின்றவன் இந்நாடகத் தலைவன், காடக முத்தரையன்.

இரண்டாம் நந்திவர்மன் பட்டம் ஏற்றபொழுது அவன் வயது வராத சிறு பிள்ளை. நாட்டுத் தலைமைக்கு ஏற்பட்ட போட்டியில் சித்திரமாயன் என்ற சிற்றரசன் பாண்டியன் அரிகேசி பராங்குச மாறவர்மனிடம் புகலடைந்து படை திரட்டினான்.

பாண்டியப் படை வலியுடன் பல்லவத்தை எதிர்த்த சித்திரமாயனைத் தன் மதி வலியால் காடகமுத்தரையன் வெல்லும் வகைசெய்த விளக்கமே நாடகம்.

பாண்டியன் நந்திபுரக் கோட்டையை முற்றுகையிட்டபொழுது அதனை முறியடித்த நேரத்தில்தான் பல்லவனின் மற்றொரு எதிரியாகிய இரண்டாம் விக்ரமாதித்தன் கச்சியைக் கைப்பற்றி, தன்னுடைய வெற்றிக் கொடியை உயர்த்தினான். இந்த நிகழ்ச்சியில் காஞ்சி மாநகரம் சாளுக்கியன் கையில் வீழ்வதற்குக் காரணமாயிருந்தவன் காடக முத்தரையன்தான் என்பது ஆச்சர்யம் !

சரித்திரமும், கற்பனையும் கைகோர்த்து நடைபோடும் இந்நாடகம் தமிழ் மேடையின் தரமான ஓவியம் என்பது மட்டும் நேற்றைய சரித்திரமும் அன்று, நடக்க முடியாத கற்பனையும் அன்று; ஆனால் உண்மை !



*With Best Compliments*
*from*



# SUDARSANA AGENCY

**RAW MATERIALS AND GENERAL STORES SUPPLIERS,**
**MANUFACTURERS AGENTS AND DISTRIBUTORS.**

4/211-A, KIRTI KUNJ. DEODHAR ROAD,
MATUNGA, BOMBAY-19.
Phone : 474906

*With the Best Compliments*
*from*

# G. DAS & COMPANY PRIVATE LTD.

NAVSARI CHAMBERS,
OUTRAM ROAD,
BOMBAY-1.

**Distributors for :**

**ORIENT PAPER MILLS LIMITED — AMLAI.**

Telephone : 263921
262449

Gram : "PUNANIRMAN"

# சாணக்கிய சபதம் ★

மதுரை திருமாறன்

## கதைச் சுருக்கம்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென்னகத்திலே பிறந்த சாணக்கியன் வடபுலத்து மன்னன் தனநந்தனல் அவமதிக்கப்பட்டு சபை நடுங்கும் குரலில் வஞ்சினம் செய்கிருன்.

"என்னை அவமதித்த இம்மன்னனையும், ஏன், நந்தர் குலத்தையே—வேரறுத்து, சந்திரகுப்தனை இம் மகத நாட்டின் மாமன்னனக்கி, அம் மௌரியனின் அவைக்களத்தில் தளபதி ராட்சசனையும், மந்திரி மகேந்திரனையும் கைதியாக நிறுத்தி, மண்தட்டிலே உணவு கொள்ளச் செய்வேன். இச் சூளுரையைச் செயலாக்கி முடியும் வரை அவிழ்ந்த குடுமியை முடியமாட்டேன்." —இது தான் சாணக்கிய சபதம்.

அதுபோது, உலகையே வென்றுவரும் அலெக்ஸாந்தரின் வீரக் குரல் கேட்டு அவரிடம் சாணக்கியன் சந்திரகுப்தனையும் அவனுடைய தோழன் விராடனையும், படை உதவி வேண்ட, பாஞ்சாலம் நோக்கி அனுப்பி வைக்கிருன். படை உவிதக்குக் கைம்மாருக பார் முழுமைக்கும் பேரரசன் தாம்தான் என்பதை ஏற்கும்படி அலெக்சாந்தர் கட்டளையிட, அதனை ஏற்க மறுத்த சந்திரகுப்தன் பாதாளச் சிறையிலே அடைபடுகிருன். ஆனல், சிறை மீட்சியிலே உதவுகிருள் செல்யூகஸ் நிகேடர் அருமை மகள் ரோஷனு !

இந்த நேரத்தில்தான் அவள் மௌரியனின் நெஞ்சம் கவர்ந்தவளாகி விடுகிருள். உதவி கேட்டுப்போன இடத்தில் ஊறு விளைந்திட்டாலும் சாணக்கியனின் அரசியல் சூழ்ச்சி பாஞ்சால மன்னன் போரஸை சந்திரகுப்தனின் பக்கத் துணையாகக் கொண்டு வந்து சேர்க்கிறது.

விளைவு; பாடலிபுத்திரப் போர்க்களத்தில் நந்தன் வீழ்ந்து மடிகிருன். ராட்சசனும் மகேந்திரனும் சிறைப்படுகிருர்கள். சபதம் அநேகமாக நிறைவேறுகிறது; ஆனல்,.........

உணவிட்ட மண் தட்டு, ராட்சசனின் இராஜ தந்திரத்தால் பொன் தட்டாக மாறுகிறது. ஆயிரமாயிரம் மக்கள் ராட்சசனின் விடுதலையை வேண்டுகின்றனர். மக்கள் கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது,

ரோமானிய ரோஜா ரோஷனு ஆரிய மகன் சந்திரகுப்தன் மணப்பதைக் கேட்டு அவள் தந்தை செல்யூகஸ் வெகுண்டெழுகிருன். ஆனல் அவள் அண்ணன் ஆண்டியோகஸ் அவளுக்கு உதவுகிருன்.

ராட்சசன் ஆட்சியை மீண்டும் கைப்பற்ற சூழ்ச்சி நடத்துகிருன்.

அவனுடைய சூழ்ச்சி, சந்திரகுப்தனின் ஆட்சி, ரோஷனுவின் காதல் வேட்கை என்னவாயிற்று ?

மேடை விடை கூறும்.

*With Best Compliments*

*from*

# SRI PALANIAPPA TRANSPORTS

## (FLEET OWNERS and TRANSPORTS CONTRACTORS)

"SWASTIK CHAMBER",

CARNAC ROAD, BOMBAY-1.

**Booking Offices :**

1) K. Z. SITARAM BUILDING,
PALTON ROAD,
BOMBAY-1.

2) UNIT NO. 1-A, BLOCK NO. AB,
NANDANVAN INDUSTRIAL ESTATE,
NAVPADA, THANA.

Telephone :
Office :
(i) 262398
(a) 264464
(b) 592273

Grams : TRANSPAL

ஆட்சி பீடம்

★

வித்துவான் வே. லட்சுமணன்

## கதைச் சுருக்கம்

கச்சியின் காவலன், இரண்டாம் நந்திவர்மன்,

பல்லவ அரசுக்குத் தானே பதவித் தலைவனாகத் துடிக்கும் மாவீரன் மாயவர்மன்.

பல்லவ மணி முடியைக் காக்கப் பாடுபடும் தளபதி, உதயகுமாரன்.

பெண்ணாசை காரணமாக கயற்கண்ணி என்ற குடிமகள் மேல்
கடைக்கண் வைத்துத் தன் கோப்பெருந்தேவியையும் மகள்
நீலவேணியையும் பிரிந்து உழலும் பாண்டியன் அரிகேசரி மாறன்.

தன் தம்பி காலவர்மனுக்கு மகளை மணமுடிக்க விழையும்
பாண்டி மன்னனின் தேவி.
ஆனால், அன்னையின் ஆசைக்கு மாற்றாக, பல்லவத் தானைத்
தலைவன்பால் நெஞ்சம் பறிகொடுத்த பாண்டிய இளவரசி நீலவேணி.

இவர்கள் இருவருக்கும் புகலிடம் தந்த சக்தி தாசர்.

பாண்டிய ராணியின் தம்பி கோழை கால வர்மன்.

பல்லவ அமைச்சர் மகேந்திரர்.

தென்முடி நாட்டு நாக நாதர், அவருடைய துணைவர்கள்.

மருதவாணர், சங்கமித்திரன்.

காலவர்மன், நீலவேணியின்பால் கொண்ட ஒருதலைக் காமத்தைப் பயன் படுத்தி, பாண்டிய நாட்டுப் படைத்துணையுடன் பல்லவச் செங்கோலைப் பற்ற மாயவர்மன் புரிகின்ற சூழ்ச்சி, ஆடும் நாடகம்.

இடையில், எதிர்த்து நின்ற தளபதி உதயகுமாரனின் வீரம்.

நடுவில் வந்து நிகழ்ச்சிப் போக்கைத் திசைதிருப்பும் இரும்புக் கவசம் போர்த்திய மர்ம மனிதனின் சாகசம்.

—இவையனைத்தும் கொண்டு திகழும் எழில் பின்னல்
“ஆட்சி பீடம்”


BR FILMS'
ITTEFAQ
EASTMANCOLOR
directed by
YASH CHOPRA
produced by
B. R. CHOPRA

# நேஷனல் தியேட்டர்ஸ், சென்னை

## கலைக் குழு

**நடிகர்கள் :**

ஆர். கே. சித்தன் □ ஹெரான் ராமசாமி □ கே. பி. ஆர். கோபால் □ கே. என். ராஜா □ தங்கராசு □ விஸ்வநாதன் □ பக்கிரிசாமி □ எஸ். டி. சேரன் □ டி. பதி □ ரெங்கராஜன் □ எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி □ எம். நாராயணன் □ எஸ். பி. நாகராஜன் □ வி. பி. ராமசாமி □ எம். கணேசன் □ சுடலை □ முத்துராமலிங்கம் □ ருத்ரபதி □ பி. வி. மாணிக்கவேலு □ வரதராஜன் □ கே. எஸ். நாராயணன் □ கலியுகம் □ மாஸ்டர் சுகுமார்

**நடிகைகள் :**

டி. ஆர். லதா □ சோபனு □ விஜயகுமாரி □ டி. சாந்தா □ இந்திரா

**கதை, வசனம் :**

மதுரை திருமாறன் □ வித்வான் வே. லக்ஷ்மணன்

**நகைச்சுவை உரையாடல் :**

நெல்லை பி. சாரதி

**பாடல்கள் :**

இ. ரா. பழனிச்சாமி

**இசைக் குழு :**

பி. வி. மாணிக்கம் — ஆர்மோனியம் □ எஸ். பி. சக்திவேல் — தபேலா □ எஸ். சையது அலி — கிளாரினெட் □ சி. சிகாமணி — மாண்டோலின் □ பி. கணேசன் — தாளவாத்தியம்

**கலை :**

ஜி. தர்மராஜ்

**மேடை நிர்வாகம் :**

எஸ். ஏ. சிவராமன்

**காட்சி அமைப்பு :**

அம்பி அய்யர் □ ஏ. சுப்பிரமணியம் □ ரவீந்திரன் □ ரத்னம் □ ராஜேந்திரன் □ மாரியப்பன் □ ராஜமாணிக்கம் □ மாணிக்கம் □ பழனி □ முருகன்

**ஒலி-ஒளி :**

ஸ்ரீ சத்யசாயி எலக்ட்ரிகல்ஸ் ஏ. ஆர். சிங்காரம்

**ஒப்பனை :**

கண்ணன் □ எஸ். ஜி. தேவராசன் □ கதிர்வேலன் □ கே. மோஹன் ராவ் □ கிருஷ்ணன்

**உடை :**

எம். குருசாமி □ பி. வி. மாணிக்கவேலு

**புகைப்படம் :**

ஆர். பி. சாரதி

**நிர்வாகம் :**

ஜி. விஸ்வநாதன்

**உரிமை :**

இலங்கேஸ்வரன் **ஆர். எஸ். மனோகர்**

With Best Compliments

from

# FILCCO PRIVATE LIMITED

SEWRI FORT ROAD,
SEWRI (EAST)
BOMBAY-15.

Phone : 443076

**INSULATION MATERIALS :**

FIBRE GLASS, MINERAL WOOL,
CALCIUM SILICATE BLOCKS AND POWDER,
ASBESTOS POWDER, ASBESTOS FIBRE,
85% ASBESTOS MAGNESIA BLOCKS AND
POWDER HARDSETTING COMPOSITION.

**Contact :**

# EARTHFIELD PRODUCTS (BOMBAY)

22-24, Kazi Sayed Street,
BOMBAY-9 (BR).

Telegram : "EARTHFIELD"

Telephone : 329912
329714



'கலைமணி' — 'நடிகமணி' — 'இலங்கேஸ்வரன்'

திரு. ஆர். எஸ். மனோகர்

# நாடக மனோகரம்



இன்றைய நாடகமேடை வளர்ந்துள்ளதா?

இந்தக் கேள்விக்குரிய பதில் இரு தரப்பாகப் பிரிந்து கலை, இலக்கிய விமர்சகர்களிடையே பட்டிமண்டபச் சூடு பிடித்துள்ளது. ஆர்தர் மில்லர், டென்னிஸி, வில்லியம்ஸ், காஃப்மேன், ஆஸ்பர்ன் ஆகியோர்களைப் போல எழுதுவதுதான் நாடகமென்று ஒரு கட்சியும், சிலப்பதிகாரத்திலே உள்ள நாடகக் குறிப்புகள், மனோன்மணீயம் ஆகியவற்றைப் பெற்றுள்ள தமிழர்களுக்குப் புறப்பகுதிகள் அதிகப்பிரசங்கித்தனம் செய்யத் தேவையில்லை என்ற எதிர்ச் சார்பும் துவந்த யுத்தம் செய்வதைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை.



நிழலுக்கு உருவம் தேவை என்றாலும் நிழல் உருவமாகிவிட முடியாது. அது போலத்தான் நாடக வளர்ச்சிக்கு அபிப்பிராயங்கள் அவசியமாக இருந்தாலும் அபிப்பிராயங்கள் மட்டுமே நாடகக்கலை ஆகிவிட முடியாது.

''நாடகங்கள் பார்க்கப்படும் காவியங்கள் என்ற வகையைச் சேர்ந்தவை. கருத்துக்களைப் புத்தகங்களில் விளக்குவதைவிட நாடகங்களாக நடித்துக் காட்டினால் பார்ப்பவர்களின் மனதில் என்றும் நன்றாகப் பதிகின்றன. இதனால்தான் காளிதாசன், பாஸன், பவபூதி போன்ற மகாகவிகள் நாடகங்கள் எழுதி இருக்கின்றனர். மேடைகளில் நடிக்கப்படும் நாடகங்கள் மனதைக் கெடுக்காமல் மனநிலையை உயர்த்துவனவாக இருக்க வேண்டும். பார்ப்பவர்களின் மனதில் பரபரப்பூட்டும் உணர்ச்சிகளை எழுப்பிவிடாமல் அவர்கள் மனதில் சாந்தி நிலவச் செய்ய வேண்டும்.''

எளிய முறையில் கூறப்படுகின்ற கனமான விஷயம். காஞ்சித் தவமுனிவர் காமகோடி பெரியவர்களின் திருவாக்கல்லவா இது? ஆசிரியன், நடிகன், பார்ப்பவன் மூவ



ருக்கும் நாடகக் கலையில் உள்ள பொறுப்பை இதைவிட எப்படித் தெளிவாகக் கூறமுடியும். வளர்ந்து வரும் இன்றைய விஞ்ஞான யுகத்தில் தொழிற்புரட்சி என்ற பிரளயச் சுழலில் சிக்கி, லௌகீக உயர்வும், ஆன்மீக வீழ்ச்சியும் அடைந்து வாழ்க்கையே பிடியற்றுப் போன வகையில் கொள்கைகள் குழம்பி நிற்கின்ற மனித குலத்தின் அவலம், நிராசை இவற்றை மட்டுமே அகோர வியாபகமாக்கிக் காட்டி, குறிக்கோளற்ற இருளில் சிக்க வைப்பதுடன் நாடக நயம் என்ற வியாக்கியானம் நம்முடைய மண்ணிலே முளைவிடுமா என்பது ஐயப்பாட்டுக்குரியதுதான். இது துளசிமாடத்திலே 'குரோட்டன்ஸ்'வளர்க்கிற போலிப் புதுமையாகத்தான் முடியும். இந்த நாட்டின் வரலாற்றில் எழுந்த இலக்கியங்கள் 'ஈயைக் கருட நிலைக்கேற்ப' எழுதப்பட்டவை. கற்பனை என்ற உருவத்தின் உயிர்ச் சுடராக நின்று ஒளிரும் தத்துவங்கள் வாழ்க்கை அலைகளுக்கு நடுவே மிதந்து செல்லும் நாவாயைப் போலவும், யதார்த்தத்தினின்று விலகாமல் ஆதர்சத்தைத் தொடுவதாகவும் — அநித்தியத்தை நித்தியமாக்குவதாகவும் அமைந்துள்ளவை. "கவியெனக் கிடந்த கோதாவரி" என்று கம்பன் கூறுவானேயானால் அவன் இப் பேருண்மையை நன்றாக உணர்ந்துதான் கூறுகிறான்.

ஆகவே, ஓரினத்தின் நாடகக்கலை அந்த மண்ணின் மணத்தையும், வளத்தையும் பிரதிபலித்தால்தான் வாழமுடியும், வளரமுடியும். மனித உருவங்கள் வேறுபட்டாலும், மனங்களின் அவசங்களும், ஆசாபாசங்களும், விகாரங்களும் ஒன்றுதான் என்பதை உணர்ந்துவிடின் உருவ அமைப்புகள் அர்த்தமற்றவை ஆகிவிடுகின்றன.

புராணங்களையும், பழைய வரலாறுகளையும் கிழவன் பேச்சாக எண்ணிப் புறக்கணிக்கிற உலகின் இறுமாப்புத் தலைமுறையில் இவற்றிலுள்ள கற்பனைகளின் பின்னணியில் பொலிகின்ற நித்திய சத்தியத்தைப் பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் பெற்றியோடு மேடைக்கலையின் மேன்மையாக்கி வருகிறார் ஒருவர் என்றால் அவர் தொண்டைப் பாராட்டுவதற்கு நமக்கு உரிமை கிடையாது;



அப்பணிக்கு வணக்கம் செலுத்துவதுதான் நமது கடமையாக இருக்க முடியும்.

அத்தகு வணக்கத்திற்குரிய கலைஞர்தான் திரு. ஆர். எஸ். மனோகர் அவர்கள்.

சேலம் மாவட்டத்திலுள்ள "பெரிய" ஊர் நாமக்கல். ஆமாம், அந்த ஊர் ஆஞ்சநேயரைப் பார்த்துள்ளவர்களுக்கு இது ஓரளவு புரியும். இது இன்னும் பெரிய ஊர். காந்தி யுகத்தின் பேரொளியைச் சங்கநாதம் செய்து முன்னே வரவேற்ற கவிஞரின் பாடல்களைச் சுவைத்தவர்கள் நன்ருக அறிவார்கள். மேலும், அது மிகப் பெரிய ஊர். உபநிஷத விற்கை முனிவனின் உயர் மாண்பையும், சிர நரம்பை மீட்டி, தன் இன்னிசையால் இமயத்து உறையும் இறைவனை இன்புறுத்திய இலங்கை வேந்தனின் மாட்சியையும், மௌரிய பொற்காலப் பேரரசு இந்நாட்டின் வரலாற்றில் நிலவ அடிகோலிய சாணக்கிய அந்தணனின் வஞ்சினச் சாதுரியத்தையும், சிங்கநாதமாக முழங்கி, கருத்தைக் கரம் வழியே செலுத்திக் களிமண்ணை எழில் உருவாக்கும் விந்தையுடன் செயல் புரியும் மனோகரின் மேன்மைகொள் மேடைக்கலையைக் கண்டு களித்தவர்கள் இவ்வுண்மையைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நாமக்கல் மண்ணிலே பிறந்து நாமக்கல் பெருமானின் திருநாமத்தோடு வளர்ந்த லக்ஷ்மி நரசிம்மன், 'இலங்கேஸ்வரன்' மனோகர் ஆன பரிணும வாழ்வு நெறி உயர் நடிகனுக்குரிய தகுதிகள் சேர்ப்பவை. கல்வியோடு இயைந்த கலை—பொன் மலர் நாற்றமுடைத்து என்ற புளித்துப்போன உவமை இருக்கட்டும்,— அறிவுள்ள செல்வந்தனைப் போல் ஓர் அபூர்வ வியக்தி. அந்த அபூர்வம் மனோகரிடம் சாதாரணமாக இருப்பதின் லாபம் தமிழ் நாடகமேடையின் தவமென்று சொல்வதை உயர்வு நவிற்சியாகக் கொள்ளக்கூடாது; உள்ளதை உரைக்கும் உண்மை.

பட்டக் கல்வியையும், பண்பு சேர்ந்த கலைத் திறமையையும் ஊட்டி, பச்சையப்பன் கல்லூரி தன் பழமையான மரபை மேலும் தெளிவாக்கிய விளைவாக திரு மனோகர் அவர்கள் பாரதத்தின் புராண வரலாறுகளில் பொதிந்து கிடக்கும் கலையையும், அறிவையும், கொழிகொள் தத்துவப் பேருண்மைகளையும் கண்வழிச் செல்வங்களாக்க முனைந்தார். இந்த முனைப்பு 'நேஷனல் தியேட்டர்'ஸாக முளைவிட்டு, கடந்த பதினைந்து ஆண்டுகளில் கவின்சேர் கலைக்கூடமாக வளர்ந்துள்ளது.

பணச் செல்வமும், பகட்டுப் பேருமே இன்றைய நாடக உலகில் செல்லும் சொல்லாக இருக்கின்ற நிலையில் பழைமை, லட்சியம், படாடோபமற்ற அடக்கம்—இவை எதிர் நீச்சல், கை சளைப்புகளாகி விட வாய்ப்புக்கள் ஏராளம். எதிர் வேகத்திலும் தளராமல், இலட்சியத்திலும் சோராமல் இயங்க, செல்வமும் செல்வாக்கும் தவிர்க்க இயலாத, தேவைகள் என்ற உணர்வே மனோகரின் திரையுலகப் பிரவேசத்திற்குக் காரணமாக இருந்திருக்க முடியம். அணி,பணி மலிந்த படைப்புக்களை (Costume Play) தொழில் முறையில் அரங்கிட்டு வெற்றி காண்பது என்பது அதிகப் பொருள் செலவும் ஆபத்தான பணயமும் கொண்டது. இந்த ஆகாததை ஆக்கிக் காட்டும் பெருமை மனோகரின் தனி உரிமை.

ஈழம் இதய நிறைவுடன் அளித்த "இலங்கேஸ்வரன்", தமிழகம் பாராட்டி சிறப்பு செய்த "கலை மணி," "நடிக மணி", தமிழ் நாடு சங்கீத நாடகக் கழகம் கௌரவித்து அளித்த கேடயம் ஆகிய 'குடையும்' கவரியும்' மனோகரின் மங்காத கலைப் பணிக்கு ஆற்றிய கைம்மாறு. உழவனின் நன்றி வேண்டிப் பருவ மழை பொழிவதில்லை. ஆனாலும் 'மாமழை போற்றுதும்' என்று பாடிப் பெருங்குரலிட்டுத் தொழுவதும் பண்பார்ந்த இனத்தின் உயர் மரபுதானே.

'கலை மணி,' 'நடிக மணி,' 'இலங்கேஸ்வரன்,' மனோகரின் கலை, 'நேஷனல் தியேட்டர்ஸ்' என்ற பெயருக்குப் பொருத்தமான தேசிய அரங்கத்தின் திருவார் தொண்டு ஒரு நாடக மனோகரம்.

—'வேணு'







## In India a tradition of cordial hospitality awaits you at

# RITZ CHAIN OF HOTELS

Designed for gracious living, our hotels provide luxurious and beautifully decorated air-conditioned apartments, each with radio, telephone and attached bath. The highest standards of efficient and courteous service awaits you at our hotels. Choicest continental and Indian cuisine.

Firpo's
CREDIT CARD HONOURED

RITZ HOTEL BOMBAY
RITZ HOTEL HYDERABAD
HOTEL METROPOLE MYSORE
RITZ CONTINENTAL HOTEL (Under Construction) CALCUTTA

AIRLINES HOTEL BOMBAY
RITZ HOTEL COONOOR
HOTEL KRISHNARAJASAGAR MYSORE
FIRPO'S RESTAURANT (Established Since 1917) CALCUTTA







Service Advtg. Studio

*With Best Compliments*

*from*

**MOHAMMADI SIZING WORKS**

236, 4th NIZAMPURA, BHIWANDI,
THANA.

**Cotton Yarn Sizers**

WITH COMPLIMENTS

OF

**A**

**WELL-WISHER**

# மழை தரும் பாடம்

கமலா சங்கர்

தமிழர் சரிதை முழுவதையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் சங்க இலக்கியங்களில் தலைசிறந்த நூல் புறநானூறு. அது பேசுகின்ற இரு பெருஞ் செய்திகளில் தலையாயது படை; மற்றொன்று கொடை. இக்கொடையின் சிறப்பினைக் குறித்து 'கழைதின்யானையார்' என்ற ஒரு புலவர் மிக அழகாகப் பாடி இருக்கின்றார்.

*ஈயென இரத்தல் இழிந்தன்(று) :*
*அதனெதிர்*
*ஈயே னென்னல் அதனினும் இழிந்தன்று*
*கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று :*
*அதனெதிர்*
*கொள்ளேன் என்னல் அதனினும்*
*உயர்ந்தன்று*

[இதன் பொருள்:— ஒருவரிடம் சென்று தனக்கு ஒன்று வேண்டுமென்று இரப்பது மிக இழிவானது. நம்மிடம் ஒருவர் ஒன்று கேட்குங்கால் தரமாட்டேன் என்று சொல்வது அதைவிட இழிவானது. எல்லோர்க்கும் நம்மிடமுள்ளதை 'எடுத்துக்கொள்ளுங்கள்'—என்று கொடுப்பது உயர்ந்த குணம்; நமக்கு ஒருவர் தர வருங்கால் வேண்டா என மறுப்பது அதனினும் உயர்ந்ததாம்.]

இப்பாடலில் சொல்லமைதியும், பொருளாழமும் ஒன்றையொன்று விஞ்ச முயலுவதினைக் காண்கிறோம்.

*"கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று*
*கொள்ளேன் என்னல் அதனினு*
*முயர்ந்தன்று"*

என்ற கருத்தை வெளியிடும் புலவனின் மிக உயர்ந்த உளப்பாங்கு சங்கத் தமிழனின் தனிச் சிறப்பென்ற நினைவிலே பெருமிதமும் அடைகின்றோம். கொடையின் தன்மையை இங்ஙனம் வியத்தகு முறையில் சித்தரிக்கும் இக்கருத்தைக்கூடப் பின்னும் அழகுபடுத்துகின்றார் கம்பர். அதிலும், இக்கருத்தைச் சற்றே திருத்திக் காட்டுவது மிதிலைவாழ் பாமர மக்களெனில் நம் வியப்பு பல மடங்கு அதிகரிக்கின்றது.

தென்சொல் கவியின்பமெனத் திகழும் சீதைக்கு ஏற்ற கணவன் கோசிகன் பின் சென்ற கோசலைக் குரிசிலே என மிதிலைவாசிகள் முடிவு கட்டி விடுகின்றனர். அவ்வள்ளல் மனத்தினை விரைவிலே காண விழைகின்றனர். அவர்கள் மனத்துடிப்பினை அறியாத ஜனகனோ சீதைக்கும் இராமருக்கும் இடையில் நெடுவில் ஒன்றைக் கிடத்திவிடுகின்றான். இது பொறுக்காத மக்கள் அரசனைப் பலபடி ஏசலாகின்றனர், அவற்றுள் ஒன்று,

*வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்*
*கொள்ளென முன்பு கொடுப்பதையல்லால்*
*வெள்ள மணத்தவன் வில்லை எடுத்திப்*
*பிள்ளை முன் இட்டது பேதமை என்பார்*

என்பதாகும்.

[பொருள்: உதாரண குணமுடைய சனகன் சீதையின் விவாகத்தைச் செய்ய விரும்பியவனாக இருப்பானேயானால் இந்த இராமபிரானைக் கண்டவுடன் முதலில் தானேகொள் என்று சொல்வதற்கு முன்னால் சீதையைக் கன்னிகாதானம் செய்து கொடுத்துவிட வேண்டும். அதை விட்டு

With

Best

Compliments

from

# The Britannia Biscuit Company Limited

BOMBAY CALCUTTA

DELHI MADRAS

விட்டு சிவனுடைய வில்லைக் கொண்டுவரச் செய்து அதை நாணேற்றி வளைக்குமாறு இச்சிறுவன் முன் வைத்தது மடத்தனம் என்று சொன்னார்களாகும்]

'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது' என்று காட்டியது புறநானூறு. கம்பர் கவியோ கொள்ளென்று சொல்வதற்கும் முன்னால் கொடுத்தே விடுவது நல்லதென்று அப்பாடலிலும் 'நகாசு வேலை' செய்து காட்டு கிறது.

இத்தகைய முறையிலே ஈகையறத் தைக் கைக்கொள்வதற்குக் காரணம் கற்பிப் பதேபோல் கணக்காயர் மகனார் நக்கீரனார் என்பவர் புறநானூற்றிலே ஒரு பாட்டு எழுதியிருக்கின்றார் :

**தெண்கடல் வளாகம் பொதுமையின்றி**
**வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்**
**நடுநாள் யாமத்துப் பகலுந் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்**
**உண்பவை நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பம் எனினே தப்புன பலவே**

என்று வருவது அப்பாடல்.

உலக முழுவதும் ஒரு குடையில் ஆளும் அரசன் ஆயினும் சரி, இரவும் பகலும் தூங் காமல் ஒரு சாண் வயிற்றுக்காக இரை தேடும் வேட்டுவனாயினும் சரி, இருவருக்கும் ஒரு நாழி அரிசி உண்பதற்கும், இரண்டு முழ வேட்டி உடுப்பதற்கும் போதும். மற்ற எல்லாத் தேவைகளும் இந்த இரண்டு எல்லை களில் நிற்போருக்கும் ஒரே படித்தாய் அமைந்துள்ளன. ஆகவே செல்வம் மிக வுடைய அரசன் உணர்வதொன்றுண்டு. பெற்ற செல்வத்தின் பயன் பிறருக்கு எடுத் தளிப்பதே. நாமே அனுபவிக்க வேண்டு மென்று நினைத்தால் அவை கை கழன்று போய்விடும் — என்பது இப்பாடலின் பொருளாகும்.

எனில், வள்ளன்மையைக் கைக் கொள்ளாவிடில் நம் செல்வமெல்லாம் வீணாகிவிடுமே— ஈயார் தேட்டை தீயார் கொள்வரே—என்ற அச்சத்தாலே கொடை என்ற அறம் அமைக்கப்படுகின்றது. புறநானூற்றிலே. இவ்வாறு அச்சத்தினாலே ஈகையறத்தைக் கைக்கொள்வதில் — எண் ணுங்கால் — அவ்வறமே சிறப்பிழந்திடுதல் கண்கூடு. இஃதுணர்ந்த வள்ளுவர் ஈகை யறத்தின் இலக்கணத்தை எடுத்தோத வருங்கால், பழம்புலவர் கருத்தினைத் திருத் திக் காட்டுவதேபோல் பாட்டமைக்கின்றார். அஞ்சியஞ்சிக் கொடையைக் கைக்கொள் ளல் வேண்டா; மற்றவருக்கு ஒன்றை எடுத்தளிக்குங்கால் நம்மையுமறியாமல் நம் அடியுள்ளத்தில் ஓரானந்தம் தலைதூக்கவில் லையா? அந்த உவகையை நினைத்துப் பார்த்து அதனை அடைவதற்கேனும் வள் ளன்மையைக் கடைப்பிடித்தல் ஆகாதா? என்று வினவுவதுபோல் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானுடரை நினைத்து,

**''ஈத்துவக்கு மின்ப மறியார்**
**கொல்தாமுடைமை**
**வைத்திழக்கும் வண் கணவர்"**

அச்சத்தை அடிப்படையிலே கொண்ட ஈகையை வற்புறுத்தும் புறநானூற்றுப் பாட்டையும், உள்ளத்து உவகையை அடிப் படையில் கொண்ட கொடையைக் காட்டு கின்ற திருக்குறளையும் அயலயல் வைத்துப் பார்த்தால் பின்னதில் கருத்தின் உயர்வு, ''திருக்குறள் என்றால் திருக்குறள்தான்!'' என்று நம்மைப் பெருமிதமடையச் செய்யும். அந்தத் திருக்குறள் மணியிலும் தன்னலக் கோடு ஒன்று கீறப்பட்டுள்ளதைக் காண் கின்ற கண் கம்பருக்கே அமைந்திருந்தது. ஆம்! "ஈத்து உவக்கும்'' என்று குறிப் பிடுகையில் எதையோ ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்குகின்ற ஒரு வியாபாரத் தொனி சொல்லளவிலேனும் ஏற்படுகின்ற தல்லவா? கைம்மாறு வேண்டாக் கடப்பா டுடைய கார்முகத்துடன் ஒப்பிடப் படுகின்ற கொடையிலே இந்தக் கொடுக்கல் வாங்கல் இடம் பெறுவது கம்பர் கண்ணை உறுத்தி யிருக்க வேண்டும். எனவேதான் தக்கதோர்

With

Best

Compliments

from

THE

# MANDARIN

## CHINESE RESTAURANT

DHANRAJ MAHAL,

APOLLO BUNDER,

BOMBAY-1.

செவ்வியில் இத் திருக்குறள் சொற்றொடர்களை மாற்றியமைத்து கருத்தழகை மேன்மைப் படுத்துகின்றார். கோசல நாட்டில் மழை பொழியும் காட்சியை ஆற்றுப் படலத்திலே கம்பர் வருணிக்கின்ற பாடலைப் பாருங்கள் :

''புள்ளிமால்வரைப் பொன்னெனல்
நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி யுள்ள வெல்லா முவந்தீயு மவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே"

என்று வரும் இப்பாடலின் பொருள்: [பெருமையுடைய பெரிய இமயமலை பொன்மயமாக இருத்தலைப் பார்த்து ஆகாயமானது அந்தப் பொன்னைக் கவ்வி யெடுக்கும்படி வெள்ளிமயமான தோண்டுங் கருவியை அதன் நடுவில் வீழ்த்தினாற் போலத் தோன்றும்படி கொடுக்குமாறு நம்மிடம் இன்னும் என்ன பொருள் எங்கு உள்ளது என்று ஆராய்ந்து தம்மிடத்துள்ள பொருளையெல்லாம் மனமுவந்து தருகின்ற உண்மைக் குணமுடைய மிகச் சிறந்த வள்ளல்களைப் போல மேகங்கள் மழைத் தாரைகளை வழங்கின] என்பதாம்.

மேகம் கோசல நாட்டு வள்ளல்களைப் போல மழை பொழிந்தது என நயம்பட உவமிக்கும் கம்பர், அவ்வள்ளல்களுக்கு அமைக்கின்ற அடைமொழியாக உள்ளி, உள்ளவெல்லாம் உவந்தீயும் என்ற சொற்களை நிறுவுகின்றார். திருக்குறளிலே நாம் கண்ட ஈத்துவக்கும் என்ற சொற்றொடர் கம்பன் கையிலே அப்படியே தலைகீழாக மாறி உவந்து ஈயும் என வந்திருத்தல் தெளிவு. இங்கு உள்ளி என்றால் வள்ளுவர் காட்டும் உவகையையோ, மற்ற இம்மைக்கும் மறுமைக்கும் தம் வள்ளன்மை உதவக்கூடிய பயனையோ நினைத்துப் பார்க்க — என்று கொள்ளல் ஆகாது. ஏனெனில், அவ்வள்ளியோர் உவமையாவதும் கைம்மாறு கருதாத கார்முகத்துக்கன்றோ! எனவே, தம்மிடம் அள்ளி அளிக்க இன்னும் என்ன இருக்கின்றது என்று துருவிப்பார்த்து 'புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க' சிபியைப் போல் இல்லையென்றுரைப்பாருக்கு இல்லையென்றுரையா இதயம் கேட்ட கர்ணனைப் போல, விற்றெடுத்துக் கொள்ளுமாறு தன் தலையையே ஒரு புலவனிடம் நீட்டிய குமணனைப் போல, வாமனனாய்த் தன்பால் மூவடி மண் வேண்டி வந்த திருமாலின் வஞ்சமுணர்ந்தும்

''ஒப்புரவினால வருங்கேடெனில்
ஃதொருவன்
விற்றுக் கோள் தக்க துடைத்து''

என்ற தமிழ் மறைக்கிணங்கத் தன்னையே பலியாக்கிக்கொண்ட மகாபலிச் சக்கரவர்த்தியைப் போல, அவர்கள் கைக்கொண்ட ஒப்புயர்வற்ற வள்ளன்மையைத்தான் கம்பர் அவ்வாறு குறிப்பிடுகின்றார். ஏதோ ஒரு உவகையை எதிர்பார்த்து மற்றவருக்கு அளிக்கும் பரிசை விட, முதலிலேயே மனமகிழ்ந்து உள்ளவெல்லாம் அள்ளியளிக்கும் — உவந்தீயும் அழகினாலே குறளில் காணும் வியாபாரத் தொனி மறைந்திடுவது கண்கூடு.

இறுதியிலே கூறப்பட்ட இம்மாவலியின் சரிதை கம்பன் கவிதையிலே உருவாகுங் காலை பல பொய்யாமொழிகள் அவண் ஊடாடி ஒளி விடுகின்றன. அங்கு கம்பர் கைப்பட்டப் பொன்னாகிய கருத்து வேறொன்றும் காணலாம். உண்மையின் உண்மையிலக்கணத்தை உணர்த்த வந்த மாவலி வழங்க நின்ற தன்னை விலக்க முயன்ற ஆசானிடம் உறுசினம் மிக மிக,

''எடுத்தொருவருக் கொருவர்
ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக் கழகிதோ தகவில்
வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோய் உனது
சுற்றம்
உடுப்பதூஉ முண்பதூஉ மின்றி
விடுகின்றாய்''

என்று இடித்துரைக்கின்றார். இந்த வசைமொழி,

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்
உடுப்பதூ உம்
உண்பதூ உம் இன்றிக் கெடும்''

என்ற வள்ளுவர் குறளை ஏற்றிருப்பது வெள்ளிடை மலையாம். ஆனால் குறள் கூறுவது

*With Best Compliments*
*from*

**RATIONAL ART & PRESS PRIVATE LIMITED**

951/A, NEW PRABHADEVI ROAD,

BOMBAY-25 DD.

Phone : 451261 * 451262 ⊙ Grams : 'TRADEARTS'

*With Best Compliments*
*from*

**CHANGANLAL LAXMICHAND & SONS**
**Cloth Merchant**

368, GOVERDHAN GALLI,

MULJI JETHA MARKET,

BOMBAY-2.

**Dealers In**

**MAFATLAL GROUP MILLS**

பொருமையினுல் வருகின்ற கேட்டினையே, 'அழுக்காருமை' என்ற அதிகாரத்தின் கீழ்த் தான் இப்பொய்யாமொழி அமைந்துள்ளது. பஞ்சமா பாதகங்களில் ஒன்ருன ஈதல் மறுத் தலை இக்குறள் கடிவதாகத் தெரியவில்லை. பொருமையினுலே ஒருவர் மற்ருெருவருக்குக் கொடுப்பதைத் தடுக்கலாகாது என்பதுதான் குறள் காட்டும் நெறி.

'ஈவது விலக்கேல்' என்பது ஒரு முதல் விதி. பொருமையினுல் விலக்காதே—என்று சொல்லும்பொழுது அம்முதல்விதி கொஞ்சம் தளர்கின்றது. பொருமையால் தடுக்காதே என்ருல் மற்றபடி தடுக்கலாம் என்று ஆகி விடுகின்றதல்லவா ?

அலுவலகத்துக்குக் குறித்த நேரத்துக்கு வரவேண்டும் என்பது ஒரு முதல் விதி. காலங் கடந்து வந்தவர் தக்க காரணம் காட்ட வேண்டும் என்பது அடுத்த விதி—ஆயின், எதேனும் காரணம் காட்டி விட்டால் காலங் கடந்து வரலாமென்று ஏற்பட்டு விடுகின்றது அல்லவா ? அதுபோலத்தான் இதுவும். ஈகை அறத்தைத் தடை செய்பவர் எல்லோ ரும் தங்கள் உள்ளத்தின் ஆறுதலுக்காகத் தாங்கள் செய்வது நியாயம் போல் ஏதாவது ஒரு காரணம் கற்பித்துக்கொண்டு, 'நான் பொருமையினுல் தடுக்கவில்லையே' என்று சொல்லிக்கொண்டு விடலாம். இது மாடனு மனத்தின் இயற்கை.

ஏன் ! மகாபலியின் வரலாற்றையே எடுத்துக்கொள்வோமே ! சுக்கிராச்சாரியார் அவன் கொடுப்பதைத் தடுக்கக் காரணம் தன் மாணுக்கன்மாட்டு அன்பினுலே அல்லவா, எதிர் நின்ற குறளுருவின் வஞ்ச முணர்ந்தவர் அவர். எனவே விழிப்பாக இருக்குமாறு வற்புறுத்த நினைத்து கொடை யைத் தடுக்கலானுர். வாமனனிடம் அவருக்கு யாதொரு பொருமையும் இல்லை. ஆயினும் அழுக்காற்றினுல் மட்டுமன்றி எக்காரணத்தா லும் கொடுப்பதால் கொடுப்பவனுக்குக் கேடு வரினும், ஏற்பதால் அடைவோனுக்கு அழிவு வரினும் பாத்திரம் தகுதியற்றதாயினும்—எப்படியிருப்பினும் சரி — கொடுப்பதை விலக்குவது கொடிது என்பார் மாவலி. ஈகை யென்பதே ஓர் அறம். அறத்தைச் செய்வ தால் அழிவு வரும் என்ற கூற்று அறிவுக்கும் பொருந்தவில்லை. எனவே, 'கொடுப்பது அழுக்கறுப்பான்' எனக் குறளின் கூற்றிலே உள்ள அழுக்காறு என்ற சொல்லை மெல்ல அகற்றி விட்டு 'கொடுப்பது விலக்கு கொடி யோய்' என்று குறுக்கி விடுவதால் கம்பன் கவிதை, மாற்றறியாத செழும் பசும் பொன்னுய் மிளிர்கின்றதன்ருே ! ✻



WITH BEST COMPLIMENTS

FROM

# CHHANULAL BALKISANDAS

GAUMUKH GALLI, M. J. MARKET,
BOMBAY-2.

**Dealers In**

**MAFATLAL GROUP MILLS**

*With Best Compliments from*

# SHREE DIGVIJAY CEMENT COMPANY LIMITED

**Registered Office :** SIKKA (Gujarat)

*Manufacturers of :*

**'LOTUS' BRAND PORTLAND CEMENT**
**and**
**ASBESTOS CEMENT PRODUCTS**

*Cement Works :*
SIKKA, AHMEDABAD, BOMBAY

*Asbestos Cement Works :*
DIGVIJAYNAGAR,
AHMEDABAD-5.

# எழுபது ஆண்டுகளுக்கு முன்...!

சென்னையில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் காலியாயிருந்த நிலங்களில் கீற்றுக் கொட்டகைகளை அமைத்து அதில்தான் நம்மவர்கள் நாடகங்களை ஆடி வந்தனர். அவைகளில் பெரியதானதொன்று, அக் காலத்தில் நான் இப்போது குடியிருக்கும் வீட்டிற்கு சுமார் 150 கெஜ தூரத்திலிருந்த வெளிநிலத்தில் கட்டப்பட்டதாகும். அதற்கு முன்பு அந்த இடம் ஒரு நவாப்பின் தோட்ட மாக இருந்தது. பிறகு அத்தோட்டம் அழிந்து காலி நிலமாயிற்று. என்னுடைய 7, 8 வயது பிராயத்தில் "பாபன்ஸ் பிராட்வே" யில் இருந்த பள்ளிக்கூடத்திற்கு அவ்வெளி நிலத்தின் வழியாகத்தான் போகவேண்டி யிருந்தது. அக்கொட்டகை, மண் சுவர்கள் நாலு புறமும் எழுப்பி, மேலே மூங்கில்களா லும் ஓலைகளாலும் கூரை போடப்பட்டிருந் தது ஞாபக மிருக்கிறது. உள்ளே மேடையும் இரண்டு மூன்றடி உயரம் மண்ணால் கட்டப் பட்டதாகும். ஜனங்கள் உட்கார்ந்து பார்க்க சில நாற்காலிகளும் பெஞ்சுகளும் போட்டிருந்தது. மற்ற இடமெல்லாம் வெறும் காலி தரைதான். இதன் பேரில் ஒரு பக்கம் ஆண்களும் மற்றொரு பக்கம் பெண்களும் உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பார்கள். இந்தக் கொட்டகையில் நெறுக்கி உட்கார்ந் தால் சுமார் 600 பேர் உட்காரக் கூடும். இது தான் அக்காலத்தில் தமிழ் நாடகங்கள் ஆடப் பட்ட பெருங் கொட்டகையாகும். மேற் சொன்னதைப் போன்ற ஓலைக் கொட்டகை கள் சிந்தாதிரிப்பேட்டையில் ஒன்றும், திரு வல்லிக்கேணியில் ஒன்றும் இருந்தன. இவைகள் இரண்டும் கொஞ்சம் சிறியவை. கல் சுவற்றின் மேல் ஓடு போட்ட கூறையை உடைய நாடகசாலை செங்காங் கடையிலிருந் தது. அது பிற்காலம் இடிக்கப்பட்டு தற் காலம் பேசும் படங்கள் ஆடும் செலக்ட் டாக்கீஸாக மாறி விட்டது. திருநெல்வேலி யில் இப்படிப்பட்ட ஓலைப் பந்தலால் ஆக்கப் பட்ட நாடகசாலை ஒன்று அக்காலத்தில் தீப் பற்றி எரிந்து கொஞ்சம் ஜனச் சேதமும் விளைந்தபோது கவர்ன்மெண்டார் மூங்கில் ஓலைகள் முதலியவைகளால் நாடகம் ஆடும் சாலைகள் ஏற்படுத்தக்கூடாதென்று உத்தரவு செய்து அக்காலத்தில் முன்பிருந்த நாடகக் கொட்டகைகளை எல்லாம் பிரித்து விட்டனர்.

— 15—4—1953

**நாடகத் தந்தை**

**பம்மல் சம்பந்த முதலியார்**

*with*
*best compliments*

*from*

OSP

# மிலட்டூர் வளர்த்த மென்கலை

கலைத் தொண்டர் ஈ. கிருஷ்ணய்யர்

பாகவத மேள நாட்டிய நாடகத்தை மற்றச் சாதாரண நாடகங்களிலிருந்து வித்தியாசப் படுத்திக் காட்டும் பல அம்சங்களில் முக்கியமானது. முன்னதில் நாடகச் சுவையுடன், கவிதைச் சுவை, ஆடல் சுவை, பாடல் சுவை, அபிநயச் சுவை ஆகப் பல கலைகளின் சுவைகள் ஒருங்கே பிணைக்கப்பட்டிருப்பதாகும். நாட்டிய நாடகம் முழுவதிலும் குறிப்பிடத் தக்க லயப் பிடிப்பு ஊடுருவிப் பாய்ந்திருப்பது மற்றொரு விசேஷமாகும். காதல் புரிவதோ, வெறுப்பதோ, சந்தோஷ முறுவதோ, துக்கமடைவதோ, கோபம் கொள்வதோ, சண்டையிடுவதோ, சிரிப்பதோ—அழுவதோ, மூர்ச்சையாவதோ. இறப்பதோ எல்லாம் தாளக்கட்டுடன் தாம் நடிக்கப்படும். சுருங்கச் சொல்லின், வரவேற்புக்கான சிறு வணக்கம் முதல், வெகு சிக்கலான சந்தர்ப்பங்கள் வரை, பேச்சு, பாட்டு, நடிப்பு இவைகளின் ஒவ்வொரு துணுக்கும் லயத் தத்துவத்தைப் பிரதிபலிப்பதாயிருக்கும்.

கலைத்தரம் குன்றியிருப்பதாகச் சொல்லப்படும் இப்போதைய நிலைமையில் கூட, மிலட்டூர் கலைக் காட்சியில் குறிப்பாய் மூன்று அம்சங்கள் ரசிகர்களின் கவனத்தைக் கவரத்தான் செய்கின்றன. அவையாவன: 1. சம்பிரதாய சுத்தமும், நயமும் உருக்கமும் கொண்ட கர்னாடக சங்கீதச் சிறப்பு; 2. சுருதியுடன் சேர்ந்து ரஞ்சகமாய் ஒலித்த நட்டுவாங்கப் பொலிவு; 3. நாட்டிய சாஸ்திரத்தை நன்கு தழுவி விரிவாய் விளக்கப்பட்ட அபிநயப் பொழிவு. ஆடல்களுக்கான காலடி ஜதி வேலைப்பாடுகளும் ஏராளமாய்த்தான் இருக்கின்றன. ஆனால், அவைகளுடன் “நிருத்தக்கை” என்ற எழிற் கைகளையும், உடல் நிலைகளையும் பலவிதமாய்ச் சேர்த்து, பரத நாட்டியத்துக்கு விசேஷமான அடவு ஜாதிகளை ஆடுவதில் மாத்திரம் பொலிவு தென்படவில்லை. அதில் இக்கால நடிகர்களுக்குப் போதிய பயிற்சி யில்லை போலும். சதிர் நாட்டியத்திலுள்ளது போன்று ஏராளமான அடவு ஜாதி ஆடல்கள் நாட்டிய நாடகத்திற்கு அவ்வளவு அவசியமில்லை. ஆயினும் அழகுக்காக அவசியமாய் வைத்துக்கொள்ள வேண்டிய அடவு ஜாதி ஆடல்களை நாடகப் பாத்திரங்களின் இயல்புக்குப் பொருத்தமாய், போதியவாறு, பயிற்சி செய்துகொண்டு வசீகரமாய் ஆடலாம். ❋



*With Best Compliments*

*from*

# CLOTH TRADING COMPANY

GAURAJ GALLY, M. J. MARKET,

BOMBAY-2.

**Stockists of :**

**AMBICA GROUP OF MILLS**

Telegram : "NAYAJAMANA" Telephone : 319340



**"TAMIL NADU IS AHEAD OF ALL OF THE STATES IN SPREADING CULTURAL ACTIVITIES AND RIGHTLY IT IS THE MOST PEACEFUL STATE OF INDIA"**

# M. I. ANSARI

**(A Small Scale Industrialist)**

BHIWANDI, DIST. THANA.

MAHARASHTRA STATE.

# VIJAY TANKS & VESSELS PRIVATE LTD.

**Designers & Constructors of :**

CRYOGENIC & REFRIGERATED TANK

FLOATING ROOF TANKS

CONE ROOF TANKS

PRESSURE VESSELS

SELF SUPPORTING VESSELS

STAINLESS STEEL CYCLONES, KETTLES & VESSELS

DRUMS & BARRELS

★

*Registered Office :*
**HAJI ADAM MANSION,**
**HOMJI STREET,**
**BOMBAY-1.**

**Grams : "STRUCTSHOP"**
**Phone : 3 1 7 6 7 4**
**Telex : 011-2045**

*Madras Office :*
**4, HABIBULLA ROAD,**
**T. NAGAR,**
**MADRAS-17.**

**Grams : "PANSTEEL"**
**Phone : 4 4 4 7 1 7**
**Telex : 041-518**

★

*Mulund Works :*
(Structural Fabrication)
AGRA ROAD, MULUND,
BOMBAY-80.
Phone : 5 9 3 0 0 8

*Powai Works :*
(Drums & Barrels)
SAKI VIHAR LAKE ROAD,
POWAI, BOMBAY-72.
Phone : 5 8 1 7 8 2

*Madras Works :*
(Drums & Barrels)
643, TIRUVOTTIYUR
HIGH ROAD,
TIRUVOTTIYUR,
MADRAS-19.
Phone : 5 1 6 5 4



**Printed by K. Murugiah at Sevak Press, 4 & 5, Shalimar Industrial Estate, Bombay-19 (Phone: 47 36 85), on behalf of The Bombay Tamil Sangham, Bombay-22.**